

திசையறியா பட்டம்



ஒரு நாளும் 3 அப்பாக்களும்

நவம்பர் 27 - டிசம்பர் 03, 2011 November 27 - December 03, 2011 பக்கங்கள் -28 25.00

# சுடர் ஒளி

THE SUDAROLI

வாரமலர்

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA



## சிவப்பு மஞ்சள்

ஒரு நினைவு வெயில் பதிவு

## பூதங்களை இலக்கு வைக்கும் போர்க் குற்றங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Johnson's baby®

"ஆனந்த பொழுதுகள்"

உங்கள் குழந்தைகளுடன்
ஆனந்தமாய் கழித்த தருணங்களை
புகைப்படங்களாக
டிசம்பர் 15ம் திகதிக்கு முன்னர்
எமக்கு அனுப்பிவையுங்கள்.



வெற்றியாளர்களாகும் 12 பேருக்கு

ஒரு வருடத்திற்கான
ஜொன்சன்ஸ் பேபி தயாரிப்புகள்*

மற்றும்

வெற்றிபெறும் புகைப்படங்கள்
2012 ஜொன்சன்ஸ் பேபி
கலண்டரிலும் இடம்பெறும்

த.பெ.இல. 352, கொழும்பு

happysnappy@johnsonsbaby.lk

JOHNSONS BABY
SRI LANKA

நானும்
என்ட செல்லமும்
எப்பவும்
Johnson's baby®
யோடதான்

மனம் நிறைந்த நத்தார்; மகிழ்ச்சியுடன் வரவேற்போம்

விசேட பரிசுகள், சலுகைகள் மற்றும்

விசேட விலைக்கழிவுடன்

நயமான விலைகளில் அபான்ஸ் வழங்குகின்றது

அபான்ஸ்
நத்தார் சேல்

வட்டி இல்லை அதீத மகிழ்ச்சி

TOSHIBA
Leading Innovation >>>

REGZA

32" டொஷிபா
LCD தொலைக்காட்சி
24PB1
ரூ.33,990

24" டொஷிபா
LED தொலைக்காட்சி
24PS10 - ரூ.38,990
DVD பிளேயர் இலவசம்

32" டொஷிபா
LCD தொலைக்காட்சி
32HV10
ரூ.44,990
LG டுவல் சிம் கைப்பேசி இலவசம்

32" டொஷிபா
LCD தொலைக்காட்சி
32PB10
ரூ.49,990
LG டுவல் சிம் கைப்பேசி இலவசம்

32" டொஷிபா
LED தொலைக்காட்சி
32PS10
ரூ.82,990
LG டுவல் சிம் கைப்பேசி இலவசம்

40" டொஷிபா
FULL HD LCD தொலைக்காட்சி
40AV700EE
ரூ.85,990

வட்டியில்லா 12 மாத கொடுப்பனவு

வட்டி இல்லை ஜொலி அதிகம்

24 மணித்தியால அவசர சேவைகளுக்கு
அழையுங்கள்: 071 557557

பின்வரும் கடனட்டையாளர்களுக்கு வட்டியின்றிய மீள் கொடுப்பனவு முறைகள்
HSBC Standard Chartered BOC Nations Trust Bank Sampath Bank Commercial Bank HNB Seylan

அபான்ஸ் காட்சியறைகள் 365 நாட்களும் திறந்திருக்கும்

நாடெங்கிலும் 100 அபான்ஸ் விற்பனைக்கு பிந்திய சேவை நிலையங்கள்

*நிபந்தனைகளுக்குட்பட்டது

Abans

ARS GARDNER DIXON HALL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





"நான் பெற்ற செல்வம்!
நலமான செல்வம்!
தேன் மொழி பேசிடும்
சிங்காரச் செல்வம்!"

இதுவொரு சினிமாப் பாடல். இதனை எம்மவர் பல ரின் வாய்களும் அந்த நாட்களில் முணுமுணுக்கத் தவறியதில்லை. அதி காலை ஐந்து மணி வேளையில் எங்கள் தெருவில் உறு ரும் வண்டிச் சத்தத்தோடு அந்த இனிமை கலந்த பாடல் கலந்தொலிக்கிறது.

அந்த விடிகாலைப் பொழுதில் விரைவாகவும் சுறு சுறுப்பாகவும் தொழிலைத் தொடங்கும் அந்தப் பாட்டிசைக்கும் நகரசுத்திகரிப்புத் தொழிலாளியைப் பார்க் கிறேன். நாரத்து மலசலகூட அறைகளைச் சேர்த்து நிரப்பிய வாளிகளைச் சுமந்தபடி அவரது தள்ளுவண்டி கடகடவென சத்தமிட்டு நகருகின்றது.

பொலபொலவென விடியும்போது இந்தத் தொழி லாளி தனது வேலையை முடித்துக்கொண்டு வெற்றி உணர்வோடு வண்டியை உருட்டியவாறு திரும்பிக் கொண்டிருப்பார். அந்த மூடிய பெட்டி வண்டியின் மேல் கைப்பிடிக்கும் அருகே மஞ்சள், சிவப்பு, வெள்ளை நிறப்பூக்கள் குவிந்திருக்கும் வாசம் பரப்பும் தீத்தணல் கொண்ட சந்தனக்குச்சி ஒன்று புகைந்து கொண்டிருக்கும். மகிழ்ச்சியின் வெளிப்பாடாக அவ ரது வாய் குரலெடுத்துப் பாடுகின்றது. அந்தச் சினிமாப் பாடல் இனிமையானதுதான். அவரிடத்திலே மகிழ்ச்சி

இவர்களே உண்மையான சேவை யாளர்கள். இவர்கள் தான் இன்று நாட்டை சுத்தப்படுத்திக் கொண்டிருக் கின்றனர். என்பதை அரச அதிகாரிக் கும் அவரது நண்பருக்கும் தெரிவிப் பதற்காகவே யோகர்சுவாமிகள் அவர் களை அங்கே அழைத்துச் சென்றிருந் தார். என்பதை உணர்ந்தபோது அவர்கள் வெட்கம் அடைந்தனர்.




# மனிதர்களைத் தேடி..!

■ நெறந்தீவு மகேஷ்

குடிகொண்டிருக்கிறது.

யாழ்நகரத் தெருக்களில் அன்று இந்தக் காட்சி வழமையாக இடம்பெற்று வந்தது. வாளி மலசலகூடப் பாவனையில் இருந்த அந்தக் காலம் நகரத்தில் சுத்தத் திற்குக் காரணமான தொழிலாளர்களின் பணியோ அது.

தொழில் எதுவென்றும் அதுவே தெய்வம் என்ற வாக்குக்கு அமைவாக அவர்கள் தங்கள் தொழிலை நேசித்தார்கள். கடமையை விருப்போடு செய்தார்கள். நகரம் சுத்தம் செய்யப்பட்டது. அவர்களின் தொழி லால் மக்களின் நலம் பேணப்பட்டது. அதே வேளை யில் அந்தத் தொழில் தந்த வேதனையையும் சோதனை யையும் மகிழ்ச்சியோடு எதிர் கொண்டார்கள். அவர் கள் இல்லையெனில் நகரமே நாற்றமெடுக்கும் நரக மாகிவிடும். உண்மையான உழைப்பாளர்கள் அவர் களே.

ஒரு நாள் யாழ்ப்பாணத்து யோகர்சுவாமியவர் களைச் சந்திக்கவென அன்றிருந்த அரசாங்க அதிபர் ஸ்ரீகாந்தா அவர்கள் தம்முடன் ஓர் அமெரிக்கரையும் அழைத்துச் சென்றிருந்தார். அவர்களைக் கண்டதும் யோகர் சுவாமி அவர்களோ தன்னிடம் வந்திருப்பவர் அரசாங்க உயர் அதிகாரியென்றோ, அவருடன் கூட வந்தவர் வெள்ளையர் என்றோ மதிப்பளிக்கவுமில்லை. தடைக்கருகே வந்த அவர்களில் கவனம் செலுத்தவில்லை. அவரின் செய்கையால் ஸ்ரீகாந்தா அவர்கள் பயந்து நொந்து போனார். அவர்களுடன் எதுவுமே கதைக்கா மல் வெளியே வந்த சுவாமிகள் முற்றத்தில் நின்ற மரத்தடியில் தனியாக உட்கார்ந்தார். மனம் சோர்ந்து போனாலும் சுவாமி அவர்களுடன் பேசியே வேண்டு மென்ற ஆவலினால் அவருக்கே வந்த அதிபர், சுவா மியை நோக்கி "சுவாமி" என்றார் பணிவாக.

ஆனால் யோகர் சுவாமி அவர்களோ "இப்போது இங்கே ஏன் வந்தாய்? உன்னைப் பார்த்துக்கொண்டும் உன் கையெழுத்துக்காகப் பலர் காத்துக் கொண்டும் கச் சேரியில் இருப்பார்கள். போ! போய் முதலில் உன் வேலையைப் பார்! நான் சாமியில்லை. சாமியைப் பார்க்க வேண்டுமென்றால் என்னுடனே வா!" என்று சற்றுக் கோபமாகவே

ஸ்ரீகாந்தா பயந்து போனார். எனினும் சுவாமியின் வேண்டுகோளைத் தட்ட இயலாமல் அவரின் பின்னா கவே நடந்து சென்றார். அவர் அழைத்துச் சென்ற இடத்தைப் போய்ச் சேர்ந்தபோது, அங்கே அவர்கள் கண்ட காட்சி அவர்களை ஆச்சரியத்துக்குள்ளாக்கி யது.

"அதோ பார்! அவர்கள் தான் கடவுள்கள்" என்றார் சாமியார்.

அங்கே யாழ்ப்பாண நகரசுத்தி தொழிலாளர்கள் தாம் சேகரித்து வந்த மலசலகூட அழுக்குகளை அந்தக் கடலிலே கொட்டி வாளிகளைக் கழுவிக் கொண்டிருந் தார்கள்.




அண்மையில் வைத்திய அதிகாரி சிவதாஸ் அவர்களின் மகிழ்வுடன் எனும் நூல் வெளியீட்டு இலக்கிய நிகழ்வின்போது இதனை நினைவில் நிறுத்தி "செந்தொம் செல்வா" ஆறு இரு முருகன் அவரின் நினைவு கூர்ந்த உண்மைகளே இவை.

இன்று மகிழ்வைத் தொலைத்து வாழும் எங்கள் மக்களைக் காணுகின்ற போது அன்று மனிதர்களாய் சேவையா ளர்களாய் மகிழ்வுடன் வாழ்ந்த அந்த உன்னதத் தொழிலாளர்களைப் பார்த்து அதிசயிக்கின்றோம். பதவிகளிலும் அரசியல் அதிகாரங்களிலும் தம்மை உயர்த்திக் கொண்டுள்ள பலர் இன்று மனிதர்களாய் இல்லையெனப்தே துயரம் தரும் செய்திகளாகும்.

மனிதர்களையும் அவர்களின் சேவைகளையும் உணர்ந்த யோகர் சுவாமி அவர்கள் அன்று காட்டிய காட்சி இன்று இல்லை. எனினும் அத் தகைய உன்னதத் தொழிலாளர்களும் சேவையாளர்களும் எம்மத்தியில் இருக்க வேண்டும் என்ற ஆவல் மனிதர் களாய் வாழ விரும்புபவர்கள் மத்தியில் இருக்கிறது என்பது நிச்சயமானதே.

# ஏழைப் போராளியான கவிஞர் புவிலக்ஷி




வாழ்க்கை ஒரு போராட்டம் என்பார்கள். அந்தப் போராட்ட வாழ்க்கையில் வெற்றியும் தோல்வியும் இயல்பானதாகும். எனினும் அவை மூலம் பெறப்படும் வாழ்க்கைப் பட்டறிவு எம்மைப் புடமிடும் வகையில் வழிநடத்தத் தவறுமெனின் அதனால் பயனெதுவும் இல்லை. இந்நன்மையதான எமது வரலாறுகள் எமக்கு அதனையே கற்பிக்கின்றன. பல வகைப்பட்ட எதிர்பார்ப்புகளோடும் கனவுகளோடும் வாழ்க் கையை முன்னெடுக்கும் போது அவை தொலைவதும் சிதைவதும் எமது பாதையிலும் பயணத்திலும் எம்மைப் பயமுறுத்துகின்றன. வாழ்க்கையை சதுரங்க விளை யாட்டாகக் காணுகின்ற ஒரு கவிஞரின் வரிகள் இதோ!

தொலைந்துவிட்ட
கனவுகளின் முன்னால்
சிதைந்து போன துகள்களாய்
நான்...

கனவுகள் தொலைந்து போய் அவை தூள்தூளாகச் சிதைந்துபோக நானோ துயரத்தோடு வாழுகின்றேன் என்கிறார் கவிஞர்.

பணத்தோடு
ஒன்றிப்போன
சமூகவாழ்வில்
பகடைக் காய்களாய்
நாம்

பணத்தையே வாழ்வாகக் கொண்டு சமூகம் அதனுட னேயே ஒன்றிப்போய் விட்டது. அதனையே வாழ்வென் றும் அதனைப் பெற உழைப்பதே வாழ்வின் வழியென்றும் போற்றிப் பூசிக்கிறது. நாமோ பணமின்றிப் பரிதவிக்கும் பகடைக் காய்களாய் அந்தரிக்கின்றோம். என்கிறார் அவர்.

எதிரும் புதிருமாய்
காய்கள் நகரும்
போது அதை
எதிர்க்க முடியாத
ஏழைப் போராளியாகிறேன்
வாழ்க்கை எனும்
சதுரங்க விளையாட்டில்..!

சதுரங்க விளையாட்டில் ..! பகடைக் காய்களாய் எதிரும் புதிருமாய் காய்கள் நகருகின்றபோது, நகர்த்தப்படுகின்ற போது பணமில்லாதவனும் பணத்தையே வாழ்வாகக் கருதாதவனுமாகிய நானோ போராட்டம் நிறைந்த சூழலில் ஓர் ஏழைப் போராளியாகிறேன். என்கிறார் கவிஞர் பெரிய நீலாவணை ம.புவிலக்ஷி.

கரைதேடும் அலை எனும் கவிதைத் தொகுப்பிலிருந்து பெறப்பட்ட இக்கவிதைத் தொகுப்பின் சிறப்புக்கு எடுத்துக் காட்டாக நோக்கத்தக்கதாகும். கவிதைகள் எனக்குள் மண்டியிட்டுக் கிடக்கின்றன. அல்லது நான் கவிதைக்குள் கட்டுண்டுள்ளேனோ? என்ற சந்தேகத்தொனியோடு கருத் துரைக்கும் அவர் தனது புனைபெயரான புவிலக்ஷிக்குள் மறைந்திருப்பதாகத் தெரிகின்றது. அவரது கவிதை இலக் கியப் பயணம் தொடர வாழ்த்துகிறோம்.

■ மைதிலி தேவராஜா

படைப்பாளிகள் தங்கள் பிரசுரங்கள், வெளியீடுகள் தொடர்பான அறிமுகம் சுடர் ஒளி வார மலரில் வெளிவர விரும்பினால், அவற்றின் இரு பிரதிகளை கீழ் வரும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

சுடர் ஒளி வாரமலர்
கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 400 கடதாசிகளில் நல்லிணக்கம்

■ தம்பி

2000ஆம் ஆண்டிலிருந்து அமுலிலிருந்த சமாதான காலத்தை மீளாய்வு செய்தல் மற்றும் இறுதிக்கட்ட போரின் போது மீறப்பட்ட மனித உரிமைகள் பற்றிய விடயங்களை ஆராய்தல் போன்ற நோக்கங்களுக்காக அமைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு தன் இறுதி அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளது. பொது மக்களுக்கோ அல்லது சர்வதேச சமூகத்திற்கோ இது வரையில் பகிரங்கப்படுத்தப்படாத இவ்வறிக்கையின் நம்பகத்தன்மை குறித்து இது வரையில் யாரும் வாய்திறக்கவில்லை. ஜனாதிபதியினால் மட்டும், திரை மறைவில் வைத்து மறுவாசிப்பிற்குட்படுத்தும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்களை கொழும்பு ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது. இதைத் தவிர இந்த அறிக்கை பற்றிய வேறு எந்தத் தகவல்களும் வெளியாகவில்லை. இந்நிலையில், இலங்கையில் வழமையாக ஆணைக்குழுக்கள் வெளியிடும் அறிக்கைகளின் மாதிரிகளையும், அது கொண்டிருக்கும் விடயங்களையும் அடிப்படையாக கொண்டு முன் கூட்டிய அவதானிப்புக்களை வழங்கலாம்.

நடந்து முடிந்த போரின் விளைவுகளை, இராணுவத்தினரால் புரியப்பட்ட மனித உரிமை மீறல் குற்றங்களை அரசாங்கத்தின் பார்வையில் இவ் அறிக்கை பதிவு செய்திருக்கும் என நம்பலாம். அதாவது இறுதி நேர யுத்தத்தின் போது மேற்கொள்ளப்பட்ட கொடூர வன்முறைகள் மனிதாபிமான அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டன. புலிகளால் சிறை வைக்கப்பட்டிருந்த அப்பாவிப் பொது மக்களை உயிரோடு மீட்பதற்கான போரிலேயே இந்த அசம்பாவிதங்கள் நடந்து முடிந்தன. முழுக் கொலைகளையும் புலிகளே செய்தனர். இலங்கை இராணுவம் மிகவும் தூய மன நிலையோடுதான் இறுதிக் கட்டத்தில் போரிட்டது. அல்கெய்தா தீவிரவாதிகளிடம் சிக்கியிருக்கும் மக்களை அமெரிக்கப் படைகள் மீட்டிருந்தால் கூட இப்படியே செயற்பட்டிருக்கும் என்ற உதாரணங்களைக் கூட முன் வைத்திருக்கலாம். இப்படியாக 'சண்டையென்றால் சட்டை கிழியத்தான் செய்யும்' என்ற தோரணையில் அறிக்கை முடிவடையும்.

அடுத்து சர்வதேச குற்ற ஆதாரங்களில் தெரியும் படைவீரர்கள் குற்றம் நிரூபிக்கப்பட்டால் தண்டனைக்குள்ளாக்கப்படுவர். அவர்கள் சரத் பொன்சேகாவின் கையாட்கள் என்றும், அவரின் நேரடிக் கட்டளைகளின் பிரகாரமுமே இவ்வாறு செயற்பட்டனர் என்றும் கூறி முழுக்குற்றத்தையும் மகிந்த குடும்பத்தின் சமகால எதிரியான பொன்சேகா தலையில் கட்டிவிட முனையும். சரணடைய வந்த புலிகளின் தலைவர்களை சுட்டுக் கொல்லும் படி இவரே கட்டளையிட்டார் என்ற குற்றம் ஏற்கனவே நிரூபிப்பின் எல்லையில் நிற்கின்றது. இதனூடாக அது மேலும் உறுதி செய்யப்படலாம்.



கடத்திக் காணாமல் செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களை இராணுவம் கடத்தவில்லை. சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தற்போது சிறைகளில் இருக்கின்றனர். அவர்களை உறவினர்கள் நேரடியாகவே சென்று பார்க்க முடியும் எனவும் அளிக்கரப்படுத்தலாம். அவர்கள் விசாரணைகள் முடிந்த பின்னர் வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர் என்ற உத்தரவாதத்தையும், இதைத் தவிர இராணுவத்தினரால் வேறு எந்தக் கடத்தல்களும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அரசு நிலைப்பட்ட இந்த அறிக்கை வழங்க முனையும்.

இலங்கையில் இராணுவ துணைக்குழுக்கள் இப்போது இல்லை. அவர்களிடம் ஆயுதங்கள் இல்லை. எப்போதோ ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து விட்டனர் எனும் விதமான தாய்மை வாதத்தை முன்வைக்க விழையலாம்.

தமிழ் மக்கள் இந்நாட்டில் வாழும் சிறுபான்மை இன மக்கள். அவர்களுக்கு அரசியல் ரீதியான பிரச்சினைகளுண்டு. அவற்றுக்கு உள் நாட்டளவிலான தீர்வுகள் பேச்சுமூலமாக எட்டப்பட வேண்டும். வடக்கு, கிழக்கு தமிழருக்கு மட்டும் உரிய நிலப்பகுதியல்ல. இங்கு அனைத்து இனங்களும் இணைந்து வாழும் சூழ்நிலை ஏற்படுத்தப்படல் வேண்டும். இன்னோரான தொனியில் இனப்பிரச்சினைக்கான 'இறுதி தீர்வையும்' வெளிப்படுத்தும் இலங்கையரசின் அறிக்கையாக இது அமையலாம்.

வாறார்...வாறார்...வந்துட்டார்..
சர்வதேசப் பார்வையாளர்களுக்கும், புண்பட்ட தமிழ் நெஞ்சங்களுக்கும் பலம் மிகுந்த இலங்கை அரசிடமிருந்து ஒரு அரிய செய்தி. இது வரை காலமும் நீங்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்திருந்த நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை மாண்பு மிகு ஜனாதிபதி அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவரும், அதனைத் தயாரிக்க தகவல்களை வழங்கிய கனவான்களும் அறிக்கையை வாசித்துப் பாடமாக்கி முடித்தவுடன், நீங்கள் அனைவரும் வணங்கிக் கொள்ளக் கூடிய வகையில் மும்மொழியிலும் வெளியிடப்படும். இந்தத் தகவலை உங்களுக்கு சுடச்சுட வழங்குபவர் இந் நாட்டின் வெளியுறவுச் செயலாளரான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்.

பாவப்பட்ட மீட்பாற்றவர்களே!

நீங்கள் இவ்வளவு காலமும் பட்டதுயர், படாத துயர் அனைத்தும் இந்த உலகத்தவருக்கு நன்றாகவே தெரியும். உங்கள் ஓர்மம் மிகுந்த போராட்டத்தின் களநியும் புரியும். ஆனாலும் உங்கள் இரத்த வாசனையுடன் உறைந்து கிடக்கும் இந்துக் கடலின் முத்தாகிய இலங்கைத் திருநாட்டின் ஆணைகளை மீறி அவர்களால் எதுவும் செய்ய முடியாது. அந்தப் பலம் எப்போதும் இந்த முத்தின் அதிகாரக் காட்டை அமில மழைகளிலிருந்து அடைகாப்பதால் தான் நீவிர் சிந்திய கண்ணீரும், குருதியும் பூச்சியமாய் கிடக்கின்றது. நீங்கள் அதையுணர்ந்தும் கண்டுகொள்ளத் தவறிவிட்டீர்கள். அதையே அவர்கள் பலமாக்கி பயன் பெற்றுக் கொள்கின்றனர். அந்தப் பயனில் உச்சக்கட்டத்தை இந்தக் குட்டி நாட்டின் அதிகாரக் கட்டில் அனுபவித்துக் கொண்டிருக்கையில் உலகத்தவரால் நீங்கள் மொத்தமாக கைவிடப்பட்டீர்கள். 2009 ஆம் ஆண்டின் இடைக்காலத்தில் உங்களைநோக்கி வீசப்பட்ட சாவு மழை அனைவரையும் நனைத்தது. அம் மழையின் நிழல் உலகத்தவரின் மீது படிந்ததாலும், இலங்கை போர்ப் போதையில் நண்பர்களை புதிய நண்பர்களை தேடிக் கொண்டதாலும் உங்கள் பக்கம் காற்று வீசியது. இந்தக் குரூர இழப்புக்களுக்காகவாவது உங்களுக்கொரு தீர்வு தேவை என்பதை முதற் தடவையாக உலகத்தவர் ஏற்றுக் கொண்டனர். தம் இராஜதந்திர நிகழ்ச்சி நிரல்களில் இதனையும் இணைத்து இலங்கையரசிற்கான சர்வதேச அழுத்தங்களை ஒவ்வொரு சந்திப்பிலும் வழங்கினர். அவ் அழுத்தங்களுக்கு பதிலளிக்கவே இலங்கையரசு நல்லிணக்க ஆணைக்குழு எனும் எட்டு அரச கட்சிக்காரரை கொண்ட விசாரணைக் கோஷ்டியை அறிமுகப்படுத்தியது.

உங்களுக்குத் தெரியும் இதுவும் இலங்கையில் ஒவ்வொரு பிரச்சினைக்கும் அமைக்கப்பட்டு பின்னர் முகவரியற்றுப் போகும் குழுக்களைப் போன்றது தான் என்பது. ஆயினும் நம்பினீர்கள். இந்தக் குழுவின் பின்னால் சர்வதேசக்காரர் காவல் காக்கின்றனர் என்ற நம்பிக்கையில் உணர்வு பூர்வமான வாதங்களை முன் வைத்தீர்கள். மன்னாரிலும், யாழ்ப்பாணத்திலும் வாரக்கணக்கில் நீடித்த விசாரணைகள் கடைசி நேர யுத்தக் காட்சிகளை பொதுமைப்படுத்தியது. கணவன்களையும், மகன்களையும் இராணுவம் கடத்திக் காணாமல் போகச் செய்தனர் என்ற செய்தி கண்ணீரோடு ஒழுகியது. முன்னைய போராளிகளின் மனைவிகள் தம் கணவர்களை இல்லாமலாக்கியது இராணுவத்தினரே என்பதை நிரூபித்தனர். இந்தக் கண்ணீர் கலந்த உண்மைக் கதைகளை கதிரைகளைச் சூடாக்கிக் கொண்டிருந்த அதிகாரிகள் உடனுக்குடன் பதிவு செய்து கொண்டனர். அல்லது பதிவெடுப்பதைப் போல பாசாங்கு காட்டினர்.

தமிழ் புத்திஜீவிகளும், மதத் தலைவர்களும் தமிழ் மக்களுக்கு இதனூடாக நியாயமான தீர்வொன்று முன் வைக்கப்பட வேண்டுமென கருத்துத் தெரிவித்தனர்.

அரசியல் கட்சி சார்ந்தவர்களும் தம் நோக்கி விழுந்த குற்றக் கறைகளை இந்தப் பொது வெளியில் வைத்துக் கழுவ முயற்சித்தனர். வடக்கு கிழக்கில் ஆயுதங்களோடு அலையும் ஜனநாயக முலாம் பூசப்பட்ட துணை இராணுவக் குழுக்களும் தம் கடத்தல்களுக்கான நியாயங்களை முன் வைத்தனர்.

மனங்களில் கிடந்த காயங்களையெல்லாம் கொட்டித்தீர்க்க கிடைத்த 'பிரச்சினையற்ற இடம்' என்று நம்பி உண்மைகளை கொப்பளித்தவர்களுக்கு வந்தது விபரீதம். மனமுடைந்து பேசியவர்களின் முகவரிகளை விசாரணைச் சந்தர்ப்பங்களில் ஒட்டுக் கேட்ட இராணுவப் புலனாய்வாளர்கள் கதவுகளைத் தட்டினர். வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் மறுபடியும் இருட்டினுள் ஒழிந்து கொண்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் ஒளி

27. நவம்பர் - 03 டிசம்பர். 2011

65, ஜெயந்த வீரசேகர மாவத்தை,
கொழும்பு-14. டெலிபோன்: 0115738005
பக்ஸ்: 0115517944 -5
E-mail: editorial@sudaroli.com


## இவ்வருட இறுதிக்குள் தீர்வு...?

அரசாங்கத்திற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குமிடையில் நடைபெற்றுவரும் தொடர் பேச்சுவார்த்தைகளின் முக்கியமானதோர் கட்டம் டிசெம்பர் மாதம் இடம்பெற விருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இப்பேச்சுவார்த்தைகள் முதலில் மாதம் இரு முறை நடைபெற்று பின்னர் ஒரு முறை நடைபெற்று, சில வேளைகளில் நடைபெறாமலும் விடுபட்டிருந்தன. அதே வேளை, இப்பேச்சுக்கள் காலம் கடத்தும் நோக்கில் வீணே இழுத்தடிக்கப்பட்ட நிலையிலேயே அமைந்திருந்தன. பேச்சுக்களின்போது உறுதியளிக்கப்பட்ட விடயங்களும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனால் கூட்டமைப்பினர் பேச்சுக்களில் அதிருப்தியடைந்து வெளியேறிய சம்பவங்களும் இடம்பெற்றன.

ஆனால், இப்பேச்சுவார்த்தைகளின் அடுத்த அமர்வுகள் டிசெம்பர் மாதத்தில் நான்கு நாட்கள் இடம்பெறும் எனவும், இதன்போது அதிகாரப் பகிர்வு குறித்து ஆராயப்படவிருப்பதாகவும் இப்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே சமயம், இவ்வருட இறுதிக்குள் தீர்வு ஒன்றை எட்டுவதற்கு தாங்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக கூட்டமைப்பும் தெரிவித்துள்ளது. இவ்வருடம் முடிவதற்கு ஒருமாதமே இருக்கின்ற நிலையில் அதற்குள் தீர்வு குறித்து முடிவொன்றை எட்ட முடியுமா என்கிற கேள்வி தமிழ் மக்கள் மனங்களில் எழுகின்றமையும் தவிர்க்க முடியாததாகின்றது.

அரசாங்கத்தினால் ஏற்கனவே வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எல்லாம் பொய்யாகிப்போன நிலையில் இப்போது வந்துள்ள தகவல்களையும் நம்பமுடியாத நிலையிலேயே தமிழ் மக்கள் உள்ளனர். ஆனால், கூட்டமைப்பினர் தற்போது கூறியிருக்கும் விடயம் தமிழ் மக்களிடம் ஒரு எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. கூட்டமைப்பினர் அமெரிக்கா உட்பட்ட வெளிநாடுகளில் பல கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ள நிலையில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம் என சாதாரண தமிழ் மக்கள் எண்ணுகின்றனர்.

உள்நாட்டில் அரசாங்கத்துடன் நடைபெற்று வந்த பேச்சுக்களில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படாத நிலையிலேயே கூட்டமைப்பினர் அமெரிக்கா உட்பட வெளிநாடுகளுக்குச் சென்று அங்கு பல கலந்துரையாடல்களை மேற்கொண்டதோடு கருத்துக்களையும் வெளியிட்டிருந்தனர். முன்னரும் இவ்வாறான பல வெளிநாட்டுப் பயணங்களை கூட்டமைப்பினர் மேற்கொண்டிருந்தாலும் இம்முறை அவர்களது பயணம் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

கூட்டமைப்பின் அண்மைய வெளிநாட்டு விஜயம் அரசாங்கத்திற்கு அதிருப்தியளிக்கும் வகையாக அமைந்தமையும் குறிப்பிடத்தக்கது. ஆனாலும் கூட்டமைப்பினரின் இந்த வெளிநாட்டுப் பயணத்திற்குப் பின்னரே அரசாங்கத்திற்கும் கூட்டமைப்பினருக்கும் இடையான பேச்சுக்களில் ஒரு திருப்பம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. எனினும், இவ்வருட இறுதிக்குள் தீர்வு தொடர்பாக ஒரு முடிவு அல்லது திருப்பம் ஏற்படும் என்பதை நம்ப முடியாதுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள பாரிய சர்வதேச அழுத்தங்களிலிருந்து விடுபட அரசாங்கம் சில திட்டங்களை வகுத்திருக்கின்றமை தெரிந்ததே. அதிலொன்றுதான் போர்க்குற்றங்களிலிருந்து தப்புவதற்கு நூறு படையினரை குற்றவாளிகளாக்கும் திட்டம். இதேபோல தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விடயத்திலும் ஒரு தந்திரோபாயத் திட்டத்தை அரசாங்கம் வகுத்துள்ளதோ எனவும் சந்தேகிக்கத் தோன்றுகிறது.

இக்கட்டத்தில் தமிழ் தேசியக்கூட்டமைப்பினர் மிகவும் அவதானமாக நடந்து கொள்ள வேண்டிய தேவை உள்ளது. அரசாங்கம் பல்வேறு வாக்குறுதிகளைக் கொடுத்து தமிழ் மக்களை ஏமாற்றுவது என்பது தொடர்ந்து நடைபெறும் ஒன்றே.

ஆனால், தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகத் திகழும், தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் தேசியக்கூட்டமைப்பினரின் வாக்குறுதிகள் பொய்யாகிப்போகும் நிலைமைகளை ஏற்படுத்தாமல் அவர்கள் அதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

# திசையறியா பட்டம்!



■ ஹரிஸ்

வேலையற்றோர் பிரச்சினை இன்று உலக நாடுகளை ஆட்டிப்படைத்து வருகின்றது. உலக சனத்தொகையின் கட்டுமீறிய அதிகரிப்பு இந்தப் பிரச்சனைக்குத் தூபமிட்டு வருகின்றது.

இதில் இலங்கையும் விதிவிலக்கானது அல்ல. இன்றைய போக்கில் படித்த இளைஞர் யுவதிகள் இந்தப் பிரச்சினையில் சிக்கி வறுமையின் பிடியில் வாழ்ந்து வருகின்றனர். இலங்கையின் கல்வித் துறையைப் பொறுத்தவரையில் அது போட்டி மிகுந்த துறையாகப் பரிணாமம் கண்டு வருகின்றது. தக்கன பிழைக்கும் அல்லன அழியும் என்ற கூர்ப்புக் கொள்கையும் இலங்கையின் கல்வித் துறையும் தொடர்புபட்டுள்ளதனை அவதானிக்க முடிகின்றது. கல்வித்துறையைப் பொறுத்த வரையில் ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்தரக் கல்வி, பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு என விரிவடைந்து செல்கின்றது. குறிப்பாகத் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் மக்கள் கல்வித்துறை மீது காட்டும் அக்கறை தமிழ் பிரதேச மாணவர்கள் பெறும் பெறுபேறுகளிலிருந்து அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. என்ன பாடுபட்டும் தன் பிள்ளையை படிப்பிக்க வேண்டும் என்ற கொள்கை அனைத்து பெற்றோரிடமும் ஆழ வேரூன்றியிருக்கிறது.

குறிப்பாக பரீட்சைகளைப் பொறுத்த வரையில் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையே மிகவும் சவால் மிகுந்த திறமை பரீசிலிப்பாக உள்ளது.

இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்டோர் தோற்றி வெறும் 30,000 பேர்களே நாட்டில் உள்ள 15 பல்கலைக்கழகங்களுக்குள் உள்வாங்கப் படுகின்றார்கள். மேலும் லட்சம் பேர் பல்கலைக் கழகத்திற்கு தகுதி பெற்றும் நாட்டின் பொருளாதார நிலையால் அதற்குள் உள்வாங்கப்படாது தேசிய கல்வியற் கல்லூரிகள், வெளிவாரிப் பட்டப்படிப்புகள் தொழில்நுட்பக்கல்லூரிகள் என பலவற்றிலும் தனியார் பல்கலைக்கழகங்களிலும் தமது மேற்படிப்பைத் தொடர்கின்றனர். தேசிய கல்வியற் கல்லூரிகளில் கல்விகற்கும் பெருந்தொகையானோர் இலங்கையின் ஆசிரியர்சேவைக்குள் உள்வாங்கப்படுகின்றனர். இந்நிலையில் பல்கலைக்கழகங்களில் தமது நான்கு வருடப் பட்டப்படிப்பை முடித்து பட்டமளிப்பு விழாக்களின் போது பட்டங்களைப் பெற்று பல மாணவர்கள் பட்டதாரிகளாக வருகின்றனர். இதே வேளை அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்பை மேற்கொண்டு பல்கலைக்கழகங்களில் பதிவு செய்து பரீட்சைகளிலும் சித்தியடைந்து எதிர்கால தொழில் பற்றிய கனவுகளுடன் பல மாணவர்கள் பட்டதாரிகளாக வெளியேறி வருகின்றனர்.

இன்றைய நவீன கல்வியானது அறிவுக்கானது என்பதிலிருந்து விலகி தொழிலுக்கானது என மாறி வருகின்றது. இதனால் மாணவர்களும் அரச உத்தியோகத்திலேயே நம்பிக்கை வைக்கின்றனர்.

இதனால் வருடாவருடம் வேலையற்ற பட்டதாரிகளின் சங்கங்களில் இவர்கள் இலகுவாக அங்கத்துவம் பெறுகின்றனர். விடாமுயற்சி படிக்க வேண்டும் என்ற ஆர்வம் இவற்றின் மத்தியில் கல்வி கற்ற இவர்கள் வேலையற்று நடுத்தெருவில் விடப்படுகின்றனர்.

இந் நிலையில் தேர்தல் காலத்தில் மட்டும் இவர்களின் ஞாபகம் அரசியல்வாதிகளுக்கு வந்து விடும். உடனே வேலை வாய்ப்புத்தருவோம் என்ற பொருளில் உரைகளை அரசியல் வாதிகள் நிகழ்த்தி இவர்கள் மீதான அக்கறையை காட்டுவார்கள். வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு என்ற ஒரு அமைச்சே இருப்பது அப்போதுதான் மக்களுக்குத் தெரியவரும். அந்த அமைச்சக அதிகாரிகளும் குவைத், டோகா நாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவோம் என மேடைகளில் தட்டி முழக்குவார்கள். இவர்களின் வாக்குறுதியை நம்பிப் பட்டதாரிகளும் இவர்களின் மகுடிகளுக்கு ஆடும் பாம்புகளாக மாறிவிடுகின்றனர். தேர்தல் காலம் முடிய மீண்டும் அந்த அதிகாரிகள் வழமைபோல வந்த இடம் தெரியாமல் ஓடி மறைந்து விடுவார்கள்.

அகஸ்தியன் பட்டதாரிகளின் நிலை அதோகதி தான் இதுவே அன்றிலிருந்து இன்று வரை பட்டதாரிகளைப் பொறுத்தவரையில் தீர்க்கமாகி வருகின்ற உண்மை. அரசோ அல்லது அதிகாரவர்க்கங்களோ இந்தப்பிரச்சனையில் அக்கறை காட்டவில்லை என அங்கலாய்க்கின்றனர் இந்த வேலையில்லா பட்டதாரிகள். இதனால் கடந்த காலத்தில் இவர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தியிருந்தார்கள். இது தொடர்பாக அண்மையில் அறிக்கையொன்றை விடுத்த வேலையற்ற பட்டதாரிகளின் ஒருங்கிணைப்புச் சங்கத்தின் அமைப்பாளர் தம்மிக்க முனசிங்க நாட்டில் வேலையற்று இருக்கும் பட்டதாரிகளில் 80 வீதமானவர்கள் பெண்கள் என்றும் இவர்கள் பட்டப்படிப்பை பூர்த்தி செய்த பின்னரும் வேலையற்றுப் போதிய வருமானமின்மையால் சமூக பொருளாதார ரீதியில் தாழ்வுற்றுப் பரிதாபத்தில் இருக்கின்றனர் எனவும் தெரிவித்திருந்தார்.

இதற்கு வலுசேர்ப்பதற்காக அண்மையில் சில நாட்களுக்கு முன்னர் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார் என பல பகுதிகளிலும் வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் ஆர்ப்பாட்டங்களை நடாத்தி உள்ளது.

இவர்களின் ஆர்ப்பாட்டங்கள் போராட்டங்கள் எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்குகளாகவே பெரும்பாலும் அமைந்திருந்தன.

நாட்டின் அபிவிருத்தியும் அந்நியச் செலவாணிகளில் ஏற்படும் வளர்ச்சியும் படித்த இளைஞர்களின் கைகளிலேயே உள்ளது. இதனாலேயே படித்த இளைஞர்களை கொண்டு வருங்கள் இந்தியாவை மாற்றிக்காட்டுகிறேன் என இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் அந்த நாளில் கூறியிருந்தார். எனவே வேலையற்ற இளைஞர்களின் வாழ்வினை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக போரின் காரணமாக மூடப்பட்ட தொழிற்சாலைகளைத் திறந்து அவற்றில் படித்த இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வர வேண்டும். வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகமும் பட்டதாரிகளின் அவலக் குரலிற்கு செவிசாய்த்து நாட்டின் அந்நியச் செலவாணிகளை உயர்த்திக் கொள்ள வசதியாக ஒப்பந்தங்கள் மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைத் துரிதமாக பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இளைஞர்களும் அரச உத்தியோகத்தை நம்பி காத்திருப்பதை விடுத்து தனியார் துறைகளின் பக்கம் தமது பார்வையைத் திருப்பமுன்வர வேண்டும். இதுவே நாட்டின் அபிவிருத்திக்கும் பட்டதாரிகளின் வளமான எதிர்காலத்திற்கும் வழிசமைக்கும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூதங்களை இலக்கு வைக்கும் போர்க் குற்றங்கள்

■ சந்திரசேகர ஆசாத்



போர் என்பது ஒரு மாலை நேரப் பொழுது போக்கோ அல்லது இரவு நேர விருந்துபசாரமோ அல்ல! அது அவற்றைப் போன்று இனிமையானதாகவோ மகிழ்ச்சிகரமானதாகவோ ஒழுங்கானதாகவோ இருப்பதில்லை. மாறாக போர் என்பது ஒரு தரப்பை இன்னொரு தரப்பு அழித்தொழிக்கும் இரத்தம் சிந்தும் ஒரு நிகழ்வு. இது சென்சீனத் தலைவர் மாஓசேதுங் அவர்கள் சீனப் புரட்சி இடம் பெற்ற காலத்தில் அதற்கு அவர் தலைமை தாங்கி வழிநடத்தியபோது வெளியிட்ட கருத்து.

ஒரு போர் இடம்பெறும் போது போரில் ஈடுபடும் இரு தரப்பினரும் வெற்றி ஒன்றையே குறிக்கோளாக வைத்து செயற்படுகின்றனர். அவர்கள் தமது தரப்பிலோ எதிர்த்தரப்பிலோ இடம் பெறும் உயிர்ப் பலிகளைப் பற்றியோ பேரழிவுகளைப் பற்றியோ பொருட்படுத்துவதில்லை. வெற்றியடைவதற்காக எந்த ஒரு விலையையும் கொடுக்கத் தயாராகின்றனர். அங்கு நியாயம், தர்மம் என எவை பற்றியும் அக்கறை செலுத்துவதில்லை.

எனினும் போரில் ஈடுபடாத மக்களைக் கொல்வது, மருத்துவமனைகள் பாடசாலைகள் போன்றவற்றின் மீது தாக்குதல் தொடுத்தல், சரணடைபவர்களைக் கொலை செய்தல் போன்ற சில முக்கிய விடயங்கள் போர்க்குற்றங்களாக கருதப்படுகின்றன.

இப்படியான போர்க்குற்றங்கள் தொடர்பாக பலர் நீதியின் முன் நிறுத்தப்பட்டுள்ளனர். தண்டனைக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர். தற்சமயம் கூட போர்க்குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக முன்னாள் எகிப்திய அதிபர் முபாரக், லைபீரிய முன்னாள் அதிபர் ரெயிலர் ஆகியோர் மீது விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. சிரியாவில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்படுமானால் சிரிய அதிபரும் போர்க்குற்றவாளியாக விசாரிக்கப்படலாம்.

இவற்றில் கவனிக்க வேண்டிய ஒரு முக்கிய விஷயம் இப்போர்க்குற்றங்கள் புரிந்ததாக இனங்காணப்பட்டவர்கள் தங்கள் பதவிகளை விட்டு இறங்கிய பின்போ அல்லது இறக்கப்பட்ட பின்போ போர்க்குற்றங்கள் அவர்கள் மேல் பாய ஆரம்பிக்கின்றன. போரில் வெற்றி பெற்ற தரப்பினரிடம் இப்போர்க்குற்றங்கள் தங்கள் வலிமையை இழந்து விடுகின்றன.

ஒரு சில விநாடிகளிலேயே இலட்சக் கணக்கான ஜப்பானிய மக்களைக் கொன்று தள்ளிய அணுகுண்டை வீசக்கட்டளையிட்ட ரூஸ்வெல்ட்டையோ, ஐஸன்ஹோவரையோ போர்க்குற்றம் புரிந்தவர்களாகக் குற்றஞ்சாட்டவில்லை. ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் இன்று வரை விமானக் குண்டுகளால் மக்களைக் கொன்று குவிக்கும் அமெரிக்கப் படையினரை எவரும் போர்க்குற்றவாளிகளாக ஆக்கவில்லை. காசா மீது விமானத் தாக்குதல் நடத்தி மக்களைக் கொல்லும் இஸ்ரேலை எவரும் கண்டிக்கவில்லை. போர்க் குற்றவாளியாகக் கூறப்படும் சூடானிய அதிபரை எவராலும் எதுவும் செய்துவிட முடியவில்லை.

ஆனால் போரில் தோற்கடிக்கப்பட்டவர்களைப் போர்க்குற்றங்கள் விரட்டி விரட்டிப் பிடித்துத் தண்டிக்கத் தவறுவதில்லை.

ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை போர்க் குற்றங்கள் சற்று வித்தியாசமான முறையில் முன்வைக்கப்படுகின்றன. ஒன்று இலங்கை அரசு போரில் வெற்றி பெற்ற தரப்பாக இருந்த போதிலும் அதன் மீது போர்க்குற்றங்கள் சுமத்தப்படுகின்றன. மற்றது, இப்போரை இலங்கை அரசு வெற்றி கொள்ள அரசியல் ரீதியாகவும், இராணுவ ஆலோசனைகள், ஆயுத உதவிகள் என்பன மூலம் யார் துணைநின்றார்களோ அவர்களே போர்க் குற்றங்கள் என அழுத்தம் கொடுத்து வருகின்றனர். மேலும் போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாகக் கருதப்படும் இலங்கை அரசே போர்க்குற்றங்களை விசாரிக்க வேண்டும் எனவும் கோரப்படுகின்றது.

ஆனால் இலங்கை அரசோ போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாகக் கருதப்படும் படையாளிகளுக்கு ராஜதந்திரப் பதவிகளை வழங்கி அவர்களைக் கௌரவப்படுத்தியுள்ளதுடன் அவர்கள் வெளிநாட்டு நீதிமன்றங்களால் கைது செய்யப்பட முடியாத நிலைமையையும் ஏற்படுத்தியுள்ளது. அதாவது ஒரு நாட்டின் ராஜதந்திரியை சர்வதேச சட்டங்களின் படி இன்னொரு நாடு கைது செய்ய முடியாது.

மேலும் உள் நாட்டில் விசாரணைகளை நடத்துவதாகக் கூறி நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை அமைத்து இப்போ அது தனது அறிக்கையையும் ஜனாதிபதியிடம் கையளித்து விட்டது. அவ்வாறிருக்கையில் குறிப்பிட்ட விஷயங்கள் இன்னும் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படாவிட்டாலும் கூட, அவை ஊடகங்கள் மூலமாகக் கசிய ஆரம்பித்து விட்டன. இது வரைக் கசிந்த தகவல்களின் படி பூதங்களை இலக்குவைத்த போர்க் குற்றங்கள் பூச்சிகளைப் பிடிப்பதுடன் ஓய்வெடுத்து விடுமோ என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

அதாவது இடைநிலை அதிகாரிகள், குற்றங்களில் நேரடியாக ஈடுபட்ட சில இராணுவத்தினர் என ஏறக்குறைய நூறு பேரில் பழியைப் போட்டு, பூதங்களைத் தப்ப வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் சாத்தியம் இருப்பதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

அப்படி நம்புவதற்கான சில முன்னுதாரணங்கள் இலங்கையில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அதாவது பாடசாலை மாணவி கிருசாந்தி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டு புதைகுழியில் புதைத்தமை சம்பந்தமாக ராஜபக்ச என்ற கோப்ரல் தரத்திலுள்ள படைவீரன் கைது செய்யப்பட்டு தண்டிக்கவைக்கப்பட்டான். ஆனால் மேற்படி சம்பவத்திற்கு கட்டளையிட்ட பொறுப்பதிகாரி பதவிஉயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டான். எந்த ஒரு படைவீரனையும் சரி பிழைகளுக்கு அப்பால் மேலதிகாரியின் கட்டளையை நிறைவேற்ற வேண்டியவன். அவன் தன்னிச்சையாக செயற்பட்டிருந்தால் இராணுவ நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அப்படி எதுவும் இடம் பெறவில்லை. பிரச்சினை வெளியில் வந்த பின்பு அவன் பலிக்கடாவாக்கப்பட்டு சிவில்நீதிமன்றத்தில் நிறுத்தப்பட கட்டளையிட்ட மேலதிகாரி பதவி உயர்வு பெற்று விட்டார்.

போர்க்குற்றங்கள் தொடர்பாகவும் அப்படி ஒரு வழிமுறை கையாளப்படுவதற்கான அறிகுறிகளே செய்திகளாக வெளியிடப்பட்டுள்ளன.

இது வரை இலங்கை அரச தரப்பினர் போர்க் குற்றங்கள் எதுவும் இடம் பெறவில்லை எனவும் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் விடுதலைப் புலிகளிடம் பணம் பெற்றுக் கொண்டு போலியான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகவும் கூறி வந்தனர். அது மட்டுமன்றி 'சனல் 4' வெளியிட்ட இலங்கையின் கொலைக்களம் என்ற ஒலி ஒளி நாடாவையும் போலியானது என மறுத்து வந்தனர். அதை மறுத்து வேறு காணொளிகளையும் வெளியிட்டனர்.

ஆனால் தற்சமயம் நல்லிணக்க ஆணைக்குழு போர்க்குற்றங்கள் இடம் பெற்றதை ஒப்புக் கொண்டுள்ளதாகத் தெரிகின்றது. ஆனால் அதில் கூட பூதங்கள் தப்பி விடவும் பூச்சிகளே பலிக்கடாக்கள் ஆக்கப்படவும் வாய்ப்பு ஏற்படுத்துவதற்கான அறிகுறிகளே தென்படுகின்றன.

அதே சமயத்தில் லங்கா நியூஸ் இணையதளம் இன்னொரு அதிர்ச்சித் தகவலையும் வெளியிட்டுள்ளது. பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட தெமட்டகொட சமிந்த என்ற பாதாள உலகக் கோஷ்டித் தலைவன் ஊடகவியலாளர் பிரகீத் எக்நெலியகொட உட்பட சிலரின் பிரேதங்களை தானே நீர் கொழும்புக் கடலில் புதைத்ததாகவும் தனக்கு துமிந்த சில்வாவே கட்டளையிட்டதாகவும் கூறியுள்ளான். மேலும் தான் கொலை செய்யப்படலாம் எனவும் அவன் அச்சம் தெரிவித்துள்ளான்.

அவன், ஆயுதங்கள் இருக்குமிடத்தைக் காட்டுவதாக அழைத்துச் சென்றதாகவும் அங்கு அவன் பொலிசாரின் துப்பாக்கியைப் பறித்து சுட முயற்சித்ததாகவும் அதே நேரத்தில் பொலிசார் அவனை சுட்டு விட்டதாகவும் செய்திகள் வந்தால் ஆச்சரியப்பட முடியாது. அத்துடன் அவரின் வாக்குமூலம் பற்றிய விபரங்களும் முடிவுக்கு வந்து விடும்.

அப்படியிருந்த போதிலும் இலங்கையில் சட்டத்திற்குப் புறம்பான கொலைகளின் பின்னால் பெரும் பூதங்கள் இருப்பதை லங்கா நியூஸ் இணையதளம் வெளிப்படுத்தியுள்ளது. இவை இப்படியாக இருக்க மறுபுறத்தில் வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்த புலி உறுப்பினர்களை பாதுகாப்புச் செயலரின் கட்டளையின் பேரில் இராணுவமே சுட்டுக் கொன்றது என பேட்டி கொடுத்தமைக்காக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு மூன்று வருடங்கள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அதாவது ஒரு புறம் போர்க்குற்றங்கள், சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் என்பன தொடர்பாக பல அதிர்ச்சித்தகவல்கள் வெளிவரும் அதே வேளையில் அவற்றை மறுதலிக்கும் முயற்சிகளும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எப்படியிருந்த போதிலும் போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச அழுத்தங்களிலிருந்து தப்ப சில குற்றம் சுமத்தப்படும் பூதங்கள் தப்பி விடவும் சில பூச்சிகள் பலி கொடுக்கப்படலாம். ஏனெனில் அதிகார பீடங்களில் அமர்ந்திருப்போர் வலுவான நிலையில் உள்ள வரைக்கும் இவற்றுக்கான சாத்தியங்கள் உண்டு.

ஆனால் பாதிக்கப்பட்ட உயிர்களுக்கான நியாயங்கள் என்றோ ஒரு நாள் தம் வலிமையைக் காட்டும் என்பதை வரலாறு மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளது. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரியதொரு ஆபத்து நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. என்று கூறிய சுதா மரத்திலிருந்து கீழே இறங்கி வந்தான்.

அவன் கூறியதைக் கேட்ட நிகிதா அதைக் கேளாதது போல புல்வெளியில் அமர்ந்திருந்து

"அடப்போடா இனி என்னில் திராணி இல்லையடா. நானினி ஓடப்போறதில்ல அதை எதிர்க்கப் போறன்" என்றான்

"புரியாத மாதிரிப்பேசாத நிகி. அந்த ஆபத்தை எதிர்த்து நிற்க நம்மால முடியாது"

அப்பாடா என்று இரண்டு கால்களையும் இரண்டு கைகளையும் விரித்து புல் மீது படுத்திருந்தவன் இவன் கூறியதும் நிமிர்ந்திருந்து "புரியிற மாதிரிக் கூறு சுதா" என்றான்.

சுதா தன்னில் பதட்டத்தைக் காட்டி "நம்மைத் துரத்துற இந்த எதிரி மாயாவோ, மனிதரோ இல்லை. இது காட்டு மிருகம். பாரிய மரம் தடிகள் முறிக்கிற ஓசையைக் கேட்டால் அது மிகப்பெரிய மிருகமாகத்தான் இருக்க முடியும்"

"அப்ப அது டைனோசரா இருக்குமோ?"

"விளையாடாதே நிகி அது மதம்பிடித்த யானையா இருக்கலாம்"

"என்ன சொல்லுறாய் சுதா" இப்பொழுது பதட்டமானாள் நிகிதா. இப்ப நாங்க என்ன செய்யிறது.

"அது தான் நானும் யோசிக்கிறேன். மதம் பிடித்த யானையிடம் அகப்பட்டால் அது துவம்சம் செய்துவிடும்...இம்..." யோசித்தவன் கீழே காய்ந்த மணல் தேடி தனது இரு கைகளாலும் அள்ளி வீசி எறிந்தான். அந்த மணல் அவனது முகத்தில் திரும்பி வந்து விழுந்தது.

"சே நாங்கள் இப்ப அதன் காற்று வளத்தில் இருக்கிறோம். அது நம்மை மோப்பம் பிடித்து வந்து கொண்டிருக்கிறது"

"என்ன சுதா விஞ்ஞானி மாதிரிப் பேசுகிறாய்"

"பொறு நிகி. நாம் இப்ப தப்ப வேணும் மெல்லமா வாற யானையை நோக்கித்தான் ஓட வேணும்"

"ஐயோ! என்ன சுதா. பைத்தியம் மாதிரிப் பேசுகிறாய். அப்படி ஓடினால் நாம் வலியத் தேடிப் போய் ஆபத்தில சிக்கிக்கொண்டிடுவோமே"

"அதுக்கும் ஒரு ஐடியா இருக்கு".

இப்பொழுது உடல் பூரா பயத்தையும் பதட்டத்தையும் வெளிக்காட்டிய நிகிதா. துள்ளி எழும்பி

"சொல்லு சுதா. சத்தம் நம்மை நெருங்கிக் கொண்டு வருது. உன்ர ஐடியா என்ன?"

சுதா அமைதியாக தனது கிட் பையிலிருந்து தண்ணிப் போத்தலை எடுத்துத் திறந்து மழுக் மழுக்கென்று குடித்து விட்டு நிகிதாவிடம் கொடுத்தான். அவளும் அதை வாங்கி அன்னாந்து பருகிவிட்டு மூடியை வாங்கி நடுங்கும் கைகளால் மூடி சுதாவிடம் கொடுத்து

அவன் என்ன கூறப் போகிறானென்று அவனது முகத்தையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தடார்...படார்... என மரங்கள் முறிபடுகின்ற ஓசை நெருங்கிக் கொண்டிருந்தது.

சுதா தண்ணீர்ப் போத்தலை வாங்கி மீண்டும் தனது கிட் பையில் வைத்து, கிட் பையையும் மூடி தனது பின் தோளில் கொழுவிவிட்டு தனது ரவுசர் பொக்கற்றுக்குள் எதையோ தேடி

எடுத்தான். அது ஒரு ரோச் லைற்.

"இங்க பார் நிகி நேரம் இருட்டிக் கொண்டு வருது என்னைப் பின் தொடர்ந்து ஓடி வா. நான் சொல்லும் போது ஓடத்துவங்கு எந்த நேரத்திலும் என்னைவிட்டுப் பிரியாதே"

சரியென்று தலையாட்டிவிட்டு அவன் சொல்லுக்கு காத்திருந்தாள்.

ஓசை நெருங்க... நெருங்க...

"இம்... ஓடு" என்று அவன் கட்டளையிட அவள் மந்திரத்துக்குக் கட்டுப்பட்டவள் போல சுதாவின் பின்னால் ஓடத் தொடங்கினாள்.

சுதா தாம் நின்ற இடத்திலிருந்து பக்க வாட்டாகி ஓடினான். கிட்டத்தட்ட நானூறு மீற்றர் ஓடியவன். நின்று மூச்சிரைத்து நிகிதா வும் வரும் வரை காத்திருந்து சில வினாடிகள் கூர்ந்து கவனித்து ஓசை வரும் திசையை நோக்கி ஓடத் தொடங்கினான். நிகிதாவும் தனது தோளில் தொங்கிய கிட் பையையும் ஒரு கையால் பிடித்த வாறு அவன் பின்னால் ஓடினாள்.

சிறிது நேர ஓட்டத்திற்குப் பின்னர் அந்த ஓசை இவர்களின் பக்க வாட்டில் கேட்கத் தொடங்கியது. மிக அருகில் அது மரங்கள் தடிகளை துவம்சம் செய்த படி இவர்கள் முன்னர் நின்ற இடத்தைக் குறிவைத்து முன்னேறிக் கொண்டிருந்தது.

நிகிதா ஏய் அங்கே பார் என்றாள்.

ஆனால் அவனோ அவளது கையை எட்டிப் பிடித்து "நிகி ஸ்லோ பண்ணாதே ஓடு.... எனக்குப் பின்னால ஓடி வா" என்று அவளையும் இழுத்துக் கொண்டு ஓடினான்.

இப்பொழுது முறிபடுகின்ற ஓசை நின்று போனது இருந்தாலும் சுதா ஓடிக் கொண்டிருந் தான். அவனுக்குத் தெரியும். பக்கவாட்டில் மிக அருகாக இருந்தால் அது இவர்களது வாசனையை மோப்பம் பிடித்திருக்கும். தப்பிக்க வேண்டுமானால் இன்னும் ஓட வேண்டும். ஓடினான். நிகிதாவும் தலை தெறிக்க ஓடி வந்து கொண்டிருந்தாள். நேரம் இருட்டி விட்டது. சுதாவின் கையிலிருந்த ரோச் ஒளி பாய்ச்சிய அந்த வெளிச்சத்தின் துணையுடன் சுதா ஓட... பின்னால் நிகிதா....


இப்பொழுது அதை உணர்ந்தான் சுதா. நிகிதாவின் காலடி ஓசை கேட்கவில்லை... அதிர்ந்தான்.

ஓடியபடியே வேகத்தைக் குறைத்து திரும்பிப் பார்த்தான்.. அத்தருணம் திடீரென்று யாரோ அடித்தது போன்று கீழே உருண்டான். சுதா கையிலிருந்து ரோச் எங்கேயோ விழுந்து அணைந்து போனது. கும்மிருட்டு. ஓடிக்கொண்டே திரும்பி நிகிதாவைப் பார்த்த போது எதிரே மரம் அடித்திருக்க வேண்டும்.

சுதா தன்னைச் சுதாகரித்து எழுந்து அங்குமிங்கும் தேடினான். எங்குமே இருள் சூழ்ந்திருந்தது. நிகிதாவின் தடயம் தென்படவேயில்லை.

சற்றுத் தூரத்தில் ஒரு முனகல் சத்தம் மட்டும் மெலிதாகக் கேட்க ஆரம்பித்தது.

(ஆபத்து தொடரும்)



■ அ.சூரியன்

# வானம் ஏன் நீல நிறமாக தெரிகின்றது?

நாம் பார்க்கும் போது அந்த ஒளி அலைகள் கண்களை வந்தடைகின்றன. அதனாலேயே பகலில் வானம் நீல நிறமாக இருப்பது போல தோன்றுகிறது. வானம் என்பது வெறுமனே வாயுத்துணிக்கைகள், மாசுக்களால் ஆனது தவிர அப்படி ஒன்று இல்லை என்பதே உண்மை. பௌதிக விதிப்படி ஒரு நிறத்தின் ஒளி அலைகளின் நீளம் அதிகமா இருந்தா அவை நம் பார்வைக்குக் கிடைக்காமலே போய்விடும்.

நீல நிறத்தின் ஒளி அலைகள் குறைவாக இருப்பதால் அது நம் கண்களுக்குள் மாட்டிக்கொள்கிறது.

வானம் நீல நிறமாக இருப்பதால் அதை பிரதிபலிக்கும் கடலும் நீல நிறமாகவே இருக்கிறது. காலை, மாலை ஆகிய உதயம், அஸ்தமனம் போது மட்டும் அந்தப்பகுதி சிவப்பாக தெரியக்காரணம் சூரியக் கதிர்களில் உள்ள சிவப்பு நிறத்தின் ஒளியலைகளின் நீளம் அப்போது கூடும் குறையும் என்றாம்!

சூரியஒளி அனைத்து வண்ணங்களையும் உள்ளடக்கியது. வானவில்லில் அது தன் தோற்றத்தை விரித்து ஏழு வண்ணங்களைக்



காட்டுகிறதே அதனுள் மற்ற வண்ணங்களும் அடக்கம். அவை அனைத்தும் ஒளியே ஆயினும் வர்ண வேறுபாடுகளுக்கு காரணம் அந்த ஒளியின் அலை, நீளம் மற்றும் துடிப்பு. வானவில்லின் வண்ணங்களில் நீல நிறம் மிக அதிகத் துடிப்புடனும் சிவப்பு மிகக் குறைந்த துடிப்புடனும் இருப்பவை.

நாம் பார்ப்பது என்பது ஒளி நமது கண்ணில் வந்து படும்போது மட்டுமே பார்க்கும் பொருட்கள் எல்லாமே அதில் பட்டு திரும்பும் ஒளி நமது கண்களை வந்தடைவதால் தான். காற்று மண்டலத்தில் பலமாக சிதறடிக்கப்படும் நீல நிறமே மற்ற நிறங்களை விட பெருமளவில் நமது கண்ணில் வந்து விழுகிறது. ஆகவே தான் வானம் நீல நிறம். இரவில் நிலவின் ஒளி நட்சத்திரங்களின் ஒளி ஆகியவை மிகவும் குறைந்த ஒளியாக இருப்பதால் அந்த நிறங்கள் நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. நேராக வரும் ஒளியை மட்டுமே நம்மால் பார்க்க முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நெப்போலியனைக் கொண்டாடிய பிரெஞ்சு இராணுவம் பின்னர் அவனைச் சிறையில் தள்ளியது!

மிகவும் கவனமாகச் செயல்பட வேண்டிய நேரம் இது. கோர்ஸிகாவில் சொதப்பியதுபோல் இங்கே தப்புச் செய்தால், அவனை யாரும் மன்னிக்க மாட்டார்கள். மீண்டும் வேலை போகலாம். அல்லது தலையே போய்விடலாம், யார் கண்டது?

ஆனால் அதேசமயம், இதைமட்டும் சரியாகச் செய்து வெற்றியடைந்துவிட்டால், அதன்பிறகு பிரெஞ்சு ராணுவத்தில் தன் புகழ் கன்னாபின்னாவென்று எகிறத் தொடங்கிவிடும். இதை நன்றாகப் புரிந்துகொண்டிருந்த நெப்போலியன், ஒன்றுக்குப் பத்து முறை யோசித்தபிறகுதான் செயலில் இறங்கினான்.

நெப்போலியன் கட்டளைப்படி, பெரிய துப்பாக்கிகளும், பீரங்கிகளும் டுலான் எல்லைக்குக் கொண்டுவரப்பட்டன. அந்தப் பிரதேசத்தின் வரைபடத்தைக் கையில் வைத்துக் கொண்டு, எந்த பீரங்கியை எங்கே நிறுத்தவேண்டும் என்று கச்சிதமாகப் புள்ளி வைத்து விளக்கினான். அவனுடைய திட்டத்தின்படி, மிகப் பெரிய ஆயுதத் தாக்குதலுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

டுலான் விஷயத்தில் மற்ற தளபதிகள் எல்லோரும் என்ன செய்தார்கள்? எதிர்ப்படுகிற இங்கிலாந்துப் படை வீரர்களையெல்லாம் தாக்கப்போய் மூக்குடைந்தார்கள்.

அதே சூழ்நிலையில், நெப்போலியன் கொஞ்சம் வித்தியாசமாக யோசித்தான். முதுகுக்குப் பின்னால் இத்தனை பெரிய கடலும் கப்பல்களும் இருக்கிற தைரியத்தில்தானே இங்கிலாந்துக்காரர்கள் இப்படித் திமிர் பிடித்து அலைகிறார்கள்? அந்த வாலை ஒட்ட நறுக்கிவிட்டால்? கடலில் இருக்கும் பிரிட்டன் கப்பல்களைத் தாக்கத் திட்டமிட்டான் நெப்போலியன்.

இதைக் கேட்டவர்கள் பலர், நெப்போலியனுக்குக் கிறுக்குப் பிடித்துவிட்டது என்றே முடிவுகட்டிவிட்டார்கள். கரையிலிருந்து கப்பலைப் பார்த்துச் சுடுவார்களாம், அதில் பயந்துபோய் இங்கிலாந்துக் கடற்படை திரும்பி ஓடிவிடுமாம். சின்னப்பிள்ளைத்தனமாக இல்லை?

ஆனால், சிறிய மாற்றம்கூட இல்லாமல் நெப்போலியனின் திட்டம் அப்படியே செயல்படுத்தப்பட்டது.

பிரிட்டிஷ் படையினர் கொஞ்சமும் எதிர்பார்த்திருக்காத நேரத்தில், அவர்கள் கற்பனையில் கூட நினைத்திராத வகையில் பிரெஞ்சுப் படைகள் தாக்கத் தொடங்கின. தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதலால், நெப்போலியன் எதிர்பார்த்தது போலவே இங்கிலாந்துக் கப்பல்கள் பின்வாங்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டன.

இதனால், உள்ளூர் ஆக்கிரமிப்பாளர்களுக்குக் கிடைத்துக்கொண்டிருந்த ஆயுத உதவி தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டது. அவர்கள் திகைத்துப் போயிருந்த அந்த நேரத்தில், நெப்போலியன் படையின் இன்னொரு பிரிவு உள்ளே நுழைந்து கோட்டையைக் கைப்பற்றியது.

வெவ்வேறு படைத் தளபதிகள் மாதக்கணக்காகப் போராடிய விஷயத்தை, நெப்போலியன் ஒரே நாளில் சாதித்தான். டுலான் மீண்டும் பிரான்ஸின் கட்டுப்பாட்டிற்குத் திரும்பிவிட்டது.

இந்தப் போரில், நெப்போலியனின் குதிரை சுட்டு வீழ்த்தப்பட்டுவிட்டது. அவனுக்கும் கொஞ்சம் காயம். ஆனால், அதைப்பற்றியெல்லாம் யோசிக்கக்கூட நேரமில்லாதபடி, நெப்போலியனுக்குப் பாராட்டுகள் குவிந்தன.

இந்தப் போரின்மூலம் நெப்போலியன் இரண்டு விஷயங்களைக் கற்றுக்கொண்டிருந்தான்.

முதலாவதாக, எதிரிப் படைகள் எவ்வளவு பெரியவை என்று யோசித்துப் பார்த்து, நம்பிக்கை இழக்கக் கூடாது. சரியான விதத்தில் திட்டமிட்டுத் தாக்கினால், எத்தனை பிரம்மாண்டமான படையையும் வீழ்த்திவிட முடியும்.

அடுத்தபடியாக, எதிரியைத் திகைப்பில் ஆழ்த்த வேண்டும். அவர்கள் எதிர்பார்க்காத நேரத்தில், எதிர்பார்க்காத இடத்தில் தாக்கினால், எத்தனை பெரிய ஆளும் பதற்றத்தில் தப்புச்செய்வது நிச்சயம்.

டுலான் வெற்றிக்குப்பிறகுதான், பிரெஞ்சு ராணுவத்திலும், அரசியல்வாதிகள் மத்தியிலும் பலர் நெப்போலியனைக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினார்கள். அதுவரை அவனை வெறும் போர் வீரனாக மட்டுமே கருதிக் கொண்டிருந்தவர்கள் கூட, இந்தப் பையனுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்று வெளிப்படையாகப் பாராட்ட ஆரம்பித்தார்கள்.

1793-ம் ஆண்டு, தன்னுடைய இருபத்து நான்காவது வயதில், பிரெஞ்சு ராணுவத்தின் பெருமைக்குரிய பிரிகேடியர் ஜெனரல் பொறுப்பை ஏற்றுக் கொண்டான் நெப்போலியன். பெருமிதத்தோடு நெஞ்சு நிமிர்த்தி நடக்கத் தொடங்கினான்.

'டுலான் கொண்டான்' என்று நெப்போலியனைக் கொண்டாடிய அதே பிரெஞ்சு ராணுவம் அடுத்த வருடம் (1794) அவனைக் கைது செய்து சிறையில் தள்ளியது.

✦ ✦ ✦

இந்தக் காலகட்டத்தில், பிரெஞ்சுப் புரட்சி வெற்றியடைந்து, பிரான்ஸில் மக்களாட்சி அமைந்துவிட்டபோதும், பொதுவான அரசியல் நிலைத்தன்மை ஏற்படவில்லை. முன்னாள் அரசரின் ஆதரவாளர்கள், புதிய புரட்சி அரசாங்கத்



தைப் பிடிக்காதவர்கள் என்று ஏகப்பட்டவர்கள் உள்ளூரில் கலவரப்பை உண்டாக்கிக் கொண்டிருந்தார்கள்.

போதாக்குறைக்கு, இந்தக் குழப்பச் சூழலைப் பயன்படுத்திக் கொண்டு, பிரான்ஸைக் கைப்பற்றி விடலாம் என்று அக்கம் பக்கத்து நாடுகள் நினைத்தன. டுலானில் நடந்ததுபோல், பிரெஞ்சுக் குடிமக்கள் சிலரே, இவர்களுக்கு உதவிக்கொண்டிருந்தார்கள்.

இப்படிப் பல காரணங்களால், அப்போது பிரான்ஸ் அரசாங்கத்தில் அமர்ந்திருந்தவர்களால் நிம்மதியாக ஆட்சி செய்யவே முடியவில்லை. இந்தப் பக்கம் திரும்பினால் ஒரு கலாட்டா, அந்தப் பக்கம் பார்த்தால் ஒரு துரோகம், முதுகுக்குப் பின்னால் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிகள் என்று எல்லோருக்கும் விழி பிதுங்கியது.

இதனால், ஆட்சியில் உள்ளவர்கள் எல்லோர் மீதும் சந்தேகப்பட ஆரம்பித்தார்கள். மதகுருமார்கள், பிரபுக்கள், ராணுவ அதிகாரிகள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் என்று யாரும் இதற்கு விதிவிலக்கில்லை.

அவர்களுடைய சந்தேகத்துக்கு வலுவான காரணம் இருக்க வேண்டும் என்றுகூட அவசியமில்லை. உயர்வர்க்கத்தினர் எல்லோரும், புரட்சிக்கு எதிரிகளாகக் கருதப்பட்டுக் *கில்லட்டினில் கொல்லப்பட்டார்கள். யாரேனும் சத்தம் போட்டுச் சிரித்தால், புரட்சியைக் கேலி செய்கிறார்கள் என்று குற்றம் சாட்டுவார்கள். அதற்குப் பயந்து கிசுகிசுப்பாகப் பேசினால், ஏதோ ரகசியத் திட்டம் தீட்டுவதாகச் சொல்லிக் கைது செய்துவிடுவார்கள்.

இப்படிக் கைதானவர்கள் யார்மீதும் முறைப்படி விசாரணைகள் நடத்தப்படுவது கிடையாது. விசாரணை, சாட்சியம், தீர்ப்பு எல்லாமே சில விநாடிகளில் நடந்து முடிந்துவிடும். அரசாங்கத்துக்கு எதிராகச் செயல்பட்டான், ஆகவே கில்லட்டினில் மரணதண்டனை. அவ்வளவுதான்.

(தொடரும்)

கில்லட்டின்* கருவியின் ஒரு விசேஷம் என்னவென்றால் ஒரு கூரான கத்தியின் மூலம் சட்டென்று தலை துண்டாகிவிடும். ஆகவே, அதிகம் வலி தெரியாது. தவிர, குறைந்த நேரத்தில் நிறையப் பேரைக் கொல்லலாம், நேரம் மிச்சம்.

பிரான்ஸ் தேசத்தின் சரித்திரத்தில், 1793 மற்றும் 1794 ஆகிய ஆண்டுகளில் மட்டும், அழிக்க முடியாதபடி ரத்தக்கறை படியக் காரணமானது இந்த கில்லட்டின் தான்.

* இந்தச் சாதனம், பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகுதான், பிரபலமடையத் தொடங்கியது. புரட்சியின் எதிரிகளைக் கொல்வதற்கு இந்தக் கருவியைப் பயன்படுத்தலாம் என்று சிபாரிசு செய்தவர் பெயர் ஜோசப்-இக்னேஸ் கில்லட்டின் (Joseph-ignace Guill-otin). அவருடைய ஞாபகார்த்தமாக, இந்தக் கொலைக் கருவிக்கு கில்லட்டின் என்றே பெயர் சூட்டிவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்ளைக்காரன் லூலூ



தமிழில் ஜெகன்

பிரான்ஸ் இயற்கை அழகு கொஞ்சும் தேசம். பாரிஸ் அதன் தலைநகரம். எந்நேரமும் ஜனப்போக்குவரத்து நெரிசலாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்கும்.

அண்மைக்காலத்தில் அங்கு அடிக்கடி இடம் பெறும் கொள்ளைச் சம்பவங்களால் மக்கள் யாவரும் அதிர்ச்சியடைந்திருந்தனர். அரசாங்கத் தரப்பிற்கு இது ஓர் பெரும் தலையிடியாக இருந்தது.

இக் குழப்ப நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் கொள்ளைகளை தடுத்து இல்லாதொழிக்கவும் துணிவும் ஆற்றலும் நிறைந்த ரோஜர் என்பவர் புதிய காவல்துறை ஆணையாளராக நியமிக்கப்பட்டார். தாடி மீசையுடன் உயரமான தோற்றத்தைக் கொண்ட ரோஜரின் வயது 48 மட்டுமே.

பல்கிவரும் கொள்ளைச் சம்பவங்களால் பாரிஸ் நகரத்திற்கு அன்றாடம் உலகெங்கும் இருந்துவரும் உல்லாசப் பயணிகளின் வருகை வீழ்ச்சியடைந்து வருவதாலும், அத்துடன் மக்கள் பீதியுடன் உலாவுவதாலும், தன்மீது ஒப்படைக்கப்பட்டிருக்கும் பணியின் பொறுப்பினை உணர்ந்து கொண்ட ரோஜர் தாமதியாது காரியத்தில் இறங்கினார்.

தெரிவு செய்யப்பட்ட அறுபது பேர்களைக் கொண்ட இரகசியப் புலனாய்வுப் படைப்பிரிவு ஒன்றினை அமைத்தார். பாரிஸ் நகரத்திலும் அதன் சுற்றாடல்களிலுமுள்ள பயங்கரக்கொள்ளைக் காரர்கள் மற்றும் குற்றவாளிகளின் பட்டியலைத் தயாரித்துக்கொண்டார்.

பட்டியலில் இடம் பெற்றவர்கள் குறித்துத் தகவல்களைத்திரட்டி ஆராய்ந்தார். விவேகம் மிக்கவர் ரோஜர். ஏனோ தெரியவில்லை, அவரது கவனம் 35 வயதான லூலூ என்றழைக்கப்படும் ஜூலியன் லெக்கோரட் மீது சார்ந்தது. அவன் முகம் முழுவதிலும் வெட்டுக்காயங்களின் தழும்புகள் நிறைந்திருக்கும். குறைந்தது எட்டு வழிப்பறிகளில் சம்பந்தப்பட்டிருக்கிறான்.

பொலிஸ் குறிப்புக்களின்படி, அவன் ஈவிரக்கமற்றவன், எந்தச் சமயத்திலும் ஆயுதங்கள் வைத்திருப்பவன் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. தனது இரகசியப் பிரிவினரை லூலூவைப் பின்தொடரும் படிக்கட்டளையிட்டார்.

பாரிஸிலுள்ள பொலிஸ் தலைமையகத்திற்கு அருகாமையிலேயே லூலூ அடிக்கடி காணப்பட்டான். அவன் பத்திரிகை நடவடிக்கைகளைக் கண்காணித்து வந்தான்.

இதே வேளையில் பாரிஸ் நகரத்தின் முக்கியமான வியாபாரப் பகுதியில் லூலூ தன் சகோதரன் ஜீன் மற்றும் பிற்றர் மார்ஷல் என்பவர்களைச் சந்திப்பதை இரகசியப் படையினர் கவனித்தனர்.



அவர்கள் மூவரும் காம்ப் எலிஸ் பக்கமாக அடிக்கடி ஸ்கூட்டரில் போய் வந்தார்கள். அது மட்டுமன்றி மதிய உணவு வேளையில் பிகோரோ என்ற பத்திரிகை காரியாலயம் இருக்கும் ஒன்றரை மைல் நீளமுள்ள சாலையில் அவர்கள் மூவரும் ஒத்திகை பார்ப்பது போல் வேகமாகச் செல்வது வழக்கம்.

மிக முக்கியமான செய்தி லூலூ நடுத்தர வயதுள்ள ஒருவருடன் கம்பஸ் எலிஸ் பகுதியிலுள்ள மதுக் கடையில் மது அருந்துவது தான். அவர்கள் இருவரும் நெருங்கிய நண்பர்கள் என்று தோன்றியது.

மது அருந்திய பிறகு நடுத்தர வயதுடையவன் லூலூவை விட்டுப்பிரிந்து பிகோரோ பத்திரிகைக் காரியாலயத்திற்குள் செல்வதுண்டு. புலனாய்வுப் படைப்பிரிவினர் அவன் பெயர் ஆன்ட்றூ எனவும் வயது 53 எனவும் அதே பத்திரிகை நிறுவனத்தில் காசாளராக பணிபுரிகின்றான் என அறிந்தனர்.

பொலிஸ் ஆணையாளர் ரோஜர் விசாரித்ததன் மூலமாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வேலையாட்களுக்கு ஊதியம் கொடுக்கப் பாதுகாப்பான முறையில் வாகனம் ஒன்று பணத்துடன் அப்பத்திரிகை காரியாலயத்திற்கு வரும் என்று அறிந்து கொண்டார்.

அது டிசம்பர் மாதமாதலால் அம்மாத இறுதிவார வெள்ளியன்று சகல ஊழியர்களுக்கும் ஊதியத்துடன் புத்தாண்டு போனசும் வழங்கப்படுவதற்காக வாகனம் சுமார் 30 லட்சம் ரூபாய் பணத்துடன் வருவதாக இருந்தது.

லூலூவும் அவனது ஆட்களும் நடந்து கொள்ளும்முறை கொள்ளைக்கு ஒத்திகை ஒன்றினை நடத்துவது போல் ரோஜருக்குத் தோன்றியது. ரோஜர் உடனே டிசம்பர் மாத இறுதி வெள்ளியன்று தம்முடைய சிறந்த பன்னிரண்டு ஆட்களை பத்திரிகைக் காரியாலயத்திற்கு வெளியே மறைந்திருந்து நடப்பதைக் கவனிக்கும்படி கட்டளையிட்டார்.

ரோஜரின் ஊகம் சரியானதுதான். லூலூ அந்த வாகனத்தைக் கொள்ளையடிக்கத் தான் தீர்மானித்துத் திட்டம் வகுத்திருந்தான். நண்பனான காசாளர் மூலமாக வாகனத்தில் பணம் வருவதை அறிந்திருந்தான். அவனும் காசாளரும் மற்றும் மூன்று நண்பர்களுமாக ஒரு திட்டத்தைத் தயாரித்தனர்.

**அவனும் காசாளரும் மற்றும் மூன்று நண்பர்களுமாக ஒரு சிறிய எளிய திட்டத்தைத் தயாரித்தனர். கொள்ளையடித்த பணத்தை விரைவாக எடுத்துச்செல்லத் தகுந்த நேரம் மதிய உணவு உண்ணும் சமயம்தான். அதுவும் ஸ்கூட்டர் போன்ற வாகனம்தான் மிக உபயோகமாக இருக்கும் என்று தீர்மானித்தனர்.**

கொள்ளையடித்த பணத்தை விரைவாக எடுத்துச் செல்லத் தகுந்த நேரம் மதிய உணவு உண்ணும் சமயம் தான். அதுவும் ஸ்கூட்டர் போன்ற வாகனம்தான் மிக உபயோகமாக இருக்கும் என்று தீர்மானித்தார்கள். ஜீனும் மார்ச்சரும் ஒரு ஸ்கூட்டரில் வருவது, ரொபேட்டும் மற்றவனும் மற்றொன்றில் வருவது என்று முடிவாயிற்று.

அவர்கள் பணத்துடன் வரும் வாகனத்திற்குப் பாதுகாவலாக இருப்பவனைச் சட்டென்று பாய்ந்து பிடித்துக் கொள்ள வேண்டும், துப்பாக்கி முனையில் பணப் பையைப் பிடுங்கிக் கொண்டு ஸ்கூட்டரில் பெரிய சாலை வழியே சென்று முனையில் காத்திருக்கும் காரினைச் சென்றடைய வேண்டும் எனத் தீர்மானித்தார்கள். கொள்ளைப்பணத்தில் பாதியை லூலூ வைத்துக்கொள்ள வேண்டும். மற்ற நால்வரும் மீதியைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்வது என முடிவெடுக்கப்பட்டது.

இவர்கள் தினமும் நடத்திய ஒத்திகையை இரகசியப் பொலிஸ் கண்காணித்து வந்திருந்தது. இந்த ஒத்திகை சுமார் ஒரு மாத காலம் நடைபெற்றது.

டிசம்பர் மாதம் குறித்த வெள்ளிக்கிழமையன்று குறிப்பிட்ட நேரத்திற்குப் பணத்துடன் வாகனம் பத்திரிகைக் காரியாலயத்தின் முன் வந்து நின்றது.

பொலிஸ் ஆணையாளர் ரோஜரும் அவரது ஆட்களும் அருகாமையிலுள்ள கட்டடங்களில் தயார் நிலையில் மறைந்து காத்திருந்தார்கள். கொள்ளை நடக்கப் போவதைக் கண்காணித்துக் கொண்டிருந்தார்கள்.

**உண்மைச் சம்பவம்**

ஆனால் லூலூ கடைசி நிமிடத்தில் தன் திட்டத்தை மாற்றிவிட்டான். காசாளர் லூலூவைத் தன்னுடன் அழைத்துச் சென்றான். இருவருமாக ஊதியம் வழங்கப்படும் பகுதிக்குச் சென்றார்கள்.

அவர்களுக்கு காவலாளிகளைக் கட்டிப்பிடிக்க ஒரு கணமே தேவைப்பட்டது. காவலாளியைப் பிடித்து பணப்பையைக் கைப்பற்றிக்கொண்டு கொள்ளையர்கள் இருவரும் மாடிப்படிகளில் இறங்கி ஸ்கூட்டரை அடைந்தார்கள்.

ரகசியப்பொலிஸ் படையினர் திகைத்தனர். மறு கணம் நிதானித்துக் கொண்டு தெருவில் வருவோர் பாதிக்கப்படுவார்களோ என்ற கவலையுடன் கொள்ளையரை நோக்கிச் சுட்டார்கள்.

லூலூ பதிலுக்குச் சுட்டான். பொலிஸாரைப் போலவே அவனும் திறமையாகச் சுட்டான். அவன் ஒரு சாலையில் முட்டி போட்டு உட்கார்ந்து ஆணையாளர் ரோஜரை நோக்கித் தன் தானியங்கித் துப்பாக்கி மூலம் சுட்டான். ரோஜர் காயமடைந்தார்.

அந்த நிலையில் அவர் "லூலூவைப் பிடியுங்கள் லூலூவைப் பிடியுங்கள்" என்று கத்தினார்.

தெருவில் போய்க்கொண்டிருந்தவர்கள் பீதியில் கலைந்து ஓடினார்கள். பாவம் 73 வயதான மைக்கல் என்பவர் இரு தரப்புத் துப்பாக்கிச் சூட்டில் பலியானார். ஒன்றும் அறியாத அப்பாவிகள் பலியாகி விடக் கூடாதே என்று பொலிஸார் தம்மால் கூடிய மட்டும் எச்சரிக்கையுடன் நடந்து கொண்டனர்.

ஸ்கூட்டரில் கொள்ளையர் நால்வர் தப்பிச்செல்ல முயன்றனர். ஆனால், பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகம் அவர்களைச் சரணடைய வைத்தது.

ஒரு மணித்தியாலயத்தின் பின்னர் ஒரு சைக்கிலில் தன் இருப்பிடத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்த லூலூ கைது செய்யப்பட்டான். அவன் உடலில் பல பாகங்களிலும் இரத்தம் பெருகிக்கொண்டிருந்தது.

துப்பாக்கிச்சண்டை காரணமாகப் பணப்பை நடுத்தெருவில் கேட்பாரற்றுக் கிடந்தது. பத்திரிகை நிறுவனத்தின் காசாளர் அன்ட்றூவை பொலிஸ் ஆணையாளர் விசாரிக்க அழைத்ததுமே அவன் தான் கொள்ளையில் சம்மந்தப்பட்டிருப்பதை ஒப்புக் கொண்டு விட்டான். மார்ச்சர் மாத்திரம் பிடிபடவில்லை.

மார்ச்சரின் வீட்டின் முன்னால் மூன்று பொலிஸார் காத்திருந்தார்கள். அவன் எந்நேரமும் தோலுடை அணிந்திருப்பான், அவன் எப்பொழுதும் தன் வரவை வீட்டின் மணியை மூன்று முறை அடித்து அறிவிப்பான் என்பதை பொலிஸார் அறிந்திருந்தனர்.


மணி அடிக்கும் ஒலியைக் கேட்டார்கள். கதவு திறந்தது. தோலுடை தரித்த ஒருவன் வாசலில் நின்றிருப்பது தெரிந்தது.


பொலிஸாரின் துப்பாக்கிகள் ஒளியில் மின்னியதைக் கண்டான். துப்பாக்கியை எடுத்துச் சுடத் தொடங்கினான். பொலிஸ் சூட்டில் அவன் கீழே சாய்ந்தான்.

லூலூவையும் அவன் கூட்டாளியான மார்ச்சரையும் பிறகு கைது செய்தார்கள். சட்டம் 30 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீனரக உந்துருளி





நியூயோர்க் நகரத்தில் தாக்குதலுக்குள்ளாகிய உலக வர்த்தக மையக்கட்டடத்தை மீளக்கட்டுவதற்கான நிதியினைச் சேகரிக்கும் பொருட்டு போல் ரியூரல் என்பவரால் வடிவமைக்கப்பட்ட அமெரிக்கன் சொப்பர் எனும் நவீனரக உந்துருளியின் மீது நியூயோர்க் நகர மேயர் உட்கார்ந்திருக்கிறார்.

# தரையிறங்கிய விண்வெளி வீரர்கள்


விண்வெளியில் உள்ள நாசாவின் விண்வெளி ஆராய்ச்சிக்கூடத்தில் கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாக ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டிருந்த விண்வெளி வீரர்களான ரஷ்யாவைச் சேர்ந்த வொல்கோ மற்றும் ஜப்பானிய விண்வெளி வீரர் புறுக்காவா இருவரும் கடந்த 22.11.2011 இல் கஸகிஸ்தான், ஆர்க்கலிக் நகரிற்கு வெளியே தரையிறங்கினர். ரஷ்ய விண்கலமான சோயுஸ் இல் இருந்து இறங்குவதற்கு ரஷ்ய அதிகாரிகள் உதவிபுரிவதை இங்கு காணலாம்.

தரையிறங்கிய குழுவின் கட்டளையதிகாரியான மைக்போஸ்சம் தரையிறங்கிய சிலநிமிடங்களுக்குள் கதிரையில் இருத்தப்பட்டபடி மருத்துவ கூடாரத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறார்.






Hotel & Gastro formation



ஹோட்டல் துறையில் மேல்ப் படிப்பு இலவசம்

புறகிறஸ்சோ - இலவசம் - தொழில் மற்றும் துறைசார் நிபுணத்துவம்.

ஹோட்டல் முகாமைத்துவம், சமையல் மற்றும் சர்வி வேலைகளுக்கான தொழில் பயிற்சிகள். படிப்புக் காலங்களுக்கு வேலையிடத்தில் விடுமுறை பெற்றுத் தரப்படும்.

நேரடியாக இணையத்தில் அல்லது தொலைபேசி மூலம் பதிவு செய்யலாம்.

www.progresso-lehrgang.ch

| Hotel & Gastro formation | Eichistrasse 20 | 6353 Weggis
| Telefon +41 (0)41 392 77 33 | Fax +41 (0)41 392 77 70
| progresso@hotelgastro.ch | www.progresso-lehrgang.ch



உலகின் முதலாவது பல மொழி தமிழ் அகராதி, தமிழ், ஆங்கிலம், டொச், பிரெஞ்சு, இத்தாலி, நெதர்லாந்த், டெனிஸ், சுவிடிஸ், சிங்களம் ஆகிய பத்து மொழிகளைக் கொண்ட அகராதி, உங்கள் கைபேசியில் தொலைபேசியில் பதிந்துக்கொள்ளலாம்.
மொழி பயில்பவர்கள், பாடசாலை மாணவர்கள், ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் செய்பவர்கள் அனைவரும் வைத்திருக்க வேண்டிய ஒரு மென்பொருள்.
தொடர்புகளுக்கு மூர்த்தி மைண்ட்ரர்,


இலங்கைத் தொடர்புகளுக்கு 077 266 36 25,

Tel. 0041 61 813 15 52

www.tamilkadai.ch

உங்கள் கைபேசியில்

für Handy



பல மொழி அகராதி

Sprache Wörterbuch

ஏஜண்டுகளுக்கு நல்ல கமிசன்



# Sudar Oli


வார மலரை ஐரோப்பாவில்
தபால் செலவை மட்டும் செலுத்தி வாராந்தம்
இலவசமாகப் பெற்றுக்கொள்ளவும்.
பிறந்தநாள் வாழ்த்துக்கள், மரண அறிவித்தல்கள்
மற்றும் அனைத்து விளம்பரங்களும்


Sudaroli, Post fach 60,
4302 August, Switzer land,
Tel: 0041 61813 15 52

Mail: info@tamilkadai.ch


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகர்க்கப்பட்ட கட்டடம்!







50 ஆண்டுகள் பழமையான கட்டடமொன்று வெடிவைத்து தகர்க்கப்படும் போது எடுக்கப்பட்ட காட்சிகள் தான் இவை. 17 மாடிகளைக் கொண்ட இக்கட்டடம் 1964 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

கட்டடத்தினுள் ஒரு சில வெடிப்புகள் காணப்படுவதாலும், பல ஆண்டுகால பழமையானதாலும் இந்தக் கட்டடத்தை தகர்த்து விட்டு புதிய கட்டடமொன்றை அமைக்குமாறு அரசு உத்தரவு பிறப்பித்தது.


அதன்படி 12,000000 தொன்கள் நிறையுள்ள இக்கட்டடம் 54Kg நிறையுள்ள வெடி பொருட்கள் மூலம் தகர்க்கப்பட்டது.

அருகிலுள்ள வீடுகளுக்கும் மக்களும் சேதமில்லாமல் நடைபெற்ற இந்த வெடிப்பை பலரும் கண்டுகளித்தனர்.

## துண்டிக்கப்பட்ட விரல் வயிற்றில்

சீனாவில் தொழிலாளி ஒருவரின் துண்டான விரலை அவரது வயிற்றில் வைத்து அறுவை சிகிச்சை செய்துள்ளனர். சீனாவைச் சேர்ந்த 20 வயது வாங் யான்ஜுன் தச்சு வேலை செய்து கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக இவரது நடுவிரல் நுனி துண்டானது.


துண்டான விரல் பாகத்தை எடுத்துக் கொண்டு மருத்துவமனைக்கு ஓடினார் வாங் அதற்குள் ஏராளமான ரத்தம் வெளியேறி இருந்தது. வாலிபரைப் பரிசோதித்த மருத்துவர் துண்டான பாகத்தை விரல் நுனியுடன் சேர்க்க முடியாமல் நசுங்கி இருப்பதைப் பார்த்தனர். உடனடியாகச் சிகிச்சை அளிக்கா விட்டால் நடுவிரலை இழக்கும் அபாயம் இருந்ததை அறிந்தனர். மருத்துவர்கள் அவசரமாக ஆலோசித்து துண்டான விரலை வயிற்றுடன் இணைத்து அறுவைச் சிகிச்சை செய்தனர்.



ஹீவாங் கூசா, வேறுவழியில்லாமல் அவரது விரலை வயிற்றுடன் இணைத்து வைத்து விட்டோம். முதலில் விரலுக்கு ரத்த ஓட்டம் சீராக வேண்டும். அதன் மூலம் விரல் நுனி தானாகவே வளர வாய்ப்புள்ளது. ஒரு மாதத்துக்குப் பின் வயிற்றில் இருந்து விரலைப் பிரித்து விடுவோம். அறுவைச் சிகிச்சை முழு வெற்றி அடைந்துள்ளது என்றார் மேலும் சதை வளரத் தொடங்கி உள்ளது. அதுவரை கைவிரலும் வயிறும் இணைந்தே தான் இருக்கும் என்றும் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.


## இராட்சத குளவி





குளவி என்றால் பயம் கொள்ளாத மனிதர்களே இருக்க முடியாது. சாதாரணமாக குளவியில் ராஜா மற்றும் ராணி என்பதைப் பார்த்திருப்போம். ஆனால் ஆசியாவிலேயே இராட்சத உருவம் கொண்ட குளவி காணப்படுகிறது. ஏறத்தாழ 50.8 மி.மீ. நீளமுடையதாகும். மேலும் இந்தக் குளவியில் ஆண் குளவியின் இறக்கையின் நீளம் 76 மி.மீ. ஆகவும், பெண் குளவியின் இறக்கையின் நீளம் 55 மி.மீ. ஆகவும் காணப்படுகின்றது.

## பிளக்பெரிக்கு ஜிமெயில் இல்லை!





கைபேசிகளுக்கான Android software இனைத் தயாரிக்கும் கூகுள் தற்போது பிளாக்பெரி ஸ்மார்ட் கைபேசி பயன்படுத்துவோருக்குத் தனது ஜிமெயில் சேவையை நிறுத்த முடிவு செய்துள்ளது.

கைபேசியில் ஜிமெயில் சேவையைக் கொண்டு வருவதில் கடந்த சில ஆண்டுகளாக கவனம் செலுத்தி வருவதாகவும் இதில் மேலும் பல முதலீடுகள் செய்ய உள்ளதாகவும் கூகுள் நிறுவனம் தெரிவித்துள்ளது. நவம்பர் 22ம் திகதி முதல் பிளாக்பெரி பயன்படுத்துபவர்களுக்கு ஜிமெயில் சேவை நிறுத்தப்படும் எனவும் ஏற்கனவே ஜிமெயில் பிரவுசரை டவுண்லோட் செய்து வைத்திருப்பவர்கள் ஜிமெயில் சேவையைத் தொடர்ந்து பயன்படுத்தலாம் எனவும் கூகுள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

## செயற்கை இறைச்சி!

இறைச்சிக்காக கோழி, ஆடு, மாடுகளைக் கொல்ல வேண்டியதில்லை. அதற்குப் பதிலாக ஆய்வு கூடத்திலேயே இறைச்சியைத் தயாரிக்கும் முயற்சியில் நெதர்லாந்து விஞ்ஞானிகள் முயற்சித்துள்ளனர்.



நெதர்லாந்தில் உள்ள மாஸ்ரிட் பல்கலைக் கழகத்தில் இந்த புதிய முயற்சி தொடங்கப் பட்டுள்ளது. இந்த ஆய்வில் ஈடுபட்டுள்ள மார்க்போஸ்ட் என்ற விஞ்ஞானி கூறுகையில், உயிரினங்களைக் கொல்லாமலே ஆய்வுக்கூடத்தில் இறைச்சியைத் தயாரிக்கும் முயற்சி வெற்றியடைந்துள்ளது. விலங்குகளின் உடலில் இருந்து எடுக்கப்படும் செல்களில் இருந்து இந்த இறைச்சி தயாரிக்கப்படுகிறது. இந்த இறைச்சி உற்பத்தி மூலம் விலங்கினங்கள் பாதுகாக்கப்படுவதுடன் சுற்றுச் சூழலும் பாதுகாக்கப்படும். மேலும் வேறுபாடு இல்லாமல் இந்த இறைச்சி உண்மையான இறைச்சியாக இருக்கும். வருங்காலத்தில் இந்த இறைச்சி தயாரிப்பில் பெரிய முன்னேற்றம் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைப் புனல்



## ஆக மொத்தம் வேதனைதான்



எழுத் தெழுத் தினைந் தினம் எமக்கென — அதை
ஏந்தி ஏந்திப் பொருள் அமைத்தார் ஏற்புடனே ---

ஆகாது இருந்துமில்லை என்று குறள்போல் — அதன்
கருத்தினைத் தாக்கிடும் திருந்துவர் ---

வாழ்வதற்கு வழிமுறைத்தாய் இவ்வுலகிலே — இவ்வெ
ண்ணமுறை போடவானார் வாழ்வோர் ---

எது அதிலே கொண்டவர்கள் வாழ்விலே — இந்த
ஏழையொன்று வெட்கினேன் நான் அறிவிலே ---

ஐய உந்தன் அறவுரைகள் ஐவரேல் — அதன்
அடிமைகளேதோ? முடிமைகளேதோ? அறிவீரோ ---

பிறப்போடு விந்தையாய் ஆகுமா? — அந்த
பிறவி மேற்பட்ட கலைகளாலும் கூடுமோ? ---

பயின்ற வரிகளின் தன்னிலே — ஐய
ஏந்தலாய் ஏங்கின்றாய் பேரரசே ---

தெரியலையே அறியலையே இவ்வுலகில் — பேசல
தெரிந்திருந்து மறைந்தவரும் இங்குளர் ---

ஓரிரண்டு குறள் அறைகில் பாமரர்? — இந்த
ஓதுவார் கொண்டு தின்றால் பாவமோ? ---

வேறு ஒன்றும் ஆவலில்லை மெய்யனே — அன்பு
வேண்டுவது ஒன்று கொண்டால் போதுமே ---

நீதியில்லை நேர்மையில்லை வாய்மையோ — நீதம்
நிலைக்கவில்லை நடக்கவில்லை நாடுவோ ---

அன்று இல்லாமல் பல்பு இல்லை ஐயனே — ஆனால்
அழகிய முகமும் கலையிலே ---

மன நிம்மதியோ மன்னவர்க்கில்லை பெரியனே — தினம்
பல நேரம் கொண்டார் நிறைவுதானோ ---

ஆகமொத்தம் வேதனைதான் வள்ளுவா — தமிழர்
அனுபவிக்க வேதனையை இன்றும் சொல்வதா? ---

- திவக தியாகன்



## நியாயம்...!

மறுக்கப் படாத நியாயங்கள்
வழங்கப் படாதது துரோகம்
குறைக்க முடியாமல்
பொருட்களின் விலையை
உயர்த்திச் செல்வதில்
உள்ளதா நியாயம்?

பாதை விஸ்தரிப்பும்
பாலங்கள் புனரமைப்பும்
மிகப் பிரமாதம்!

பரம்பரை பரம்பரையாக
வாழ்ந்து வந்த
வாழ்விடங்களை
வழங்கிடாது
தடுப்பது என்ன நியாயம்?

-சேனையூரான்

## அன்பு அம்மா



பத்துத் திங்கள் எனைச் சுமந்து
பக்குவமாய் பெற்றவளே
ஓய்வினை அறியாது
எமக்கென்றும் உழைப்பவளே

பள்ளி நாம் விளையாட
துன்பமெல்லாம் மறந்தாயோ
பள்ளி விட்டு நாம் வர
பாசத்துடன் அணைப்பாயே

ஆடை, ஆபரணம் எமக்கு அணிந்து
அழகுபார்த்து இரசிப்பாயே
தட்டுதலிலே நாம் உடவர
நாள் தோறும் உடைப்பாயே

எத்தனை கோடி கொடுத்தாலும்
தாயின்று கடவாது.
அன்பான தாயே!
வாழ்நாளெல்லாம் நீ வாழ்க!

— ச.மரியான்

## தோல்வி



தோற்றுக் கொண்டிருக்கிறேன்
ஒவ்வொரு நொடிகளிலும்

மறந்துவிடச் சொன்ன
உன்னை மறக்கமுடியாமல்.....

பா.பொன்நிலவன்

## கார்த்திகை மாதம்



விண்மீன்கள் விளக் கேற்றும்
விடியலை எதிர்பார்த்து
காத்திருக்கும் கார்த்திகை மாதம்.
எழுதாத விதியொன்றை
சிலுவையென சுமந்து
கல்லறை போல் சேர்த்திட்ட
இக்கால வேஷதாரிகளை
கண் பார்த்து - தாம்
தொழுதிட முடியாமல்
கண்ணீர் பூக்களால்
நெஞ்சில் அர்ச்சித்து நிற்கிறோம்.
கார்த்திகை மழைபொழிந்தால்
கை நிறைய மலர் விளையும்
எம் மழை பொழிந்தால்
இன்று கண்களைத் திறக்கிறோம் தாம்!

— வித்தாவி



## புரியாத அன்பு

அன்பே என்று சொன்னேன்
அழகே என்று கவிதை புனைந்தேன்!
ஆயிரமாயிரம் உன் நினைவுகளை
சுமந்தேன் - என் நெஞ்சத்தில்
உன்னைத்தானே குடி புகுத்தினேன்!
என்னதான் உனக்கு நான்
செய்ய மறுத்தேன் - ஆனால்
நீ எனக்கு தந்தவை - வெறும்
காயங்களும் ரணங்களுமே - நீ
என்னைப்புரிந்து கொள்ளாதது கூட
வருத்தமில்லை - என்
அன்பைக் கூட புரியமறுத்து விட்டாயே!

- ரி.ஜே.கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சந்தோஷ் சிவனின் உறுமி

வாஸ்கோடகாமாவின் மரணத்தின் பின்னணியை வைத்து சந்தோஷ் சிவன் உருவாக்கியிருக்கும் சரித்திரப் படமான உறுமியில் பிருத்விராஜ், ஜெனிலியா, பிரபுதேவா, பிந்துமாதவி, வித்யாபாலன் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். தீபக்தேவ் படத்துக்கு இசையமைத்துள்ளார்.



## மௌனகுருவாக நடிக்கப் பயம்

மௌனகுரு படத்தில் நடிக்கப் பயந்தேன் இப்படம் என்னை திறமையான, நடிகனாக ரசிகர்களிடம் அடையாளம் காட்டும். டைரக்டர் சாந்தகுமார் சொன்ன கதையை முதலில் கேட்டபோது, இந்த கேரக்டருக்கு நான் தாங்குவேனா என்ற பயம் ஏற்பட்டது. டைட்டில் தான் மிருதுவாக இருக்குமே தவிர, எனது கேரக்டர் ஆக்ரோஷமாக இருக்கும். இவ்வாறு அருள்நிதி கூறினார்.

## தம்பி வெட்டோத்தி சுந்தரம்



ரவுடி இளைஞனின் நிஜக்கதை. கேரள எல்லையில் உள்ள வெட்டோத்தியை சேர்ந்தவன் சுந்தரம். ஆசிரியர் வேலைக்கு முயற்சிக்கும் பட்ட தாரி.
லஞ்சம் போலீஸ், ஆசிரியர் வேலைகளை அவனு
கிறது. தனது வீடு ஏலத்திற்கு போகிறது, சக நண்ப
தூக்கில் தொங்குகிறான். இவை சுந்தரம் மனதை
தொழிலுக்கு தாவுகிறான். அவனை உள்ளூர் தாத
கட்டத்தில் அவளுக்காக கடத்தலை விட்டு நல்ல
பிறகு நடப்பவை உலுக்கும் கிளைமாக்ஸ். கரணு
படம். வெட்டோத்தி சுந்தரமாக வாழ்கிறார் அ
புத்திமதிகள் சொல்லியும், இல்லாதவர்களுக்கு உ
றார். உயிரைக் காப்பாற்றிய சரவணனுக்காக கட
டம் சிக்காமல் எல்லை தாண்டி ஓட்டி செல்வது

கடத்தலில் கோடி கோடியாய் சம்பாதித்து க
தும் மிடுக்கு. காதலில் பூரிப்பு காட்டுகிறார். சண்
துடுக்கான காதலி. திருமணம் நின்றதும் தவிப்புக்
நகைகள் மாட்டி கடத்தல் தொழிலில் சண்டியர
மான கேரக்டர். நட்பு, வேகம், இரக்க குணாதிச
சிலுவை கேரக்டரில் வில்லனாக வரும் ஜே.எஸ்.
குரூர வில்லன்கள். போலீஸ் அதிகாரி நந்தா சர
ணத்தில் சிக்கி ஒருத்தொருக்கொருத்தர் வெட்டி
பதற வைக்கின்றன.

வித்தியாசமான அக்ஷன் கதை களத்தில் காட்
நகர்த்தி முன்னணி இயக்குனர் வரிசையை எட்டி
வி.சி. வடிவுடையான். நண்பன் கரண் திருமண
லொஜிக் இல்லை. வித்யாசாகர் இசையில் வைர
மனதை வருடும் ரகம்.

## அமலாபால் நீக்கம்



தனுஷ் படத்திலிருந்து என்னை வேண்டுமென்றே நீக்கினார்கள் '3' படத்தை விட்டு நான் வெளியேறவில்லை. கால்ஷீட் பிரச்சினையும் இல்லை. வேறு எந்த முக்கிய காரணமும் இல்லை. என்னை நீக்கியதற்கு என்ன காரணம் என்பது எனக்குத் தெரியும். படம் வெளியிடப்போகும் இப்போது அதைப் பற்றி பேசுவதில் பயனில்லை என்று நடிகை அமலாபால் கூறினார்.



## காஜல் முன்னணி நாயகியானார்

தற்போது தெலுங்கு, தமிழ் என இரு மொழிகளிலும் முன்னணி நாயகியாக வலம் வருகிறவர் காஜல். தமிழில் சூர்யாவிற்கு ஜோடியாக 'மாற்றான்', தெலுங்கில் ஜூனியர் என்.டி. ஆருடன் ஒரு படம் மற்றும் ராம் சரண் தேஜா உடன் ஒரு படம் என நடித்து வருகிறார். விஜய் படத்தின் நாயகியாகவும் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார். 'மாலை நேர மழைத்துளி' எனப் பெயரிடப்பட்டிருக்கும் இப்படத்தினை இயக்க இருக்கிறார் ஏ.ஆர்.முருகதாஸ்.



## இயக்குனருடன் நடிப்

முதன் முதலாக இயக்குனருடன் நடி
வித்தகன் படத்தில்தான். கிறிஸ்தவப் பெ
டர். பார்த்திபன் செய்யும் எல்லாவற்றுக்
மட்டுமே சாட்சி. பாடல் காட்சியில் வெ
நடனக் கலைஞர்களுடன் ஆடியது புதி
மாக இருந்தது. இயக்குனர்களே ஹீரோ
கும் போது அவர்களுடன் நடிப்பது கடி
என்பது புரிந்தது. மற்ற படங்களை விட
கூடுதல் அழகாக இருப்பதாகச் சொல்கி
என்கிறார் பூர்ணா.



## விஜய்க்கு ஜோடியாக ப்ரியா ஆனந்த்!

இளைய தளபதி விஜய், முருகதாஸ் இணையும் படம் குறித்து நாளுக்கொரு செய்தி என சூழல் சூடாகி வருகிறது. விஜய்க்கு ஜோடி குறித்து பல தகவல்கள் வெளியாகின, ஆனால் இளைய தளபதி விஜய்க்கு ஜோடி தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது. 'வாமனன்', '180' படத்திங்களில் ஹீரோயனாக நடித்த ப்ரியா ஆனந்த் தான் விஜய்க்கு ஜோடியாக நடிக்கிறார். இதுமட்டுமின்றி பாலிவுட் புயல் பிரியங்கா சோப்ராவையும் நடிக்க வைக்க ஏ.ஆர் முருகதாஸ் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

## விமர்சனத்



டைய 'வேட்டை' ப
என்கிறார் அவர். '
ஆர்யா, மாதவன் இ
களாக நடித்திருக்கி
போட்டி போட்டு
கும் இந்தப் படத்தி
அளவிற்கு இருக்கு
யாகக் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமர்சனம்



பர் வேலைகளை அவனுக்கு கிடைக்கவிடாமல் செய்
ற்கு போகிறது, சக நண்பன் வேலை கிடைக்காமல்
இவை சுந்தரம் மனதை ரணமாக்குகிறது. கடத்தல்
. அவனை உள்ளூர் தாதா மகள் காதலிக்கிறாள். ஒரு
கடத்தலை விட்டு நல்லவனாக மாற முயற்சிக்கிறான்.
நம் கிளைமாக்ஸ். கரணுக்கு திருப்புமுனையான
ந்தரமாக வாழ்கிறார் அவர். படித்த அறிவாளியாய்
, இல்லாதவர்களுக்கு உதவியும் மனதில் இறங்குகி
றிய சரவணனுக்காக கடத்தல் லொரியை போலீசி
தாண்டி ஓட்டி செல்வது விறு விறு...
காடியாய் சம்பாதித்து கார், பங்களா என உயர்ந்த
ரிப்பு காட்டுகிறார். சண்டையில் வேகம்... அஞ்சலி
ணம் நின்றதும் தவிப்புக் காட்டுகிறார். கழுத்து நிறைய
ல் தொழிலில் சண்டியராக வரும் சரவணன் அழுத்த
வேகம், இரக்க குணாதிசயங்களில் சுழன்றடிக்கிறார்.
ல்லனாக வரும் ஜே.எஸ். பாலாசிங், சண்முக ராஜன்,
லீஸ் அதிகாரி நந்தா சரவணனின் பழி தீர்க்கும் நரித்த
ருக்கொருத்தர் வெட்டி விழும் கிளைமாக்ஸ் சீன்கள்

ஷின் கதை களத்தில் காட்சிகளை விறுவிறுப்பாக
க்குனர் வரிசையை எட்டி பிடிக்கிறார் டைரக்டர்
நண்பன் கரண் திருமணத்தை சரவணன் நிறுத்துவதில்
பாசாகர் இசையில் வைரமுத்துவின் பாடல் வரிகள்

## பாகன் என்ன கதை?



ஸ்ரீகாந்த், ஜனனி அய்யர், ஜோடியாக நடித்த படம் 'பாகன்'. யானை எவ்வளவு பெரிய உருவமாக இருந்தாலும், அதை அடக்கி ஆள்பவன் பாகன். தனது வாழ்க்கையை லட்சியத்துடன் அடக்கி ஆள்பவன் ஹீரோ. வாழ்க்கையில் முன்னுக்கு வர ஆசைப்பட்டு, வாய்ப்பு கிடைத்தும் வெளிநாடு செல்லாமல், தன் சொந்த மண்ணில் உழைத்து முன்னுக்கு வருகிறார் ஸ்ரீகாந்த். ஜனரஞ்சகமான படமாக உருவாகும் இதன் ஷூட்டிங் பொள்ளாச்சி, மும்பையிலுள்ள லோனாவாலா பகுதிகளில் நடந்து வருகிறது.

## அனுஷ்கா வீட்டில் சோதனை!



நடிகை அனுஷ்கா வீட்டில் வருமான வரி அதிகாரிகள் திடீர் சோதனையில் ஈடு பட்டனர். இதில் கணக்கில் காட்டாத பணம் கைப்பற்றப் பட்டதாக கூறப்படுகிறது. அருந்ததி, தெய்வத் திருமகள் உள்ளிட்ட பல்வேறு படங்களில் நடித்திருப்பவர் அனுஷ்கா. தெலுங்கிலும் முன்னணி நடிகையாகத் திகழ்கிறார். இவரது வீடு ஐதராபாத்தில் பஞ்சாரா ஹில்ஸ் பகுதியில் உள்ளது.

## இலியானாவுக்கு எதிர்ப்பு



தமிழ், இந்திப் படங்களில் பிசியாக இருந்ததால், கடந்த எட்டு மாதங்களாக தெலுங்கில் படம் நடிக்கவில்லை இலியானா. இதையடுத்து இப்போது அல்லு அர்ஜுன் ஜோடியாக நடிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார். பெயர் வைக்கப்படாத இந்தப் படத்தை திரிவிக்ரம் இயக்குகிறார். இதன் ஷூட்டிங் ஐதராபாத்தில் உள்ள மியாப்பூர் அருகே தனியார் மருத்துவமனையில் தொடங்கியது. இதைக்கேள்விப்பட்டு அங்கு வந்த தனித் தெலுங்கானா ஆதரவாளர்கள், படப்பிடிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தெலுங்கானாவுக்கு ஆதரவு தெரிவித்தும் கோஷம் எழுப்பினர்.

## க்குனருடன் நடிப்பது கடினம்

ாக இயக்குனருடன் நடித்திருப்பது
ல்தான். கிறிஸ்தவப் பெண் கேரக்
செய்யும் எல்லாவற்றுக்கும் நான்
பாடல் காட்சியில் வெளிநாட்டு
களுடன் ஆடியது புதிய அனுபவ
இயக்குனர்களே ஹீரோவாக நடிக்
களுடன் நடிப்பது கடினமானது
மற்ற படங்களை விட இதில் நான்
இருப்பதாகச் சொல்கிறார்கள்
ர.



## தல-தளபதி இணைவார்களா?



இந்தியில் எத்தனை முறை பார்த்தாலும் சலிக்காமல் ரசிக்க வைக்கும் படம் 'சோலே'. 1975ஆம் ஆண்டு வெளி வந்த இந்த படத்தை தமிழில் ரீமேக் செய்ய திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அதுவும், இளைய தளபதி விஜய்யும், அல்டிமேட் ஸ்டார் அஜித்தையும் வைத்து தமிழில் ரீமேக் செய்ய திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

## விமர்சனத்துக்கு முடிவு




லிங்குசாமி படம் ஒரு வரியில் சொல்லிவிடலாம்' என நிலவும் விமர்சனத்துக்கு, தன்னுடைய 'வேட்டை' படம் முடிவுக்கட்டும் என்கிறார் அவர். 'வேட்டை' படத்தில் ஆர்யா, மாதவன் இரண்டு பேரும் சகோதர்களாக நடித்திருக்கிறார்கள். இரண்டு பேரும் போட்டி போட்டு நடிப்பில் அசத்தியிருக்கும் இந்தப் படத்தின் கதை மனசைத் தொடும் அளவிற்கு இருக்கும் என லிங்குசாமி உறுதியாகக் கூறினார்.

## அசினுக்கு முத்தம் கொடுக்கும் ஜொள்ளு நடிகர்

பாலிவுட் டொப் ஹீரோக்கள் ஆமிர்கான், சல்மான்கான் போன்றவர்களைக் கவர்ந்த அசின் இளம் நடிகர்களின் கனவுக் கன்னியாகவும் மாறி இருக்கிறார். இவருக்கு நடிகர் கமால் ஆர் கான் என்பவர் தினமும் முத்தம் கொடுத்து தொல்லை தருகிறார். இந்த முத்தத்தை தனது வெப்சைட் மூலமாகத் தருவதால் அவருக்கு பதிலடி தர முடியாமல் தவிக்கிறார் அசின். 'தேசத் துரோகி', 'சிட்டம் உள்ளிட்ட பல்வேறு படங்களில் நடித்திருப்பவர் கமால் ஆர் கான். இவர் படங்கள் தயாரித்து இயக்கியும் இருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சிறுகதை

# சீதனம்

■ க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

அந்த நினைவுகள் மிக விசாலமானவை. வழமையாக நினைவுகள் பல வந்து வந்து போனாலும் நெஞ்சை அவை வருடியதுமில்லை. கொடிய வடுக்களை விட்டுச் சென்றதுமில்லை. அர்த்தமில்லாமல் அந்த நினைவு மட்டும் மாலதியின் மனதைக் குடைந்து, குடைந்து, கொத்தத் தொடங்கியது.

சே! என்ன உலகம் இது..... எப்படித்தான் ஒரு பெண் மேதையாகவும் பார்ப்பதற்கு இலட்சணமாக இருந்தாலும் வசதியற்ற குடும்பத்தில் பிறந்துவிட்டால் வாழ்வே சூன்யமாகி அவள் புறந்தள்ளப்படுகிறாள். புறக்கணிக்கப்படுகிறாள். பெண்ணியம் பற்றியும், பெண்ணின் பெருமையைப் பற்றியும், வாய்கிழியக்கத்தும் சீர்திருத்தவாதிகளும், சிந்தனையாளர்களும், வெறும் மேடைப் பேச்சுடன் மட்டுமே மேதாவிகள் போல் வேடமிடுகிறார்களே தவிர உண்மையான யதார்த்தங்களை நடைமுறையில் பின்பற்றத் தவறிவிடுகின்றனர்.

புரோக்கர் பொன்னம்பலம். அச்சொட்டாக கூறிய வார்த்தைகள் அவள் காதுகளில் இன்னும் ஒலித்துக் கொண்டிருந்தன. "பெண்ணை மாப்பிள்ளைக்கு பிடிச்சுக் கொண்டுதாம். இருந்தாலும் காசாக இருபது இலட்சமும், வீடும் நகையும் அப்படியே மாப்பிள்ளையின் சகோதரிக்கு பத்து இலட்சமும் இனாமாகக் கொடுத்தால் போதும்.

மாப்பிள்ளையின் தகப்பனார் கொஞ்சம் கூடத்தான் கேட்டவர் நான் ஒரு மாதிரி குறைத்து சமாளிச்சிட்டன். நீங்கள் உங்கடை முடிவை இரண்டு நாளைக்குள் யோசிச்சுச் சொல்லுங்கோ. இல்லாட்டி வேறை இடமொன்டு இருக்குது. இப்படியொரு நல்ல குடும்பம் உங்களுக்குக் கிடைக்கிறதுக்கு நீங்கள் கொடுத்து வைக்க வேணும்...."

அலுவலகம் நோக்கிச் சென்ற மாலதியின் மனம் அலைபோல் அந்தரித்துக்கொண்டது. அன்றைய பணிகளை வேண்டுமென்றே ஒதுக்கி வைத்தாள். மனம் எதிலும் லயப்பட வில்லை. புரோக்கர் பொன்னம்பலம் கூறியவார்த்தைகள் அவளைப் புல்லரிக்கச் செய்தன. தனக்காக தன் தந்தை வரன் பார்த்து மீண்டும் மீண்டும் தோற்றுப்போனதை நினைத்து அவள் அழுது கண்ணீர் விட்டாள்.

"என்ன மாலதி தனிமையிலிருந்து நீ...என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்?" என்று அவளின் உயிர்த் தோழி கல்பனாவின் குரல் கேட்டு சுய நினைவிற்கு வந்தவளாய், "ஒன்றுமில்லை.... கல்பனா வந்து... வந்து உடம்பிற்குக் கொஞ்சம் சரியில்லை" என்று மழுப்பிய மாலதியை பரிதாபத்துடன் நோக்கினாள் கல்பனா. "இல்லை; மாலதி உன் மனதிலை ஏதோ ஒன்றை மறைத்து வைத்து உனக்குள்ளே போராடிக் கொண்டிருக்கிறாய்.....அதை எனக்கு நீ...சொல்லக் கூடாதா...? உன்னைப் பற்றி எனக்கு நல்லாய்த் தெரியும். நேற்று இன்று மட்டும் உன்னோடு நான் பழகவில்லை. அது உனக்கும் தெரியுந்தானே" அவள் அன்பு கலந்த வார்த்தையில் மாலதியும் மனம் மாறிக் கொண்டாள்.

கல்பனா சொன்னது போல் இருவரும் இணை பிரியா நண்பிகள்தான். இருவரும் இன்ப துன்பங்களை தங்களுக்குள் பகிர்ந்து கொள்வது முண்டு. புரோக்கர் பொன்னம்பலம் தன் திருமணப் பேச்சை ஆரம்பித்து பேரம்பேசியதை அப்படியே ஒன்றும் விடாமல் கூறிமுடித்தாள் மாலதி.

"ஏ! மாலதி இதுக்காக போய் உன் மனதை அலட்டிக்கொள்ளாதே. உனக்காக இறைவன் ஒருவனைப் படைத்திருக்கிறான். காலம் வர எல்லாமே நல்லதாகக் கைகூடும்"

அவளின் வார்த்தையால் மாலதியின் மனம் சற்று அமைதியடைந்த போதும் "இல்லை! கல்பனா சீதனமில்லாமல் இந்தக்காலத்திலை மணம் முடிப்பதென்றால் முடியாத காரியந்தான். நிறைய எதிர்பார்க்கிறார்கள். பட்டதாரியாக இருந்தாலென்ன, கல்விமான்களாயிருந்தாலென்ன... ஊருக்குத்தான் உபதேசம் செய்கிறார்கள். நிஜவாழ்க்கையில் அவர்களும் எதிர்மாறுதான் என்னைக் கல்யாணக் கோலத்தில் காண என்பெற்றோர் ஆசைப்படுகிறார்கள். வரன் பார்க்கும் படலத்தில் நான் கதாநாயகியாய் நடித்து பல முறை தோற்றுவிட்டேன். இலட்சங்களிலே தான் அவர்கள் இலட்சியங்கள் தங்கியுள்ளன. பெண்ணுரிமை பெண்விடுதலை, வரதட்சணை ஒழிப்பு, என்றெல்லாம் மேடைகளில் மட்டும் பிரச்சாரம் செய்கின்றார்கள். நடைமுறை வாழ்க்கையில் இவை சாத்தியப்பட்டு வருவதில்லை. என்னைப் போல எத்தனையோ முதிர்கன்னிகள் இன்னும் கல்யாணக் கனவுகளுடன் தான் காலங்கடத்துகிறார்கள். கல்யாணச் சந்தையில் ஏலம் போக மறுத்த என் வாழ்வு எதிர்பார்ப்புக்களை கடந்து செல்கின்றது. எம்மண்ணின் கலாச்சார பண்புகள் மகத்தானவை. மேலைத்தேய கலாச்சாரக் கூறுகள் ஊடுருவிடும் போது தமிழன் கலாச்சாரம் தொன்றுதொட்டு பழமையானது. பண்பாடுகளை தன்னகத்தே கொண்டது. இந்தப் பண்பாடுகளில் ஊறிப்போனதுதான் பெண்ணியம். பல படித்த மேதாவிகள் கூட பண்பான எம்மண்ணுக்கான கலாச்சாரத்திலேதுவான பெண்களை வாழ்க்கைத் துணைவியாக ஏற்க விரும்புவதில்லை. நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகப் படிப்பும் பட்டமும் வசதியிருந்தால் மட்டும் போதாது. ஒரு நல்ல குடும்ப வாழ்க்கையும் அமைந்தால் தான் அந்த வாழ்க்கையும் பல்கலைக் கழகமாகும். பணக் காசும் பொருளையும் சீர்வரிசையாகப் பெற்ற பலர் குடும்பப் பிளவுகளால் சீர்குலைந்து பிறழ்வுபட்டுப்போய் பிரிவினையால் வாழ்விழந்து தவிக்கின்றனர். நான் அதிகமாகப் பிரசங்கம் செய்பவளில்லை. "கல்பனா! என் நிலைமையை நீயாவது கொஞ்சம் புரிந்துகொள்வாய் என நினைக்கிறேன்"

அவள் கூறியதில் நியாயம் இருப்பதாகவே கல்பனாவிற்குப் பட்டது. சிலையாகச் சமைந்து போன கல்பனாவால் பேசமுடியவில்லை. "இல்லை கல்பனா என்னைப்போல கல்யாணச் சந்தையில் ஏலம் போகாத கன்னியர்களைப் பற்றி கொஞ்சம் நினைத்துப்பார். சீதனப்பேய் தலைவிரித்தாடும் இந்தச் சமுதாயத்தில் நீ என்ன சொன்னாலும் அது எடுபடப்போவதில்லை. முதிர்கன்னியாய் இன்னும் எத்தனையோ பேர்கள் மணம் வீசாமல் மறைந்து வாழ்கின்றனர். சமுதாயக் கட்டமைப்பில் சீதனமும் சீர்வரிசையும் ஒன்றிப் போய் விட்டது. இதை யாராலும் அழிக்கவோ அகற்றவோ முடியாது"

அலுவலகம் முடிந்து பேருந்தில் தன் வீடு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தாள் அவள். பேருந்து பிரயாணிகளால் நிரம்பிவழிந்து கொண்டிருந்த அந்தப் பேருந்தில் தற்செயலாக மாலதியின் காலடியில் ஏதோ ஒரு பார்சல் தட்டுப்படுவதை உணர்ந்து அதை அவள் கையில் எடுத்தாள். அங்கிருந்தவர்களிடம் அது பற்றி விசாரித்தாள். எவருமே சொந்தம் கொண்டாட முன்வரவில்லை. தனது கைப்பையுடன் சேர்த்து அந்தப் பார்சலையும் எடுத்துக் கொண்டவள் அவளது இறங்கும் இடம் வந்த அவசரத்தில் இறங்கிவிட்டாள். கையிற் கனத்த பொதி பற்றி அறிய [illegible]

கீழிறங்கிய வேகத்திலேயே அதனை ஆராய்ந்தாள். அத்தனையும் ஐயாயிரம் ரூபா புது நோட்டுகள். அவற்றைப் பாதையில் வைத்துக் கணக்கிடப் பயந்தாள். வீட்டுக்கு எடுத்துச் சென்றவள் பார்சலில் அடையாளங்கள் உள்ளனவா என ஆராய்ந்தாள். எங்கோ ஒரு மூலையில் பார்சலில் ஒட்டிக் கிடந்தது. உரிமையாளரின் முகவரியோடு கூடிய பெயர். அவளின் முகம் ஆச்சரியத்தால் விரிந்தது. அந்த முகவரிக்கு உரியவன்தான் அவளை அன்று பெண் பார்க்க வந்த இராகவன். காசைக் கணக்கிட்டாள். என்ன செய்யலாம்! வீட்டிலுள்ளவர்களோடு அது பற்றிக் கலந்து கொண்டாள். அவளைத் தவிர வீட்டில் எல்லோருமே சத்தம் போடாமல்.. அதனை எடுத்துக் கொள்வோம். அவன் தானே சீதனம் கேட்டு உன்னை வெறுத்தொதுக்கியவன் என்று சொன்ன போது.

"இல்லையம்மா இந்தப் பணம் எங்களுடையதல்ல. அவன் யாராக இருந்தாலும் காசை அவனிடமே கொடுத்துவிடுவோம்" என்றாள் அவள். அதற்கான பிடிவாதமும் அவளிடமிருந்தது.

அப்போது தொலைந்த பணம் கிடைக்காது என்று ஏங்கி அலைந்த இராகவன் மாலதி அனுப்பிய அந்தச் செய்தி அறிந்து மகிழ்ந்து போனான். ஆவலோடு அவளிடம் வந்த இராகவன் அன்று சீதனம் கேட்டு அவளை வெறுத்த செயலை எண்ணி வெட்கப்பட்டான்.

தனது அலுவலகத்திலிருந்து வங்கிக்கு எடுத்து வந்த அந்தப் பணம் மீண்டும் மாலதி மூலம் கிடைத்த நிலையில் மாலதியிடம் தனது கவலை எடுத்துச் சொல்லத் தயங்கினான். மாலதியின் நல்லெண்ணத்தின் மீது விருப்புக் கொண்டு "சீதனம் வேண்டாம் நான் உன்னைத் திருமணம் செய்து கொள்கிறேன்" என்று அவன் சொன்ன போது,

மாலதி மௌனமாகச் சிரித்தாள்.

புரியாத புதிராகிப்போன சீதனக் கொடுமையிலிருந்து மாலதி மீட்கப்பட்டாலும்,

சீதனக் கொடுமைக்குள் அமிழ்ந்துகிடக்கும் பெண்களின் விடுதலைக்காய் போராடும் எண்ணத்தை மட்டும் மாலதியிடமிருந்து மீட்க முடியவில்லை.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நச்சுன்னு ஒரு கேரக்டர் இருந்தா போதும்!

-ஜனனி ஐயர்



பாலாவின் கண்டுபிடிப்பு. பட்டாம் பூச்சியாய் கண் துடிப்பு. மனசுல ஏதாவது சஞ்சலம்னா ஜனனி ஐயரை பார்த்துட்டு வாங்க. உற்சாகம் உடம்பெல்லாம் அப்பிக் கொள்ளும். அப்படியொரு பரபரப்பாக அறிமுகமானவர்தான் இவர்...

**எங்க போனீங்க... படத்திலயும் பார்க்க முடியல?**

சாரிப்பா... பொள்ளாச்சியில் ஒரு ஷூட்டிங்கில் மாட்டிக்கொண்டேன். அமீரோட உதவி இயக்குநர் அஸ்லாம் இயக்குகிறார். படத்தோட பெயர் 'பாகன்'. ஒரு கிராமத்தில் நடக்கும் ரொமாண்டிக் காதல் கதை. என்னோட ஜோடி ஸ்ரீகாந்த். இப்போ வெள்ள வரைக்குமான படத்தை ஒரே முறையில் முடிச்சிட்டோம். அதான் இடையில் யார்கிட்டயும் பேச முடியாமப் போயிடுச்சி.

**ஸ்ரீகாந்தோடு நடிப்பு அனுபவம் எப்படி?**

வெரி நைஸ் மேன். புதுமுகம்னு பார்க்காமல் என்னை மிகவும் நல்லா கவனித்துக்கிட்டார். நிறைய சொல்லித் தருவார். எங்க நின்றால் கேமராவில் அழகா தெரிவேன் என்று சொல்லுவார்.

**பாலா படத்தில் நடிச்ச பேர் வாங்கிட்டீங்க. மாமல என்று படங்கள் பண்ணவேண்டாமா?**

அய்யோ அப்படிப் படங்கள் பண்ணவே வேண்டாம். நச்சுன்னு ஒரு கேரக்டர், நறுக்குன்னு ஒரு கதை. அப்படித்தான் நான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். நிறைய வாய்ப்பு வந்தது. நான்தான் ஏற்றுக்கொள்ளவில்லை.

**நடிகைகள் என்றால் கிசுகிசு வரணும், வம்பு வழக்குகளும். நீங்க என்னடான்னா சைலண்டா இருக்கிறீங்களே?**

இதைக் கேட்காமல் நீங்களே ஒரு கிசு கிசு எழுதிக்கோங்க. ஐ டோண்ட் கேர்.

**உடை தெரிவுக்கு எங்கே போனீங்க?**

இந்தப் படத்தைப் பொறுத்தவரை யூனிட் எனக்குத் தர உடையைத்தான் போடுகிறேன். காரணம் கிராமத்துக் கதையா இருந்தாலும் நான் மொடர்ன் பொண்ணு. பணக்காரக் குடும்பம். அதனால் அந்த பார்வை வருகிற உடைகளை அவங்களே கொடுத்திடுவாங்க. ஆனால் எனக்கு நானே போய் செலக்ட் பண்ணி வாங்க ஆசையாயிருக்கு.


# என் அடையாளமே பேச்சுதான்!

## இயக்குநர் ரமணா

முன்பு பார்த்ததைவிட இன்னும் அழகாக இருக்கிறார். கரகரத்துக் கசியும் குரல் மட்டும்தான் கேன்சரைச் சொல்கிறது. இவர் இயக்கிய 'திருமலை'தான் விஜய்யை அழகாக 'அக்ஷன்' பாதைக்குத் அள்ளிப் போனது. ரமணா... பிரமாதமான பேச்சுக்காரர். ஆவேசம் தெறிக்க அவர் கதை சொல்லும் போதே நமக்குள் படம் ஓடும்.

'ஆமா... ரமணான்னா அடையாளமே இந்தப் பேச்சுதான். எனக்கான இந்த வாழ்க்கையை வாங்கித் தந்ததே அதுதான். திடுதிப்புனு ஒரு நாள் கடவுள் வெள்ளை கோட் போட்டுக்கிட்டு முன்னாடி வந்து நின்னு, 'உனக்குத் தொண்டையில கேன்சர்டா'னு சொல்லிட்டார். ஆபரேஷனுக்குப் பிறகு இந்தக் குரல் என்கிட்ட இருக்குமா? இப்படி உங்ககிட்ட பேச முடியுமா என்று தெரியவில்லை. அதான், இப்போ பேசிக்குவோம்... என்றார் ரமணா.

நான் சென்னைப் பையன். நான் நல்லாப் பேசுவேன்... திமிராத் திரிவேன். எது என்றாலும் முட்டி மோதி முன்னாடி நின்னு குரல்விடத் தெரியும். இது போதாதா... பேச்சுப் போட்டி என்றால் முதல் ஆளா நிற்பேன். மூன்று வருஷம் காலேஜ் போயிட்டு ப்ளஸ் டூ பையனாவே திரும்பி வந்த ஆட்களில் நானும் ஒருத்தன். வெளியே வந்து என்ன செய்வது என்று புரியாம நின்றபோது தான், சினிமா என்னை இழுத்துக் கொண்டது!




நான் நல்லாக் கதை சொல்லுவேன் என்கிற நம்பிக்கை மட்டும்தான் இருந்துச்சு. சரி... நமக்கும் இங்கே ஒரு இடம் கிடைக்காதா என்று அலைந்தபோது செல்வமணி சேர்கிட்ட உதவியாளராக அனுமதி கிடைச்சது. அங்கே இருந்து ஆரம்பித்த என் வாழ்க்கையில் பிரகாஷ்ராஜ்தான் பெரிய திருப்பம்.

ராதா மோகன் மூலமா பிரகாஷ்ராஜ் நண்பனாக் கிடைத்தான். அவன் எங்களை அள்ளி அணைத்துக் கொண்டான். இன்று வரைக்கும் அந்த அணைப்பு கசங்காம இருக்கு. ராதா, பிரகாஷ், விஜி, திருப்பதி சாமி, தரணி என்று ஒரு வரம் மாதிரி எனக்கான நண்பர்கள் கூட்டம் அமைஞ்சது. ராதாதான் எனக்கு விஜய்க்கு கதை சொல்ற வாய்ப்பை வாங்கித் தந்தான். அப்புறம் தான் வாழ்க்கை வேறு இடத்துக்குப் போனது. இதோ இப்போ கேன்சர் என்று தெரிஞ்ச பிறகு அவ்வளவு பேரும் ஓடி வந்து நிற்கிறார்கள். நான் உடைந்து போயிடக் கூடாது என்று ஒவ்வொருத்தரும் மாறி மாறி போன் பண்ணுறாங்க. என் மனைவி சாந்தாவுக்கு வீட்டுக்கு வெளியே எதுவும் தெரியாது. நான்தான் எல்லாவற்றையும் பார்த்துப்பேன். இப்படி ஒரு விஷயம் என்று வந்த பிறகு அவளுக்கு நண்பர்கள்தான் ஆறுதலா இருக்காங்க... எங்கள் திருமணம் காதல் திருமணம். உதவி இயக்குநராக கஷ்டப்பட்டுக்கிட்டு இருந்த காலத்தில் என்னை நம்பி வந்தவள். 'அழகிய தீயே'னு ஒரு படம் பார்த்திருப்பீங்க.... அது அப்படியே எங்களின் உண்மைக் கதை. தர்ஷினி, ஸ்வேதா என்று இரண்டு பெண் குழந்தைகள். நிஜமாகவே அற்புதமான குடும்பஸ்தன் நான். எந்தக் கதை என்றாலும் மனைவிகிட்ட தான் [illegible] அதே குரலோட வருவேன் என்று மனைவிதான் அதிகமா நம்புகிறாள். எங்களின் எந்தக் கஷ்டமும் பிள்ளைகளைப் பாதிக்காமப் பார்த்துக் கொள்கிறாள். எல்லாவற்றையும் தாண்டி, இப்படி ஒரு குடும்பம் அமைந்ததுக்குச் சந்தோஷமாக இருக்கிறது!


'நம்பிக்கைதான் முக்கியம் என்று சுலபமா சொல்லிவிட்டுப் போயிடலாம். அதை வாழ்ந்துப் பார்க்கிறது தானே பெரிய விஷயம். முக்கியமாக அதைத் தான் கூறிக்கொண்டிருக்கிறேன். அதுக்காகதான் எனக்கு கேன்சர்ங்கிறதை எல்லோருக் கிட்டேயும் பகிர்ந்துகொள்கிறேன். கேன்சர் என்றால் கொடூரமான நோய், ஆளைக் கொல்லும் விஷயம் என்று தான் காலங்காலமாக நாம் படிச்ச கதைகளும் பார்த்த சினிமாக்களும் சொல்லி இருக்கிறது. இந்த வார்த்தையைக் கேட்டதும் இப்பவும் 'வசந்த மாளிகை' சிவாஜியோ, 'வாழ்வே மாயம்' கமலோதான் நமக்கு ஞாபகத்துக்கு வருகிறார்கள். இன்னும் கேன்சரைத் தெளிவாக முன் வைக்கிற ஒரு படைப்பு தமிழில் வரவில்லை என்றுதான் நினைக்கிறேன். அதைச் செய்யணும் என்று எனக்கு ஆசை. நிஜமாக கேன்சர் உயிர்க் கொல்லி நோய் இல்லை. அதை நீங்க சரியாப் புரிந்து கொண்டால், கவனித்துக் கொண்டால் அழகாகக் கடந்து போயிடலாம். இதான் உண்மை! என்றார் இயக்குநர் ரமணா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நீங்கள் இதுவரை பார்த்திராத அரிதான சில துப்பாக்கிகள்.

இத்துப்பாக்கிகள் அதன் தொழில்நுட்பத்திலும் விலையிலும் அதிகூடிய பெறுமதியைக் கொண்ட துப்பாக்கிகள் ஆகும். இத் துப்பாக்கிகளினை கிட்லர் போன்ற பிரபல்யமானவர்களே உபயோகித்தனர். இவை சிறியவை ஆயினும் இவற்றிலிருந்து குண்டு செல்லும் வேகம் சாதாரண துப்பாக்கியிலும் பார்க்க அதிகமானதாகும்.



## உயரமான கோபுரம்

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் உள்ள 2,080 அடி உயர கண்காணிப்பு டவர் ரூ.2,200 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது. டவரின் பெயர் 'டோக்கியோ ஸ்கை ட்ரீ'. இந்நிலையில், உலகிலேயே உயரமான டவர் என்று கின்னஸ் சாதனை படைத்து விட்டது இது.



# உலகின் மிகச்சிறிய தபால் சேவை!





தபாற்சேவை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியின் மத்தியிலும் அது தனது தனித்துவத்தை இழக்கவில்லை. இத்தபால் சேவையானது தனிப்பொலிவியாவில் சற்று வித்தியாசமானதாக காணப்படுகின்றது. படங்களைப் பார்த்து நீங்களே புரிந்து கொள்ளுங்கள்...

# கின்னஸில் இடம்பெற்ற உலகின் வயதான யோகா ஆசிரியை!

உலகின் மிக வயதான யோகா ஆசிரியையாக 91 வயதுடைய பாட்டி கின்னஸில் இடம்பிடித்துள்ளார். 1920 ஆம் ஆண்டு பிறந்த Bemice Mary என்ற பாட்டியே மேற்படி கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளார். இவர் அமெரிக்காவின் புளோரிடாவைச் சேர்ந்தவர். தன்னுடைய நீண்ட ஆயுளுக்கு முக்கிய காரணம் யோகா தான் என அடித்துக் கூறுகிறார் பாட்டி. யோகா எல்லோரும் கற்றுக்கொள்ளக் கூடிய எளிதான கலை என்கிறார் இவர்.





# கண்ணையும் மனதையும் கவரும் வாகனங்கள்

இயற்கையில் அதிக மாற்றங்களை நிகழ்த்த முடியாத மனிதன் தன்னுடைய ரசனைக்கு ஏற்ப பல படைப்புகளை படைக்கின்றான். படைப்பாளிகளின் ரசனைக்கு ஏற்ப படைப்புகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றது. மனிதனின் வித்தியாசமான கற்பனைத் திறனால் உருவாக்கப்பட்ட சில வாகனங்களை நீங்கள் இங்கே காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியபோரதீவு மட்பாண்டம்!

■ மட்டக்களப்பிலிருந்து - சக்தி

மட்டக்களப்பு நகருக்குத் தெற்கே சுமார் மூன்று மீற்றர்கள் தொலைவில் மட்டக்களப்பு வாவியின் ஓரமாக மட்டக்களப்பில் சிறப்பாகப் பேசப்படுகின்ற ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயிலைக் கொண்டுள்ளதே பெரியபோரதீவுக் கிராமம். நகைத் தொழிலை பிரதானமாகக் கொண்டுள்ள இந்தக் கிராமம் மக்கள் விவசாயம், கூலிவேலை மற்றும் மட்பாண்டத் தொழிலையும் செய்து வருகின்றனர். இந்தக் கிராமத்தில் பெரும்பாலான பெண்கள் மட்பாண்டத் தொழிலை நம்பியே ஜீவிக்கின்றனர். ஆனால் அதனை மேன்மேலும் முன்னேற்றம் அடையச் செய்வதற்கு ஆதாரமற்ற நிலையே தற்போது காணப்படுவதாக அவர்கள் கூறுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரியபோரதீவுக் கிராமமே மட்பாண்டத் தொழிலைச் செய்வதனால் அதற்கான மூலப்பொருட்களுக்கு உகந்த கிராமமாக அது திகழ்கின்றது. அதிகமான பெண்கள் தத்தமது வீடுகளில் கைத்தொழிலாக இதனை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களுக்கு என ஒரு சங்கமும் உள்ளது.

1967 ஆம் ஆண்டில் பெரியபோரதீவு மட்பாண்டச்சங்கம் அமைக்கப்பெற்று அதற்குக்கான கட்டிடமும் 1982 ம் ஆண்டு கட்டிக் கொடுக்கப்பட்டு, மட்டக்களப்பு தொழில் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. அன்றைய ஆரம்பகாலத்தில் ஒன்பது பயிற்சியாளர்களோடு ஆரம்பித்த இந்த மட்பாண்ட சங்கத்தினூடாக இந்தக் கிராமத்தில் பல யுவதிகளுக்கு மட்பாண்டத் தொழில் செய்வதற்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு படிப்படியாக வளர்ச்சி பெற்று வந்த இச்சங்கத்தின் பல்வேறு அடிப்படை வசதிகள் இதுவரைத் தீர்க்கப்படாமல் இருப்பது இங்கு தொழில் புரிபவர்களுக்கு அசௌகரியமாக உள்ளது.

அவர்கள் எவ்வளவுதான் கஸ்டப்பட்டு மட்பாண்டங்களை உற்பத்தி செய்தாலும் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைப்பதில்லை. விற்பனைக்குரிய சந்தைவாய்ப்புக்கள் கிடைப்பதில்லை, போக்குவரத்து வசதிகள் கிடைப்பதில்லை என தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இந்தக் கிராமத்தில் மட்பாண்டத் தொழிலில் ஈடுபடும் அனைவருக்கும் பயிற்சி நெறிகளை வழங்கும் இந்த நிலையத்தில் சுற்றுமதில் சேதமடைந்து பாவிக்க முடியாத நிலையில் உள்ளது. மலசல கூடமும் கிணறும் பற்றைக் காடுகள் சூழ்ந்து காட்சி தருகின்றன. இந்தக் கிராமத்தில் 15 வருடங்களாக மட்பாண்டத் தொழிலில் ஈடுபட்டு வரும் சரோஜா என்பவர் கருத்துத் தெரிவிக்கையில் இதுவரை காலமும் ஒரு உதவியும் கிடைக்கவில்லை எனவும் ஒரேயொரு தடவை சமுர்த்தியால் 9000ரூபா கடன் தந்ததாகவும் கூறினார்.


ஒரு லோட் களிமண் 2000ரூபா, ஒருலோட் உரிமட்டை 2500 ரூபா,ஒருலோட் வைக்கோல் 1500 ரூபா,ஒருலோட் மணல் 1500ரூபா ஆகிய விலைகளுக்கு வாங்குவோம். இதனை 5-மாதங்களுக்குள் உற்பத்தி செய்து விற்றால் சுமார் 20,25 ஆயிரம் ரூபாவுக்குத்தான் விற்பனை செய்யலாம். ஆகவே, இந்த வருமானம் போதாதுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். இன்றைய நவீன விஞ்ஞான யுகத்தில் மட்பாண்டம் செய்வதற்கு எத்தனையோ விதமான இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ள போதிலும் இந்தக் கிராமத்து மக்கள் எவ்விதக் கருவிகளையும் பயன்படுத்தாமல் தமது கைகளால் மட்டும் தமது திறமைகளையும் நுட்பங்களையும் பயன்படுத்தி தொழிலை மேற்கொண்டு வருவது போற்றப்பட வேண்டியதும் அதே வேளை வேதனைப்பட வேண்டியதாகவும் உள்ளது. தமது கைவண்ணங்களை களிமண்ணிலே காட்டி மட்பாண்டங்களைச் செய்து விற்பனைக்காக தமது தலையிலே சுமந்து கொண்டு ஊர் ஊராய் அலைந்து அலைந்து விற்பனை செய்ய வேண்டியும் உள்ளது. வேறு வழிகள் இல்லை.


வெறுமனே சட்டி, பானை என்பனவற்றைச் செய்வதனை விட தற்போதைய காலத்திற்கு ஏற்றவாறு அடுப்புக்கள் போன்றனவும் அதனை விட பொம்மைகள், உருவங்கள் போன்றவற்றையும் உருவாக்கலாம். அதற்கான பயிற்சிகள் மற்றும் சந்தை வாய்ப்புக்கள் உரியவர்களால் செய்து தரப்பட வேண்டும். எங்கட கட்டிடத்திற்கு மின்சார வசதியில்லை. சிலவேளைகளில் இரவு வேளைகளிலும் வேலை செய்வோம். குப்பி விளக்குகளையே பயன்படுத்துகின்றோம். எமக்கு என ஒரு மோட்டார் பம்பு இல்லை. களியினை ஏற்றிக் கொண்டு வந்து வெளியில் போட்டால் மழை காலங்களில் கஸ்டமாக இருக்கும். இடவசதியும் போதாமல் உள்ளது. உரிமட்டை பெறுவது மிகவும் கஸ்டமாகவுள்ளது. எங்களுக்கு களி குழைப்பதற்கு இயந்திரம் இருந்தால் மிகவும் இலகுவாக இருக்கும். நாங்கள் இதுவரைக்கும் காலினால்தான் களிதுவைத்து மட்பாண்டம் செய்து வருகின்றோம் என்கிறார் பெரியபோரதீவு மட்பாண்ட சங்கத்தில் 7 வருடங்களாக பயிற்சியாளர்களாக கடமை புரிந்து வரும் மாரிமுத்து என்பவர்.

எமது சங்கத்திலும் எமது கிராமத்திலும் அதிகமான பெண்கள் இந்தத் தொழிலைச் செய்து வருகின்றார்கள். அவர்களில் மிக வறியவர்கள்தான் அதிகம் பேர். உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்காததுதான் பாரிய பிரச்சினையாக உள்ளது. எங்கட சங்கத்துக்கு என தனியான ஒரு வாகன வசதி இருந்தால் நாங்கள் பல இடங்களுக்கு சென்று விற்பனை செய்ய இலகுவாக இருக்கும். இப்பகுதி அனைத்துக்குமே மட்பாண்ட உற்பத்தி செய்யும் தளமாக இது அமைந்துள்ளது என்றார் அவர்.

அன்றைய யுத்தகாலத்தில் இவ்வாறான பல கஸ்டங்களை எதிர்கொண்டு மட்பாண்டத் தொழிலில் ஈடுபட்டு வந்த இந்த மக்கள் அண்மையில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்த்தப்பட்டவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இன்றைய சூழலில் மனிதன் தனது முயற்சியின் பயனாலும் ஏனைய உதவிகளினாலும் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி முன்னேற்றம் அடைந்து வருகின்றான். மட்பாண்டத் தொழிலுக்கும் அது விதிவிலக்கல்ல.

இங்கு 1964 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை சுமார் 46 வருடகாலமாக தமது கால்களாலேயே களியினை மிதித்து கையினால் பதப்படுத்தி பொருட்கள் செய்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். பெரியபோரதீவு மட்பாண்ட நிலையத்தில் பயிற்சியாளராக சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுக்கு 6 மாதகாலப் பயிற்சி வழங்கப்படுகின்றது. அக்காலப்பகுதியில் மாதாந்தம் 2000 ரூபா தொழில் திணைக்களத்தால் வழங்கப்படுகின்றது. ஆறுமாதகால முடிவின் பின்னர் அவர்கள் தாம் சுயமாகத் தொழில் செய்ய வேண்டும். அதனை அவர்களே விற்பனைக்கு கொண்டு செல்ல வேண்டும். இவ்வாறு தான் சங்கத்தின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நிலையில் தற்போது அவர்களுக்குள்ள பிரச்சனைகள் களையப்பட்டு மேலும் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே மட்பாண்டத் தொழிலாளர்களின் எதிர்பார்ப்பு.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி சில மாதங்களுக்கு முன் சுகவீனமுற்றதில் இருந்து காங்கிரஸ் கட்சிக்கு அடுத்தடுத்து பல பின்னடைவுகள் ஏற்பட்டவண்ணமே இருந்துள்ளன. இது போதாதென்று தி.மு.க.வின் ராசா செய்த ஊழலால் ஏற்பட்ட தலைகுனிவு, தமிழக சட்டசபை மற்றும் உள்ளாட்சித் தேர்தலில் தோல்வி, ஆந்திராவில் தெலுங்கானா தனி மாநிலம் கோருபவர்கள் தரும் தலைவலி, ஊழலுக்கு எதிராக அன்னா ஹசாரேயின் போராட்டம் முக்கியமாக ஆளும் காங்கிரஸை நோக்கியே திசை திருப்பப்பட்டமை என காங்கிரஸ் கட்சி அடுத்தடுத்து அடிவாங்கி வருகிறது. இவற்றுக்கு சரியாக முகங்கொடுக்க தலைவர் சோனியாவின் பாதிக்கப்பட்ட உடல்நிலை பெரும் முட்டுக்கட்டையாகும். எனவே ராகுல் காந்தியை தலைவர் பதவிக்கு உயர்த்தினால் எல்லாச் சிக்கலுக்கும் தீர்வாக அமையும் என சோனியாவும், மூத்த தலைவர்களும் கருதுகின்றனர். குறிப்பாக ஓடியாடி பல இடங்களுக்கும் பயணம் செய்து கட்சியினரை ராகுல் ஏற்கனவே உற்சாகப்படுத்தி வருகிறார். எனவே அவரையே தலைவராக்கிவிட்டால் என்ன என்பது தான் இந்த புதிய திட்டத்திற்குக் காரணம். குறிப்பாக அடுத்த

இது தவிர மற்றொரு சாதியினரான விவசாய ஜாட் இனத்தவரின் ஆதரவும் கிடைக்கும் விதமாக விவசாயிகளின் காணிகளை மாயாவதி அரசு கவீகரித்ததை எதிர்த்து ராகுல் கிராமந்தோறும் சென்று போராட்டங்களில் ஈடுபட்டிருந்தார். மேற்கு உத்தரப்பிரதேசத்தில் இவர்கள் கணிசமாக உள்ளனர்.

மாயாவதி முன்பு ஜெயலலிதா செய்தது போல ஆடம்பர விழாக்கள் நடத்தி அதில் திருப்தி அடைபவர். சிறுபிள்ளைத்தனமான ஆட்சி நடத்துவது காங்கிரசுக்கு நேரடியான ஆட்சிக்கு வழிவகுத்தது போல அமையக் கூடும். உதாரணமாக ஒரு விழாவில் ஆயிரம் ரூபாய்த்தாள்களாலான காசுமாலை ஒன்று மாயாவதிக்கு அணிவிக்கப்பட்டு பெரும் கண்டனத்திற்கு அவர் உள்ளானார். ஜெயலலிதா கூட இம்முறை ஆட்சிக்கு வந்ததும் வீண் பகட்டு டாம்பீகத்தை அறவே கைவிட்டுள்ளமை தெரிகிறது. ஆனால் மாயாவதி இன்னும் திருந்தியபாடில்லை.



# ராகுல் காந்தி காங்கிரஸ் கட்சியின் தலைவராகிறார்!



■ எஸ்.சுரேந்திரஜித்

வருடம் உத்தரப்பிரதேச சட்டசபைத் தேர்தல்கள் வரவுள்ளன. நாட்டின் மிகப் பெரிய மாநிலம் இதுவாகும். மொத்தம் 543 லோக் சபா தொகுதிகளில் 80 உத்தரப்பிரதேசத்திலேயே அமைந்துள்ளன. நேரு, இந்திராவின் பிறப்பிடமும் இம்மாநிலமே. அவர்கள் பிரதிநிதித்துவப் படுத்திய அலஹாபாத், பூல்பூர், ரேபரேலி தொகுதிகளும் கூட இங்குதான் உள்ளன. ராகுல் மற்றும் சோனியா காந்தியும் கூட இந்த உத்தரப் பிரதேசத்தின் அமேதி, ராய்பரேலி தொகுதிகளில் தான் முறையே எம்.பிக்களாக உள்ளனர். கடந்த லோக்சபா தேர்தலில் ராகுல் இங்கு போட்டியிட்டதால் 25 வருடத்தின் பின் இம்மாநிலத்தில் 20க்கு மேற்பட்ட தொகுதிகளை காங்கிரஸ் கைப்பற்றியது. எனினும் 1989ன் பின் மாநில ஆட்சியை காங்கிரஸால் கைப்பற்றவே முடியவில்லை. ராஜீவ் இறப்பு, பி.ஜே.பி.யின் அயோத்தி ராமர் கோயில் பிரச்சாரம் என்பவற்றால் பி.ஜே.பி, பி.எஸ்.பி, சமாஜ்வாதி ஆகிய மூன்று கட்சிகள் மாறிமாறி மாநிலத்தை ஆண்டு வந்துள்ளன. மிகவும் வறிய, படிப்பறிவு அற்ற இம்மாநிலம் காங்கிரசுக்கும் நேரு குடும்பத்துக்கும் இதயம் போன்றதாகும். ராகுல் காந்தியின் அரசியல் பிரவேசத்தால் பிரகாசமான வாய்ப்புகள் காங்கிரசுக்குக் கிடைத்துள்ளன. அடுத்த ஆண்டு உத்தரப் பிரதேச ஆட்சியைப் பிடிப்பதே இலக்கு என ராகுல் காந்தி ஏற்கனவே முழங்கி வருகிறார். எனினும், ஆளும் மாயாவதியின் பி.எஸ்.பி, பிரதான எதிர்க்கட்சியான சமாஜ்வாதி கட்சியைத் தாண்டி இதை சாதிக்க முடியுமா என்பது கேள்வியே. மாயாவதி தலித்துகளதும், சமாஜ்வாதி கட்சி தலைவர் முலாயம் சிங் யாதவர்களதும் அசைக்க முடியாத தலைவர்களாக வலம் வந்து கொண்டுள்ளனர். இவ்விரு சாதியினர் மாநிலத்தின் சனத்தொகையில் கிட்டத்தட்ட அரைவாசியாவர். மாயாவதி ஆட்சியில் 5 வருடம் இருந்துவிட்டதால் அவருக்கெதிரான மக்கள் எதிர்ப்பு கணிசமாக உள்ளது. இதை அறுவடை செய்ய முடியுமாயின் காங்கிரஸ் கரைசேர்ந்துவிடலாம். குறிப்பாக மாயாவதியின் தலித் சாதியினர் முன்பு கணிசமாக காங்கிரஸை ஆதரித்தவர்களே. இதுதவிர பிராமண சமூக ஆதரவு, முஸ்லிம் வாக்குவங்கி என்பனவும் காங்கிரசுக்கு சாதகமான அம்சங்களாகும். சோனியா ராகுல் செல்வாக்கும் சேர்ந்தால் ஆட்சியை பிடிப்பது சிரமமல்ல என்கின்றனர் கட்சியினர்.

இது நிச்சயம் அவருக்கு எதிரான அலையை உருவாக்கக் கூடும். அவரது தலித் சமூகம் வெகுவாக பின்தங்கியுள்ள நிலையில் இவருக்கு இந்த ஆடம்பரம் தேவைதானா என்ற கேள்வி இயல்பாகவே எழும் ஒன்றாகும். தன் கட்சி சின்னமான யானை வடிவில் சிலைகளை நூற்றுக்கணக்கில் நிறுவி சமீபத்தில் பூங்கா ஒன்றை அவர் திறந்துள்ளார். பொதுப் பணம் தண்ணீராக செலவிடப்பட்டு ஆடம்பரம், பகட்டு காண்பிக்கப்படுவது இவருக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா என்று பலரையும் கேட்க வைத்துள்ளது. விழா ஒன்றுக்கு பூக்கள் எடுத்துவர ஒரு ஜெட் விமானத்தை வெறுமையாக மும்பை அனுப்புமளவுக்கு இவரது இந்தப் பித்தலாட்டம் உள்ளது என விக்கிலீக்ஸ் அண்மையில் தகவல் கசிய விட்டது. ஜூலியன் அசேஞ்சுக்குப் பைத்தியம் என மாயாவதி கண்டித்ததும் குறிப்பிடத்தக்கது.

**ராகுலின் செல்வாக்கு அதிகரிப்பதை உணர்ந்த மாயாவதி புதிய குண்டு ஒன்றைத் தூக்கிப்போட்டுள்ளார். மாநிலத்தை நாலாகப்பிரித்து பண்டல்கரண்ட (மேற்கு) பூர்வின்கல் (கிழக்கு) ஹரித் பிரதேஷ் என புதிய மாநிலங்கள் உருவாக்க சட்டசபையில் கோரி மத்திய அரசிடம் அனுப்பவுள்ளதாக கூறப்படுகிறது. இது காங்கிரசுக்கு கிலியை ஏற்படுத்தும் விடயமாகும்.**

இவ்வாறான அம்சங்களால் மக்கள் இம்முறை மாயாவதியை வீட்டுக்கு அனுப்பக்கூடும் ஆதலால் காங்கிரசோ சமாஜ்வாதி கட்சியோ தான் ஆட்சிக்கு வர வாய்ப்புள்ளது. இன்றேல் தொங்கு சட்டசபை அமையவும் கூடும். முன்பும் இவ்வாறான நிலை அம்மாநிலத்தில் ஏற்பட்டுள்ளது.

ராகுலின் செல்வாக்கு அதிகரிப்பதை உணர்ந்த மாயாவதி புதிய குண்டு ஒன்றைத் தூக்கிப்போட்டுள்ளார். மாநிலத்தை நாலாகப்பிரித்து பண்டல்கண்ட் (மேற்கு) பூர்வின்கல் (கிழக்கு) ஹரித் பிரதேஷ் என புதிய மாநிலங்கள் உருவாக்க சட்டசபையில் கோரி மத்திய அரசிடம் அனுப்பவுள்ளதாக கூறப்படுகிறது. இது காங்கிரசுக்கு கிலியை ஏற்படுத்தும் விடயமாகும். புதிய பிரிவினையை எதிர்த்தால் அந்தந்தப் பிரதேசங்களின் மக்கள் காங்கிரஸ் மீது வெறுப்படைவர். பிரிவினையை ஏற்றாலோ தெலுங்கானா பிரச்சனை மீண்டும் விஸ்வரூபம் எடுத்துவிடும். 30 வருடப் பழமையான தெலுங்கானாவைப் பிரிக்க இடமளிக்க இழுத்தடித்து வரும் காங்கிரஸ் வசமாக சிக்கிக் கொண்டது போலாகும். உத்தரப்பிரதேசத்தைப் பிரித்தால் தெலுங்கானாவைப் பிரிக்காமல் விட முடியாது. அக்கோரிக்கையை விட மிகமிகப் பழமையானது. ஏற்கனவே தெலுங்கானா சிக்கலில் அப்பிரதேச தனிமாநிலம் கோரும் கட்சியுடன் காங்கிரஸ் அமைச்சர்கள் எம்.எல்.ஏக்களும் இராஜினாமா, உண்ணாவிரதம் என ஆள் பறந்திய வண்ணம் உள்ளனர். நேரம்பார்த்து மாயாவதி மக்களைத் திசைதிருப்ப வியூகம் வகுக்கிறார் என அத்வானி கூறியுள்ளார். காங்கிரசோ வாயடைத்துப் போன நிலையில் இருக்கிறது. உத்தரப்பிரதேசத்தின் மேற்கில் விவசாயிகள் கட்சியான அஜித்சிங் கட்சியுடன் காங்கிரஸ் கூட்டணி வைக்க முயன்று வருகிறது. இப்போது அப்பகுதி தனி மாநிலமானால் அக்கூட்டணியில் பிளவு ஏற்படலாம்.

சாதாரணமாக மாயாவதி போன்றோர் பெரிய மாநிலத்தை முதல்வராக ஆளவே விரும்புவர். நாலாகப் பிரித்தால் நான்கிலும் ஒரே நேரத்தில் மாயாவதி முதல்வராக முடியாது. அவரது கட்சியைச் சேர்ந்த அடுத்த தலைவரை மற்றைய பிரிவுகளுக்கு முதலமைச்சராக்க நேரிடும். இது கட்சியில் மாயாவதியின் செல்வாக்கை வேறுபடுத்தக் கூடும். எனினும் அவர் இது எதையும் பற்றி கவலைப்படுபவராகத் தெரியவில்லை. காங்கிரஸையும் சமாஜ்வாதி கட்சியையும் திணறடிப்பதே அவரது நோக்கமாகும்.

இவ்வாறு சிக்கல்கள் மேல் சிக்கலாக வளர்ந்து வருவதால் பேசாமல் ராகுல் காந்தியை காங்கிரஸ் தலைவராக்கி சுறுசுறுப்பாக பணியாற்ற தொண்டர்களைத் தூண்டலாமென சோனியா கருதுகிறார். சமீபத்தில் கூட மற்றொரு மாநிலமான உத்தரகாண்டில் பிரசாரத்தைத் துவக்க சோனியா வருவதாக இருந்து திடீர் சுகவீனத்தால் இது ரத்தானது. அடுத்த வருடம் உத்தரப் பிரதேசம், உத்தரகாண்ட், பஞ்சாப், ஹிமாசலம், குஜராத் என முக்கிய மாநிலத் தேர்தல்கள் வர விருப்பதால் கட்சியைத் தயார்ப்படுத்துவது மிக அவசியமாகும். இதற்கு ஒரே வழியாக ராகுலுக்கு பட்டாபிஷேகம் செய்வதே சரியானதென கட்சியின் தலைமையும் கட்சியினரும் நினைப்பதாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ராசி பலன்

**27.11.2011 - 03-12-2011**



**அசுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

மனசாட்சிக்கு மாறாக எதையும் செய்யாதவர்களே! குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வழக்கில் சாதக மான தீர்ப்பு வரும். வீட்டை விரிவுபடுத்திக் கட்ட திட்டமிடுவீர்கள். வீண் சந்தேகம், பல், காது வலி வந்து போகும். வெளிநாட்டில் இருக்கும் நண்பர்கள், உறவினர்களால் ஆதாயம் உண்டு. சிறுசிறு ஏமாற்றங்களும், அவமானங்களும் வந்து செல்லும். சின்ன சின்ன ஆசைகள் நிறைவேறும் வாரமிது.




**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

கொள்கை கோட்பாடுகளை விட்டுக் கொடுக்காதவர்களே! சுறுசுறுப்பா வீர்கள். தள்ளிப் போன விஷயங்கள் விரைந்து முடியும். என்றாலும் திடீர் பயணங்களும், செலவுகளும் வந்துப் போகும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பிள் ளைகள் நல்ல வழிக்கு திரும்புவார்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார் கள். பூர்வீக சொத்து கைக்கு வரும். முதுகு வலி, முழங்காலில் அடிபடுதல் ஏற்பட லாம். கந்திசிரும்பவரின் சுயரூபத்தை அறியும் வாரமிது.



**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்**

எங்கும், எதிலும் ஒழுங்கை விரும்புபவர்களே! புகழ், கௌரவம் கூடும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். வீட்டு விசேஷங்க ளில் முதல் மரியாதைக் கிடைக்கும். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். புது வீடு கட்டத் தொடங்குவீர்கள். பணம் வரும். குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். சகோதர வகையில் நன்மை உண்டு. புது வேலைக் கிடைக்கும். மனைவியுடன் இருந்த மோதல் கள், பிணக்குகள் நீங்கும். நாவன்மையால் வெல்லும் வாரமிது.



**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்**

விவாதம் என வந்து விட்டால் வெளுத்து வாங்குபவர்களே! பணவரவு எதிர் பார்த்தபடி இருந்தாலும் எதிர்பாராத செலவுகளால் திணறுவீர்கள். வெளி நாட்டில் இருப்பவர்கள் உதவுவார்கள். பிள்ளைகளால் சொந்தம் கவலை, கர்ப் பிணிப் பெண்கள் கவனமாக இருப்பது நல்லது. கல்யாண நிகழ்வுகளை முன்னின்று நடத்து வீர்கள். சிறுசிறு விபத்து, தொண்டை புகைச்சல், கழுத்து வலி, கணவன்-மனை விக்குள் ஈகோ பிரச்னை, வாக்குவாதம் வந்து போகும். சிக்கனம் தேவைப்படும் வாரமிது.



**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

எங்கும் எதிலும் புரட்சியை விரும்புபவர்களே! எதையும் சாதிக்கும் துணிச் சல் வரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். கணவன்-மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்துக் கொள்வார்கள். புது வேலைக் கிடைக்கும். அரசால் அனுகூலம் உண்டு. வேலைச் சுமையால் சோர்வின்மை யும், தூக்கமின்மையும் வந்து போகும். வெளியூர் பயணங்களால் புது அனுபவம் உண்டாகும். நேர்மறை எண்ணங்களால் வெற்றி பெறும் வாரமிது.



**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ம் பாதங்கள்**

சோர்ந்திடாமல், கடமைகளை சுமப்பவர்களே! புதிய எண்ணங்கள் தோன்றும். திடீர் பணவரவு உண்டு. தந்தையின் உடல் நலம் சீராகும். பழைய சொந் தங்கள் தேடி வரும். வீட்டில் கூடுதலாக ஒரு தளம் கட்டுவீர்கள். திடீர் பய ணங்கள், செலவுகள் வந்துப் போகும். யாரையும் முழுமையாக நம்ப வேண்டாம். மற்றவர்களும் பணம், நகை வாங்கித் தருவதில் ஈடுபட வேண்டாம். மனஇறுக்கம், ஒற்றை தலை வலி வந்து போகும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படும் வாரமிது.



**சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

சந்தர்ப்ப சூழ்நிலை அறிந்து அதற்கேற்ப பேசுபவர்களே! தினந்தோறும் எதிர் பார்த்து ஏமாந்த தொகை கைக்கு வரும். வீட்டைக் கட்டி முடிக்க எதிர்பாராத வங்கிக் கடன் கிடைக்கும். குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். மனைவி வழியில் ஆதாயம் உண்டு. மகளுக்கு நல்ல வரன் அமையும். மகனுக்கு வேலை கிடைக்கும். கௌரவப் பதவிகள் தேடி வரும். புது டிசைனில் தங்க ஆபரணம் வாங்கு வீர்கள். சொந்தங்கள் மத்தியில் செல்வாக்குக் கூடும் வாரமிது.




**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

எதிர்ப்புகள், ஏமாற்றங்களுக்கு அஞ்சாதவர்களே! எதிர்பார்த்த வகையில் பணம் வரும். குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். மனைவி யின் உடல் நலம் சீராகும். சகோதரர் பாசமழைப் பொழிவார். வீட்டில் கூடு தலாக ஒரு தளம் கட்டுவீர்கள். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். காய்ச்சல், தலைவலி, கண் எரிச்சல் வந்து நீங்கும். கன்னிப் பெண்களே! காதல் விவகாரங்களில் சிக்கிக் கொள்ளாதீர்கள். நிறைய திருப்பங்கள் நிறைந்த வாரமிது.



**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

அனுசரித்துப் போகும் குணம் கொண்டவர்களே! எதிர்பார்ப்புகள் தடையின்றி முடியும். திருமணம், சீமந்தம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட் டும். கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். பிள்ளைகளால் பெரு மையடைவீர்கள். பூர்வீக சொத்தால் வருமானம் வரும். உறவினர்களில் உண்மையான வர்களை கண்டறிவீர்கள். மனைவி வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வேற்று மதத்தவர் அறிமுகமாவார்கள். ஆளுமைத் திறன் அதிகரிக்கும் வாரமிது.



**உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

எங்கும் எதிலும் வெற்றியை விரும்புபவர்களே! எதிர்ப்புகள் அடங்கும். வீடு கட்டுவது, வாங்குவது சாதகமாக அமையும். குடும்பத்தில் உங்கள் கை ஓங் கும். பிள்ளைகளின் தவறைச் சுட்டிக் காட்டி திருத்துவீர்கள். வழக்கில் சாத கமான தீர்ப்பு வரும். தந்தைவழியில் அனுகூலம் உண்டு. அரசு காரியங்கள் சுலபமாக முடியும். கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வீடு, மனை வாங் குவதில் அவசரம் வேண்டாம். எதிர்ப்புகளை சமாளிக்கும் வாரமிது.



**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

கடின உழைப்பால் சாமான்ய நிலையை அடைபவர்களே! எதையும் தாங் கும் மனவலிமை கிட்டும். புது பொறுப்புகளும், பதவிகளும் தேடி வரும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். புதிதாக வீடு, வாகனம் வாங்குவீர் கள். திருமணப் பேச்சு வார்த்தை கூடி வரும். தந்தையின் உடல் நலம் சீராகும். பால்ய நண்பர்களின் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். கணவன் -மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. சகிப்புத் தன்மையால் முன்னேறும் வாரமிது.



**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

சவால்களுக்கு முக்கியத்துவம் தருபவர்களே! திடீர் யோகம் உண்டாகும். திடீர் பணவரவு உண்டு. குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்பார். பிள்ளைகளால் மதிப்புக் கூடும். நட்பால் ஆதாயம் உண்டு. உறவினர்களுக்கு மத்தியில் ஒருபடி உயர்ந்து நிற்க வேண்டுமென எண்ணுவீர்கள். நெஞ்சு வலி, வந்துப் போகும். சோர்வுகள் குறையும். கன்னிப் பெண்களே! [illegible] நாள் ஆசைகள் நிறைவேறும். புகழ், கௌரவம் கூடும் வாரமிது.

# எப்போதும் போல் இருங்க!

ஒரு தொழில் நிறுவனத்தின் தலைவர் தனது ஊழியர்களை அழைத்தார்.

"நம் நிறுவனத்தின் மேலாளர் பதவிக்காலம் இன்னும் ஆறுமாதத்தில் முடியப்போகிறது. அவருக்குப் பிறகு உங்களில் ஒருவரை மேலாளராக நியமிக்கத் திட்டமிட்டுள்ளேன். மாதம் 5 லட்சம் சம்பளம். உங்கள் நடவடிக்கைகளை இந்த ஆறு மாதமும் கூர்ந்து கவனிப்பேன். யார் தகுதியுடையவர் எனக் கருதுகிறேனோ, அவரே மேலாளர் ஆவார்," என்றார்.

ஐந்து லட்சம் சம்பளம், கார், பங்களா வசதியெல்லாம் கிடைத்தால் யார் விடுவார்... ஊழியர்கள் பம்பரமாக சுழன்று வேலை பார்த்தனர். பலர் வேலைநேரம் முடிந்த பிறகும், ஏதாவது ஒரு வேலையை பரபரப்பாக செய்வது போல் நாடகமாடினர்.

ஆறுமாதம் கழிந்தது. அன்று தான் மேலாளர் பதவிக்குரிய நபர் தேர்ந்தெடுக்கப்பட இருந்தார். எல்லோர் மனதிலும் திக் திக்.. ஒரே ஒருவரைத் தவிர. அவர் வழக்கம் போல், தன் பணியில் ஈடுபட்டிருந்தார். அவரருகே சென்ற தலைவர், "நீங்கள் தான் இனி நிறுவனத்தின் மேலாளர்" என்றார்.

எல்லோருக்கும் சப்பென்றாகி விட்டது.

"ஐயா! நாங்கள் எவ்வளவு கடுமையாகப் பாடு பட்டோம், அதிலும் இந்த ஆறுமாத காலத்தில் எவ்வளவு தூரம் போராடினோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவரோ, வழக்கமான பணியைத்தான் செய்தார். அவரைப் போய் தேர்ந்தெடுத்தீர்களே!" என்றனர்.

"ஊழியர்களே! அவர் எட்டு மணி நேரத்துக்குள் 16 மணி நேர வேலையை முடிப்பவர். நீங்களோ 16 மணிநேரம் வேலை செய்தும், நான்கு மணி நேர வேலையைக் கூட நல்லபடியாக செய்யவில்லை என்பதை உங்கள் வேலைக் குறிப்பு எடுத்துச் சொல்கிறது. மேலும், பதவியைத் தேடி அவர் ஓடவில்லை. ஆசைப்படவும் இல்லை. ஆசையில்லாத ஒருவரால்தான், கம்பெனியின் நிதிநிர்வாகத்தையும் மோசடி ஏதுமின்றி செய்ய முடியும். அவர் அவராகவே இருந்தார். எனவே, அவரைத் தேர்ந்தெடுத்தேன்," என்றார்.

குறிப்பிட்ட நேரத்தில், தரப்பட்ட பணியை ஒழுங்காகச் செய்தாலே போதும். பதவியும், பணமும் தேடி வரும்.

# மின்சக்தி மூலம் இயங்கக்கூடிய காகிதக் கார்






காகிதக் கப்பல் என்பதை அனைவரும் அறிந்திருப்போம். அதை விளையாட்டுப் பொருளாகப் பயன்படுத்துவார்கள். தற்போது 2012 Audi A7 என்று பெயரிடப்பட்ட மின்சக்தி மூலம் இயக்கக்கூடிய காகிதக்காரை உருவாக்கி இருக்கிறார்கள். இந்தக் காரை உருவாக்க 245 மணித்தியாலங்கள் செலவாகி உள்ளது. மேலும் இதற்கு 285 காகிதங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாசமான விழுமியங்கள்!



இந்தோனேஷியா என்றதும் நமக்கு முதலில் ஞாபகத்திற்குவருவது பூகம்பம் (EARTHQUAKE) தான், இருபத்து இரண்டாயிரத்து நான்காம் ஆண்டு இந்தோனேஷிய சுமாத்திராத்தீவின் கடலுக்கு அடியில் உண்டான ஒன்பது தசம் பூச்சியம் 'ரிச்டர்' அளவிலான நிலநடுக்கம் உகந்த சான்றாகக் கொள்ளலாம்.

இதனால் உருவான ஆழிப்பேரலையான 'சுனாமி' (TSUNAMI) தெற்கு ஆசிய கடலோரவாழ் மக்களின் இன்னுயிரை இலட்சக்கணக்கில் காவுகொண்டமையானது இந்நூற்றாண்டில் மக்களின் மனதில் அழியாத வடுவை உண்டாக்கி விட்டது என்று கூறலாம்.

இந்தோனேஷிய நாட்டில் வாழுகின்ற மக்களின் பொருளாதாரம், அரசியல், கலை, கலாசாரம், மதம் என்பனவற்றை நோக்குமிடத்து அவை விசித்திர அனுபவத்தைத்தருகின்றன.

இந்தோனேஷிய மக்களது கலாசார விழுமியங்கள் சிலவற்றை ஆராய்ந்து நோக்கினால், இந்தோனேஷிய நாட்டில் நாத்திகர் யாருமே கிடையாது. அந்நாட்டு மக்கள் அதனைப் பெருமையோடு கூறிக்கொள்ளுகின்றனர். இஸ்லாம், இந்து, கிறிஸ்தவம், பௌத்தம் போன்ற மதங்களை பின்பற்றுபவர்களாகவே அந்நாட்டு மக்கள் காணப்படுகின்றனர். மத-கடவுள் நம்பிக்கை அற்றவர்கள் என்று எவரையும் குறிப்பிட முடியாது.

மக்கள் பல மதங்களைப் பின்பற்றுபவர்களாக இருப்பினும் பிறமதத்தை நிந்திப்பவர்களாக ஒருபோதும் திகழ்வதில்லை. பிரிவினை மனப்பான்மையும் அவர்களிடத்தில் அறவே கிடையாது. மதங்களிடையே எப்போதும் விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு என்பன மேலோங்கி உள்ளவைதாம் அவதானிக்கலாம். இலங்கையில் பௌத்த, இந்து மதங்களிடையே சில ஒற்றுமைகள் காணப்படுவது போன்று அந்நாட்டிலுள்ள பிறமதங்களிலும் இது தென்படுகின்றது என்பதனையும் அறிய முடிகின்றது. அவர்கள் வேற்றுமையில் ஒற்றுமைகாண்கின்றனர். இதனை இந்தோனேஷிய மக்கள் விடயத்தில் முழுமையாகக் காணலாம். ஒவ்வொரு மதத்திற்கும் இந்தோனேஷிய அரசாங்கமானது பூரண பாதுகாப்பும் சுதந்திரமும் அளிக்கின்றது. எனவே இவை சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளப்படுத்துவதற்காக அரசியல் யாப்பிலும் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தோனேஷியாவில் உள்ள ஒருபெரிய கிணற்றை 'லொபாங் புஜா' என்று அழைப்பார்கள். அந்நாட்டு மொழியில் அதற்கு முதலைக்கிணறு என்று பெயர். அதன் பக்கத்தில் ஏழு நினைவுத் தூபிகள் உள்ளன. அதன் அடியில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. 'தேசபக்தி, பஞ்சசீலக் கொள்கை தொடர்பான உணர்வுகளை அக்கிணற்றில் போட்டு அமுக்கி மூடுவதினால் அழித்துவிட முடியாது என்பதாகும்.

வடசுமாத்திராத் தீவில் வாழும் மக்களிடம் விநோதமான பழக்கம் ஒன்று உள்ளது. அவர்கள் கோப்பியை அருந்துவதைக் விடுத்து அதனைச் சாப்பிடுகிறார்கள், இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் வாழும் மக்கள் அனேகர் காலையில் கோப்பி குடிக்கின்றனர், ஆனால் இதனை சில இடங்களில் 'கோப்பி சாப்பிடுவது' என்று கூறுவது உண்டு. ஆனால் வட சுமாத்திரா மக்கள் உண்மையில் கோப்பி சாப்பிட்டுத்தான் செல்கின்றனர். அதாவது கோப்பி விதைகளைப் பதத்திற்கு வறுத்துக், தூளாக்கிப் பின் போத்தல்களில் அல்லது டப்பிகளில் சேகரித்த பின் கோப்பித் தூளை மிகவும் விருப்பத்துடன் தேக்கரண்டியால் அள்ளிச் சாப்பிடுவார்கள். ஒருசிலர் மட்டும் கோப்பிப் பொடியுடன் சிறிது நீரைச்சேர்த்துப் பிசைந்து சாப்பிடுவதும் உண்டு.

இந்தோனேஷியாவில் வாழ்கின்ற கிராமப்புற மக்கள் தமது கிராமத்தைத் 'தேசம்' என்று கூறிக்கொள்வதில் மனத்திருப்தியும், பெருமையும் அடைகின்றனர். பக்கத்துக்கிராமத்துக்கு 'சென்றுவருகின்றேன்' என்று கூறுவதற்குப்பதிலாக 'அடுத்த தேசத்திற்குச் சென்று வருகின்றேன்' என்றுதான் சொல்வார்கள்.

எமது வீட்டில் ஒருவர் மரணித்துவிட்டால் அதனை ஒரு துயரம் தரக்கூடிய நிகழ்வாகக் கருதி மிகவும் வேதனைப்படுகின்றோம். ஆனால் இந்தோனேஷிய மக்களில் ஒரு சாரார் மரணத்தை மகிழ்ச்சி தரக்கூடிய சம்பவமாகக் கருதுகின்றனர்.

மரணம் என்பது ஆத்மாவுக்குக் கிடைத்த ஒரு 'விடுதலை' ஆகவே சாவுக்கு ஏன் கவலைப்பட வேண்டும்? என்பது இந்தோனேஷிய மக்களின் ஒரு குழுவினரது வாதம் ஆகும். அங்குள்ள மக்கள் இறந்தவர்களின் உடலை உடனே தகனம் செய்து விடுவதில்லை. முதலில் தற்காலிகமாக ஓர் இடத்தில் புதைத்துவைத்துவிடுவார்கள். அதன் பிறகு பஞ்சாங்கம் பார்த்து ஒரு நல்ல நாளைத் தேர்ந்தெடுத்தபின் புதைத்த உடலை மீண்டும் தோண்டி எடுத்து தகனம் செய்துவிடுவார்கள். இறந்த வீடு திருமண வீடு போன்று வெகு விமரிசையாக நடத்தப்படுகின்றது. அதற்கு பல செலவுகளும் உண்டாகலாம். ஆண்களும், பெண்களும் ரம்மியமான ஆடைகளை அணிந்து உலாவுவார்கள். விழா நடைபெறும் குடும்பத்தினருக்கு அன்பளிப்பு வழங்குவது மரபாகும். நடனம், நாடகம், இசைக்கச்சேரி போன்ற கேளிக்கை நிகழ்ச்சிகளும் இரவு வேளைகளில் தொடர்ந்து நடத்தப்படுகின்றன.

இந்தோனேஷியாவுக்கு மிக அருகில் அமைந்துள்ள பாலித்தீவில் அழகான சுற்றுலா மையங்கள் உள்ளன. பாலித்தீவுக்கு வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் வருகை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமேயுள்ளது. பாலித்தீவில் உள்ள இளம்பெண்கள் ஆண்களுடன் நெருங்கிப் பழகுகின்ற போதிலும் ஒழுக்கக் கேட்டிற்கு எந்தவிதத்திலும் இடமளிப்பதில்லை. பெரும்பாலும் அவர்கள் காதலித்தே திருமணம் செய்து கொள்கின்றனர். காதலுக்கு பெற்றோர் பச்சைக் கொடிகாட்டினாலும் இருவரும் பெற்றோருக்குத் தெரியாமலே ஊரை விட்டு ஓடிப் போய்விடுவார்கள். பின்னர் பெண்ணின் பெற்றோருக்கு தாங்கள் இருக்கின்ற விடுதியின் அல்லது நண்பர்களின் வீட்டு முகவரியை நம்பிக்கையான நபர்கள் மூலம் அறிவிப்பார்கள். பெண்வீட்டார் உடனே திருமணத்திற்கு சம்மதம் தெரிவிப்பதில்லை. தங்களது மகள் ஓடிப்போனது பற்றிக் கவலைப்படுவது போலவும், பெண்ணைத் தேடுவது போலவும் பாசாங்கு செய்து கொண்டு மிக இரகசியமாக காதலர்கள் தங்குமிடத்தைச் சென்றடைவார்கள். இவை அனைத்தும் ஒரு சம்பிரதாயம்தான். பின்னர் பெண்ணின் பெற்றோர் திருமணத்தை எளிய முறையில் நிறைவேற்றி வைப்பார்கள்.

ஒழுக்கத்திற்கு முதலிடம் கொடுக்கும் பாலித்தீவு மக்களிடையே உள்ள அதிசயிக்கத்தக்க விழுமியங்கள் சுற்றுலாவாசிகளைக் கூட வியக்கவைக்கின்றது.

**அருணா தருமலிங்கம், வந்தாறுமூலை கிழக்கு, செங்கலடி.**


## டோகா – கட்டாரில் 100 வெற்றிடங்கள்

துப்புரவுத் தொழிலாளர்களுக்கான 100 வேலைவாய்ப்புகள்.
மாதாந்த வேதனம் 800 றியால்கள்.
இலவச தங்குமிட வசதிகள் மற்றும், மருத்துவ வசதிகள். (உணவுக் கொடுப்பனவாக 150 றியால்கள் வேதனத்தில் உள்ளடக்கப்படும்.)
வாரமுதும் 6 நாட்கள்நாளொன்றுக்கு 8 மணிநேர வேலை.
ஒப்பந்த காலம் 2 வருடம். தகுதிகாண் காலப்பகுதி 6 மாதங்கள்.
ஒப்பந்த முடிவில் திரும்பி வர விமானப்பயணச்சீட்டு வழங்கப்படும்.
(அரசாங்க கட்டணங்கள் மட்டும்.)

**SERENDIP TRAVELS**
செரன்டிப் டிராவல்ஸ்
இல. 97, ஜாவத்தை மருத்துவ வீதி, கொழும்பு10
தொடர்பு 072 777 0088 / 072 777 0099
தொலைபேசி 018 579 331/2










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவம்

# கர்ப்ப கால உணவு முறைகள் என்ன?

**கேள்வி : முகப்பருவால் ஏற்படும் கரும்புள்ளிகளைப் போக்குவது எப்படி?**

பதில் : இரண்டொரு வருடமாக இருப்பின் கீழுள்ள சிகிச்சை பயன் தரும். 15, 16 வயது வரை பச்சைப் பயறு, வெந்தயம் போதும். அதற்கு மேல் உள்ளவர்கள் அடுத்த கடைச் சரக்கும் பயன்படுத்தலாம்.



பச்சைப் பயறை இயந்திரத்தில் அரைத்து வைத்துக் கொண்டு, கடையில் கிடைக்கும் மரமஞ்சள், கஸ்தூரி மஞ்சள், கிழங்கு மஞ்சள் (பெண்களுக்கு மட்டும் கிழங்கு மஞ்சள் சேர்க்கலாம்) பறங்கிப் பட்டை, கோரைக்கிழங்கு, அதிமதுரம், நன்னாரி வேர், கார்போகரிசி, வெட்டிவேர், அறுகம்புல் வேர் இவைகளை உலர்த்தி இடித்து, சன்னமாகத் தூள் செய்து அல்லது இயந்திரத்திலும் செய்து கொள்ளலாம். இதில் 1 /2 ஸ்பூன் பச்சைப் பயறுத் தூள், 1/2ஸ்பூன் வெந்தயத்தூள் இவற்றைக் கையில் எடுத்துக் கொண்டு 1/4 ஸ்பூன் தண்ணீரில் குழைத்து முகத்தில் அப்பி 1-2 மணிநேரம் கழித்து அலம்பி விடவும். தினம் காலைமாலை செய்து வரவும்.

முகப்பவுடராக வெறும் சந்தனப்பவுடர் மட்டுமே பூசலாம். இவை வேர்வையை இழுத்து உலர விடும். முகப்பவுடர் வேர்வைச் சுரப்பிகளை அடைத்து இருப்பதே முகப்பருவுக்கு காரணமாகும். கிள்ளப்பட்ட முகத்தின் மேல் பகுதியில் உள்ள புறணி (தோல் பாதுகாப்புக்கான மெல்லிய தோல்) நீங்கி விட்டால் அவ்விடம் சோப்பிலுள்ள குறைந்த பட்ச காஸ்டிக் சோடா (அசிட்) சிறு எரிச்சலைக் கொடுத்து அவ்விடம் சிவந்து, கறுத்து கரும்புள்ளி ஏற்படுகிறது. ஆகவே சோப்பு முகத்திற்கு போடுதலை தவிர்க்கவும்.

மேற்படி 3 தூளும், உடலுக்கும் பயன்படுத்த உடல் பொலிவுறலாகும். 15 நாளில் முகம் பளபளக்கும். சைனிங் (shining) முகத்தில் கவர்ச்சியும் பொலிவும் ஏற்படும். கண்ட கிரீம்களை பயன்படுத்துவதைவிட 'புனுகு சட்டம்' என்ற மருந்து நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும். நல்ல வாசனை உள்ளது. இரவில் இதை முகப்பருவின் மீது தடவிவர, பயன்தரும்.

**கேள்வி: கர்ப்ப காலத்தில் மேற்கொள்ள வேண்டிய உணவு முறைகள் எவை?**

பதில் : பொதுவாக, கர்ப்பகாலத்தில் நல்ல சத்துள்ள, எளிதில் ஜீரணமாகக் கூடிய உணவு வகைகளைச் சாப்பிட வேண்டும். தினமும் குறைந்தது 2,500 முதல் 3000 கலோரி வரை இவர்களுக்கு சக்தி தேவைப்படும் என்பதால், அந்த சக்தியைத் தரக் கூடிய உணவை உண்ண வேண்டும். மிகவும் குண்டான பெண்கள் இந்த அளவை விட குறைவான உணவை உண்டால் போதுமானது.



பொதுவாக உணவில், சிறிதளவு உப்புச்சத்தை (Salt Restricted Diet) குறைத்துக் கொள்வது நல்லது. அதிகளவு புரோட்டீன், விற்றமின் நிறைந்த உணவை உண்ண வேண்டிய அதே வேளையில் கொழுப்பு சம்பந்தப்பட்ட உணவையும் குறைத் திட வேண்டும். தினமும் காலையிலும், மாலையிலும் ஒரு தம்ளர் சுத்தமான பால் அருந்துவது நல்லது. அதிக வைட்டமின் பழங்கள், கீரை வகைகள், புதிய காய்கறிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். மீன், முட்டை, அரிசி வகை உணவுகள், இறைச்சி, தயிர் முதலியவை நல்ல ஊட்டத்தைத் தரும் உணவுகளாகும்.

பெரும்பாலான, பெண்களுக்கு கர்ப்பகாலத்தில் இரத்தக் குறைவு, இரத்தச் சோகை இருப்பதால், 200மி.கி. இரும்புச்சத்து 0.5மி.கி. (போலிக் அமிலம்) வைட்டமின் அடங்கிய மாத்திரையை - தினமும் ஒன்று வீதம் சாப்பிட்டு வரலாம்.

✱

# குழந்தைகளின் மன அழுத்தம் ஏற்படுவதற்கான காரணங்கள்

குழந்தைகளின் மன அழுத்தத்தை அதிகமாக்கும் காரணங்கள் பலப்பல. தாங்களுக்கு ஏற்பட்ட மனஅழுத்தத்தை ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு விதமாக வெளிப்படுத்துவார்கள். சில குழந்தைகள் முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு யாருடனும் பேசாமல் உம்மென்று இருப்பார்கள். சில குழந்தைகள் தாங்கள் மனஅழுத்தத்தைக் கோபமாகவும், ஆத்திரமாகவும் வெளிக்காட்டுவார்கள். சில குழந்தைகள் எப்போதும் கவலையோடு காணப்படுவார்கள். இதற்கெல்லாம் காரணங்கள் இருக்கலாம் என்று குழந்தை மனநல மருத்துவர்கள் கூறுகின்றனர்.

**உதாரணமாக:**

✱ குடும்பத்தில் தொடர்ந்து நடைபெறும் குழப்பங்கள், வாக்குவாதங்கள்.

✱ பெற்றோர்கள்,மற்றும் உறவினர்களுடன் குழந்தைக்கு உறவில் ஏற்படும் விரிசல், நட்பில் உண்டாகும் மனவருத்தம்.

✱ குடும்பங்கள் பிரிந்து விடுதல்,மிக நெருக்கமானவர்களின் பிரிவு அல்லது செல்லப் பிராணிகளின் இறப்பு, பெரிதாக ஏற்படும் இழப்புக்கள். அல்லது அதிர்ச்சி ஏற்படுத்திய நிகழ்ச்சிகள்.

✱ அடிக்கடி ஏற்படும் உடல்நோய்கள், தொற்று நோய்கள்

✱ குழந்தைகளை மற்றவர்கள் தவறாகப் பயன்படுத்துதல்,மற்ற குழந்தைகளின் முரட்டுத்தனம்,பிடிவாதம், பள்ளியில் அல்லது வெளி வட்டாரத்தில் தொடர்ந்து ஏற்படும் தோல்விகள்.

✱ பெற்றோரைப் பாதிக்கும் மனஉணர்வுகள் சில நேரங்களில் குழந்தையையும் பாதிக்கும்.

இது போன்ற காரணங்களினால் குழந்தைகள் மன அழுத்த நோய்க்கு ஆளாகி அவதிப்படுவார்கள். சில குழந்தைகளுக்கு இது பரம்பரையாகவும் வரலாம். அத்தகைய குழந்தைகள் மேலே காட்டப்பட்ட காரணங்களுள் ஏதேனும் ஒன்று ஏற்பட்டால் கூட அதை ஏற்றுக்கொள்ளவோ அல்லது சமாளிக்கவோ முடியாமல் அதிகம் திணறிப் போய் விடுவார்கள். வெகு விரைவில் மனஅழுத்த நோய்க்கும் ஆளாகி விடுவார்கள்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

மனஅழுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் பெற்றோருடன் பேசுவதற்கு விரும்பமாட்டார்கள். இருந்த போதிலும், அவர்களுடன் நேரடியாகவோ அல்லது அவர்கள் மிகவும் விரும்புகின்ற நண்பர்கள் அல்லது உறவினர்கள் மூலமாகவோ பேசுவது நன்மைகளை ஏற்படுத்தும். இவ்வாறு பேசுவதன் மூலமாக அவர்களுக்கு மனஅழுத்தத்தை உண்டாக்கியது எது என்பதை அறிவதற்கு வாய்ப்பு ஏற்படும். அவர்களுடன் உரையாடலில் ஈடுபடும் நேரத்தில் சில விஷயங்கள் மிகவும் முக்கியமானவை.

**உதாரணமாக:**



அவர்கள் சொல்வதை மிகவும் கவனமாகக் கேட்க வேண்டும். இது சொல்வதற்கு மிகவும் எளிது. ஆனால் செயல்படுத்துவது கடினம், அவர்கள் மனத்தில் இருப்பதைப் பேசிக்கொண்டு இருக்கும் போது நடுவே குறுக்கிடுவது. எனக்கு அப்பவே தெரியும் என்பது, அது தான் நீ எப்போதும் செய்யும் தப்பு என்பது, சரியான முட்டாள் நீ என்று அதட்டுவது போன்ற வார்த்தைகளைக் கொட்டக் கூடாது, அவர்கள் நினைப்பதை அவர்களது சொந்த வார்த்தைகளின் மூலமாகவே வெளிப்படுத்த அனுமதி அளிக்க வேண்டும். அவர்கள் சொல்லி முடிக்கும் வரையில் பொறுமையாகக் காத்திருக்க வேண்டும், அவர்கள் பேசுவதைக் கொண்டு எப்படியெல்லாம் கற்பனை செய்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். குழந்தைகள் சொல்லும் விஷயத்தை தெளிவாகப் புரிந்துகொள்ள அவ்வப்போது சிறு கேள்விகள் கேட்கலாம். ஆனால், அது அவர்கள் பேசுவதை தடுப்பதாகவோ, எண்ணத்தைத் திசைதிருப்புவதாகவோ இருக்கக் கூடாது, நம்பிக்கையூட்டும் வார்த்தைகளைச் சொல்லி அவர்களுக்கு ஊக்கத்தை ஏற்படுத்த வேண்டும், நான் உன்னை ஒரு வாரமாகக் கவனித்து வருகிறேன். நீ மிகவும் கவலையோடு இருக்கிறாய் என்று சொல்ல வேண்டும். இவ்வாறு சொல்வதன் மூலமாகப் பெற்றோர் தன்னைக் கவனித்து வருகிறார்கள், நனது நலனில் அக்கறை காட்டுகிறார்கள் என்பதை குழந்தைகள் புரிந்து கொள்வார்கள்.



இந்த எண்ணம் அவர்கள் மனஅழுத்தத்தில் இருந்து விடுபட பெரிதும் உதவும். இவ்வாறு அவர்களுடன் கலந்துரையாடி மனஅழுத்தத் திற்கான காரணத்தை அறிந்து கொண்ட பிறகு நீங்கள் அதை போக்குவதற்கான செயல்களில் ஈடுபட வேண்டும்.

**மன அழுத்தம் போக்கும் வழிமுறைகள்:**

மனஅழுத்தத்தில் இருந்து அவர்களை விடுவிப்பதற்காக நீங்கள் செயல்படுவதை அவர்களுக்கு முதலில் உணர்த்துங்கள், இதன் மூலமாக அவர்களுடைய சரியான ஒத்துழைப்பை நீங்கள் பெறமுடியும்.குழந்தைகள் அடிக்கடி தாங்களை குறைகூறிக் கொண்டால், அவ்வாறு நினைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெளிவுபடுத்துங்கள். தேவைப்பட்ட மாறுதல்களை உண்டாக்குங்கள். உதாரணமாக: வெவ்வேறு இடங்களுக்கு அழைத்துச் செல்வது.புதிய விளையாட்டுக்களில் ஈடுபடுத்துவது. வளர்ப்புப் பிராணிகளைப் பரிசளிப்பது போன்றவை. தாங்களுக்குத் தேவையான பாதுகாப்பும், உதவியும் கிடைப்பதை உணர்ந்ததும் குழந்தைகள் மனஅழுத்தத்தில் இருந்து விடுபடுவார்கள். பெற்றோரின் மரணம், விவாகரத்து, எதிர்பாராத அதிர்ச்சி போன்றவைகளினால் மனஅழுத்த நோய்க்கு ஆளான குழந்தைகள் நீண்ட கால சிகிச்சைக்குப் பிறகே நோயிலிருந்து விடுபடுவார்கள், குழந்தைகளுக்கு எந்த உணர்வு மனஅழுத்தத்தை அதிகமாக்குகிறது, எந்த உணர்வு மனதை மகிழ்ச்சியாக வைத்திருக்க உதவுகிறது என்பதைத் தெளிவாகக் கற்றுக்கொடுங்கள். தாங்களுக்கு ஏற்பட்டுள்ள மன அழுத்தத்தை எப்படி வெளிப்படுத்துவது என்பதை அவர்களுக்குச் சொல்லிக் கொடுங்கள். பெண் குழந்தைகள் அழுவதன் மூலமாகத் தாங்கள் மனதை லேசாக்கிக் கொள்வார்கள். ஆண் குழந்தைகளுக்கு இதை நாம் சொல்லித் தருவது அவசியம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவனைக் கட்டுக்குள் வைத்திருக்க வழி!



## பித்தன் பதில்கள்


ப. இளவரசன்,
மன்னார்.



**கேள்வி:** நூறு வயது வரை ஆரோக்கியமாக வாழ்வது எப்படி? என்ற தலைப்பிலான புத்தகமொன்றை வாசித்தேன். வாசித்துப் பார்க்க விரும்பினால் உங்களுக்கும் அனுப்பி வைக்கட்டுமா?

**பதில்:** வேண்டவே வேண்டாம். தப்பித்தவறி எனது மாமியாரின் கண்களில் பட்டுவிட்டால், என் பாடு ஆதோகதிதான். எப்போ தடா கிழடு மண்டையைப் போடும் எனக் காத்திருக்கும் என்னிடம் போய் ஏன் வம்புக்கு வருகிறீர்?

ம. ஆ. வேலாயுதம்,
மட்டக்களப்பு.



**கேள்வி:** திருமண வாழ்க்கை குறித்த உங்கள் கருத்தென்ன பித்தரே?

**பதில்:** ஆரம்பத்தில் கணவன் மனைவியை ஏசினால் மனைவி மௌனம் காப்பாள். ஓரிரு வருடம் போக மனைவி ஏசுவதை கணவன். காதில் வாங்கிக்கொள்ள மாட்டான். இன்னும் சில காலம் செல்ல மனைவியும் கணவனும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபடுவதை அண்டை அயலவர் பார்த்தும் கேட்டும் ரசிப்பர்.

க. ஆனந்தராணி,
கிளிநொச்சி.

**கேள்வி:** தாலி பெண்ணுக்கு வேலி என்ற பழமொழி எந்த அளவுக்கு யதார்த்தமானது பித்தரே?

**பதில்:** திருமணமான இளம் பெண்கள் பலர் வெளியில் செல்லும் போது தாலி அணிந்து செல்வதற்கு விருப்பம் காட்டாத இன்றைய நிலையிலும், ஒரு பெண்ணின் கழுத்தில் தாலியைக் கண்டால் காளை மாடுகள் முட்டி மோத நினைக்காமல் விலகிச்செல்ல முனைவதையும் காணுகிறோமல்லவா?

ம. விஜயானந்தன்,
திருகோணமலை.




**கேள்வி:** காதல், காமம் இரண்டுக்குமான உமது வியாக்கியானம் என்ன பித்தரே?

**பதில்:** சுருங்கச் சொல்வதானால் காதல் கட்டுமீறாத ஆறு மற்றையது அணை கடக்கும் வெள்ளத்துக்கு ஒப்பானது.


பி. இந்திரன்,
உடுவில்.

**கேள்வி:** கல்லடிக்குத் தப்பினாலும் கண்ணடிக்குத் தப்ப இயலாது என்கிறார்களே?

**பதில்:** உமது கேள்வியிலிருந்தே உமது பருவம் புரிகிறது. கல்லடிபட்டால் மாற்றுவதற்கு மருந்துண்டு. கண்ணடிக்கு மருந்து தேடுவது சுலபமானதல்ல.

மஞ்சுளா தேவராஜன்,
பதுளை.

**கேள்வி:** அண்மையில்தான் திருமணம் செய்து கொண்ட நான் எப்போதுமே என் சொல்லைக் கேட்டு நடப்பவராக என் கணவரை வைத்துக் கொள்ள என்ன செய்ய வேண்டும் பித்தரே?




**பதில்:** அதற்குத்தான் இருக்கவே இருக்கிறதே அரியதொரு மருந்து தலையணை மந்திரம் புதுமாப்பிள்ளையைக் காலைச் சுற்றிச் சுற்றி வர வைக்கும்.

ப. மங்கையர்க்கரசி,
வல்வெட்டித்துறை.

**கேள்வி:** பஸ் தரிப்பிடத்தில் பஸ்ஸிற்காகக் காத்து நின்ற போது பக்கத்தில் நின்ற இளம் பெண்ணொருத்தி உதட்டில் விரல் வைத்து விசிலடித்துத் தூரத்தில் இளம் பெண்ணை அழைத்ததைக் காணநேர்ந்தது.

**பதில்:** இன்றைக்கு யாழ்ப்பாணத்து இளசுகளின் போக்கைப் பார்த்தால் எதுதான் நடக்கமாட்டாது என்று எண்ணத் தோன்றுகிறது.

யோ. விக்டர்,
மன்னார்.

**கேள்வி:** சனிமாற்றத்தில் உமது ஆயுள் பலம் குறித்து ஜாதகம் பார்த்த துண்டா?



**பதில்:** மனைபோல் மனையாள் இருக்கும் வரை எனக்கு வீட்டில் ஆள்பலம் உண்டு. ஆயுட்பலம் குறித்து ஆண்டவன் ஒருவனே அறிவான். அது சரி உமது கேள்வியில் மிரட்டும் பாணி இழையோடுவதாகத் தோன்றுகிறதே. எனது ஆள்பலம் குறித்து எனக்கு அதீத நம்பிக்கை உண்டு.

---

## சொற்சிலம்பம் - போட்டி இல: 497

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | | 10 | | ■ | | ■ |
| | ■ | 11 | | ■ | 12 | | 13 |
| ■ | 14 | ■ | 15 | 16 | | ■ | |
| 17 | | 18 | | | ■ | 19 | |
| 20 | | | | ■ | 21 | | |
| 22 | | | ■ | 23 | | | |

அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### மேலிருந்து கீழ்

01. இனிமையானது
02. விதம்
03. கணவன் – மனைவி
04. ஒரேயளவான
05. தலையில் தாங்கி ஆடுவது
06. புசி
08. குத்துவது இப்படி
10. வரும்படி
12. தாங்கள்
13. மகன் / மைந்தன்
14. விண்ணப்பிக்கும் நாள்
16. தமது
17. அனுப்பால் வருவது
18. வழமையாய் வருவது
19. அசைய
21. ஆறாவது ஒருமை உருபு

### இடமிருந்து வலம்

01. இந்தியா
04. சோறு
07. வேள்வி
08. முருகன்
09. நிகழ்ந்த விடயம்
11. செல்வம்
12. கயிறு
15. திங்கள்
17. ஆழ் மனது
19. ஆறு
20. தினசரி முகத்தில் மழிப்பது
21. எழுத்துக்களின் ஆரம்பம்
22. பூட்டான் தலைநகர்
23. மகாபாரதத்தில் ஒரு பாத்திரம் இவன்

### சொற்சிலம்பம் போட்டி இல. 497

சொற்சிலம்பம் 497 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2011 ஆண்டு டிசம்பர் 11ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் டிசம்பர் 18 ஆம் திகதிய சுடரொளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் முலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

*அனுப்பவேண்டிய முகவரி*
**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.**

### போட்டி இல. 494 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு** – திருமதி. இளநிலா கிஸ்ணானந்,
31/2, மாரியம்மன் கோவில் வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.

**2 ஆம் பரிசு** – ஏ. மேரி நிரோஷினி,
C/o. எம். சி. ஜெகநாதன்.
இல. 11, விஜேநந்தா வீதி, கொழும்பு-13.

**3 ஆம் பரிசு** – ச. பாலசூரியன்,
இல. 16/5, குடியிருப்பு, வவுனியா.

## சொற்சிலம்பம் போட்டி இல. 493 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01. தூயசாந்தி, 02. மருவி, 03. தவித்தல், 04. நடை, 05. காற்றல், 06. சுதன், 08. தரித்திரம், 10. திரி, 13. தகும், 15. கிழக்கு, 17. தம்பதி, 18. ஆரம், 19. பசுமை, 20. சாம, 21. கட.

**இடமிருந்து வலம்**

01. தூமதும், 04. நகாசு, 07. கருவி, 08. தருந்த, 09. சாவித்திரி, 11. தன், 12. தரித்தல், 14. திகில், 16. திரு, 18. ஆரம்பம், 20. சக்கரம், 22. சுப, 23. மகுடம், 24. அமைதி

### பாராட்டுப் பெறுவோர்

**(1) மூ. முத்துராஜா,**
திகிரிலேன், தும்பளை, பருத்தித்துறை.

**(2) எம். ஜே. பெர்னாண்டோ,**
இல. 30/3, சென்லூசியாஸ் வீதி, கொழும்பு -13.

**(3) திருமதி. பொற்செல்வி ருத்ரா,**
இல. 75, உடையார் றோட், கல்முனை- 02.

**(4) கே. அரசேஸ்வரன்,**
கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

**(5) பொ. நமசிவாயம்,**
பண்டிதமணி இல்லம், கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

**(6) திருமதி. பா. செல்வராணி,**
பெண்கள் கூட்டு வீடுதி, உள்வட்டவீதி, வவுனியா.

**(7) கே. கமால்தீன்,**
புன்னக்குடா வீதி, ஏறாவூர்- 3.

**(8) எஸ். என். மணி,**
இல. 106, மஹிந்த மாவத்தை, ஹாவளபிய,
நுவரேலியா.

**(9) கே. இராஜகோபால்,**
அடைக்கலம் தோட்டம், கந்தசுவாமி கோயிலடி,
வட்டுக்கோட்டை.

**(10) ரா. உஷாந்தினி,**
ஆண்டு 8, ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(அ)

# சிறுவர் சுடர்



படத்தில் கொடுக்கப்பட்டுள்ள வட்டங்களை 30 முதல் 54 வரையுள்ள எண்களால் நிரப்புங்கள். ஆனால் நேர்கோடாகவோ செங்குத்தாகவோ கூட்டினால் அவற்றின் கூட்டுத் தொகை 150 வரவேண்டும்.

**இரண்டு படத்துக்கும் உள்ள ஏதேனும் நான்கு வித்தியாசங்களை வட்டமிட்டுக் காட்டுங்கள்!**




## நடப்பது எல்லாம் நன்மைக்கே



ஒரு நாட்டின் அரசன். அந்நாட்டு அமைச்சர் எது நடந்தாலும் எல்லாம் நன்மைக்கே என்று சொல்வதை வழமையாகக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் அரசரும் அமைச்சரும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது அரசன் மாம்பழம் ஒன்றைக் கத்தியால் அறுத்தான். தவறுதலாகக் கத்தி அவனின் கைவிரலை அறுத்து விட்டது. இரத்தம் வெளியேறி வலி தாங்க முடியாமல் அரசன் துடித்தான்.

வழக்கம் போல் அமைச்சர், அரசே! எல்லாம் நன்மைக்கே என்றார். ஒவ்வொரு காரியமும் நமது நன்மைக்குத்தான் நடக்கிறது என்ற உண்மையைத்தானே சொல்வேன் என்றார்.

இதைக் கேட்டுக் கோபமடைந்த அரசன், நான் விரல் வெட்டுப்பட்டுத் துடிக்கிறேன், எல்லாம் நன்மைக்கே என்று சொல்கிறாய்? காவலர்களே அமைச்சரைச் சிறையில் கொண்டு போய் அடைத்து விடுங்கள் என்று உத்தரவிட்டான்.

காவலர்களும் அமைச்சரை அரசனின் உத்தரவுப்படி சிறையில் கொண்டு போய் அடைத்து வைத்தனர்.

அப்போதும் அமைச்சர், எல்லாம் நன்மைக்கே என்றார்.

நாட்கள் பல கடந்தன.

வேட்டையாடுவதில் ஆர்வமுடைய அரசன் தன்னந்தனியாகக் காட்டிற்குச் சென்றான்.

அங்கே மலைவாசிகள் காளிக்குப் பலி கொடுப்பதற்காக ஒருவனைத் தேடிக் கொண்டிருந்தனர். அவர்களிடம் சிக்கிக் கொண்டான் அரசன்.

அங்கு வந்த கோவில் பூசாரி பலி கொடுப்பதற்காக மலைவாசிகள் கொண்டு வந்த அரசனை முழுமையாகச் சோதித்தான்.

பின்பு, காளிக்கு எந்தக் குறையுமில்லாதவனை மட்டுமே பலியிட முடியும். இவனோ கைவிரல் பாதியாக உள்ளான். இவனை விட்டு விடுவோம், என்றான்.

விடுதலை பெற்ற அரசன் அரண்மனைக்கு வந்தான். உடனடியாக அமைச்சரை விடுவிக்க உத்தரவிட்டான்.

நடந்ததை எல்லாம் அமைச்சரிடம் சொல்லி அமைச்சரே, கைவிரல் வெட்டுப்பட்டதால் உயிர் பிழைத்தேன். அன்று எல்லாம் நன்மைக்கே என்று நீர் சொல்லியதன் உண்மை உணர்ந்தேன். உம்மைச் சிறையில் அடைத்ததற்காக வருந்துகிறேன், என்றான்.

அரசே என்னைச் நீங்கள் சிறையில் அடைத்ததும் நன்மைக்கே. எப்பொழுதும் உங்களைப் பிரியாமலிருக்கும் நான், என்னைச் சிறையிலடைக்காமல் இருந்திருந்தால் உங்களுடன் காட்டிற்கு வந்திருப்பேன். அந்த மலைவாசிகள் என்னையும் உங்களுடன் சிறைப்படுத்தி இருப்பார்கள். விரல் வெட்டுப்பட்டதால் நீங்கள் உயிர் பிழைத்தீர்கள். எந்தக் குறையும் இல்லாத என்னை அவர்கள் பலியிட்டு இருப்பார்கள். நீங்கள் என்னைச் சிறையில் அடைத்ததால் நான் உயிர் பிழைத்தேன். எல்லாம் நன்மைக்கே என்றார் அவர்.

**நடப்பது எல்லாம் நன்மைக்கே என்று நினைத்தால் துன்பம் தரக்கூடிய செயல் எதுவும் இல்லை**

## என்ன செய்யும் (2) சின்ன மைனா?





தொடரும்...

(அ) விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 32 | | 45 | | 30 | | 43 |
| | 46 | | 53 | | 51 | |
| 42 | | 31 | | 41 | | 36 |
| | 54 | | 49 | | 47 | |
| 39 | | 34 | | 44 | | 33 |
| | 50 | | 48 | | 52 | |
| 37 | | 40 | | 35 | | 38 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்கரை மணலில் விசித்திரமான சிற்பங்கள்






அவுஸ்திரேலியாவின் மெல்போர்னில் உள்ள பிறாங்ஸ்ரன் கடற்கரையில் உலகமெங்கிலுமுள்ள சர்வதேச மணல் சிற்பக் கலைஞர்கள் அவுஸ்திரேலியக் கலைஞர்களுடன் ஒருங்கிணைந்து பூச்சியினத்தை உருப்பொருளாகக் கொண்டு நடத்தப்பட்ட கண்காட்சியொன்றில் மணலைக் கொண்டு உருவாக்கப்பட்ட மணற்சிலைகளையே இங்கு காண்கிறீர்கள்.














## உலக நீரிழிவு மாதத்தை முன்னிட்டு விஷேட சலுகை.

**உங்கள் குருதியில் சக்கரையின் அளவை கணித்துக்கொள்ள ப்ரொடிஜி ஓட்டோகோட் மற்றும் ப்ரொடிஜி பொக்கட்**

இலங்கையில் கோர்ட் முறை இல்லாமல் ஒரு துளி இரத்தத்தில் உங்கள் சக்கரையின் அளவை கணிக்கும்




இந்த விளம்பரத்தை எந்தவொரு பிரதான பாமசி, Arpico மற்றும் Laugfs சுப்பர்மார்கட்களில் வழங்கி இந்த சலுகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

எந்த ஒரு பழைய கருவியையும் கொடுத்து புதிய கருவியை பெற்றுக்கொள்ளலாம்

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

மேலதிக தகவல்களுக்கு இப்போதே அழையுங்கள் 0777 427827



PRODIGY AutoCode
Handy Easy Fast
Rs. ~~5950/=~~
Rs. 4950/=

PRODIGY Pocket
Small Fast Convenient
Rs. ~~3950/=~~
Rs. 2950/=



கேளுங்கள்

விஷேட சலுகை 30ம் திகதி நவம்பர் 2011 வரை மட்டுமே.

Imported and Marketed by Service for Health Emar EMAR PHARMA (PVT) LTD.


No.23, Anderson Road, Kalubowila, Dehiwela.
Ter.:2810913/4 Fax: 2768475 E-mail: emar79@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கின்னஸில் இடம் பிடித்த பூக்கள் நிறைந்த பூலோக சொர்க்கம்!





பூலோகத்தின் சொர்க்கமா இது என்று வியக்கும் அளவுக்கு இருக்கிறது இந்தப் பூங்கா... **Al Ain Paradise** என்று அழைக்கப்படும் இந்த பூந்தோட்டங்களின் நகரம் ஐக்கிய அரபு இராச்சியத்தில் அமைந்துள்ளது. இங்கு 2,426 ஜாடிகளில் பூக்கன்றுகள் தொங்குகின்றன. இது இரண்டு தடவைகள் கின்னஸ் சாதனைப் புத்தகத்திலும் இடம் பிடித்துள்ளது.


லொறி, டிப்பர், ட்ரக் வாகனங்களுக்கு

# லீசிங் சுமை குறைக்கப்பட்டுள்ளது



பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத லொறி, டிப்பர், ட்ரக் கனரக வாகனங்களை மிக இலகுவான முறையில் குறைந்த வட்டியில் லீசிங் அடிப்படையில் பெற்றுக் கொள்ள சென்ட்ரல் பினான்ஸ் நிறுவனத்திற்கு வாருங்கள்.




சென்ட்ரல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி

உடன் தொடர்புகளுக்கு 0112315215

கொழும்பு (011) 2300555 கண்டி (081) 2227000 அல்லது அருகிலுள்ள சென்ட்ரல் பினான்ஸ் கிளை அலுவலகத்திற்கு வாருங்கள் வெப்.தளம். www.cf.lk & www.cfautomart.com

# TIEFSTE PREISE!




Möbel Ferrari

HINWIL

Tel. 044 931 20 40
info@moebel-ferrari.ch
moebel-ferrari.ch

**Öffnungszeiten**
Montag-Freitag
9.00-20.00
Samstag
9.00-18.00

0.0% Direkt Finanzierung

Möbel zum Schlafen, Essen und Wohnen. Benvenuti a Hinwil.



இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா ... பிறைஸ் ஸ்தாபனத்தினால் 2011. நவம்பர் 27 ஆம் திகதி வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org